கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(02.12.2018 - 02 மார்கழி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 09, கதிர் - 197, 20 பக்கங்கள் ரூபா: 50.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

ඥාන ඕලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05




**இறைநம்பிக்கையை பரப்பும் பணியில் ஈடுபட்டிருக்கும் மக்களுக்காக செபிப்போம்.**

**திருத்தந்தையின் இம்மாதக் கருத்துக்காக செபிப்போம்**



# போதைப்பொருள் நடவடிக்கைகளில் ஈடுபடும் கத்தோலிக்கர்கள் இருப்பார்களானால்




## அவர்களை திருச்சபையிலிருந்து விலக்கி விடுங்கள், அவர்களுக்கு திவ்விய நற்கருணை வழங்க வேண்டாம்.

"இந்நாட்டிற்கு போதைப்பொருளை கொண்டு வந்து, அவற்றை விநியோகித்து பலமுறைகளில் பிள்ளைகளை போதைப்பொருளுக்கு அடிமையாக்கும் கத்தோலிக்கர்கள் இருப்பின் அவர்களை கத்தோலிக்கத் திருச்சபையிலிருந்து விலக்கி விடவேண்டும். அவர்களுக்கு திவ்விய நற்கருணை வழங்க வேண்டாம் என கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை 25.11.2018 அன்று ஞாயிறுதினம் ஜா-எல துடெல்லை புனித அடைக்கல அன்னையின் தேவாலயத்தில் இடம்பெற்ற **"மன்றாட்டினால் விடுதலையடைதல்"** எனும் கருப்பொருளுடன் அமைந்த, போதைப்பொருள் ஒழிப்பிற்கான விசேட வழிபாட்டின் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு மறையுரை ஆற்றுகையிலே அவர்




இவ்வாறு குறிப்பிட்டார். மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில், எம் பிள்ளைகளை அழிவுக்கு இட்டுச் செல்லும், எளிமையான குடும்ப வாழ்க்கை வாழ்வோரது குடும்பங்களை அழிப்போர்கள் கத்தோலிக்க மதத்தை பின்பற்றுவோர்களானால் அவர்களை கத்தோலிக்கர்கள் எனக் கூறமுடியாது. இவ்விடயம் குறித்து எமது திருத்தந்தையும் கருத்து வெளியிட்டுள்ளார். இவ்வாறு உழைக்கும் பணமானது விரைவாக அழிந்து சாம்பலாகி போய்விடும். இதற்கு என்றாவது கடவுளுக்கு கணக்குக் கொடுக்க வேண்டிவரும். இவற்றை எம் நாட்டிலிருந்து இல்லாதொழிப்பதற்கான நடவடிக்கைகளை எம் நாட்டுத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் விரைவில் மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டார்....


தொடர்ச்சி 15ம் பக்கம்..

## வாழ்த்துகின்றோம்

**கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் முன்னாள் பேராயர்களான**



**அதிமேதகு நிக்கலஸ் மாக்கஸ் ஆண்டகை 6.12.2018 அன்று தனது பெயர் கொண்ட தினத்தையும் பிறந்த நாளையும் கொண்டாடுகின்றார்.**



**அதிமேதகு ஒஸ்வால்ட் கோமிஸ் ஆண்டகை 12.12.2018 அன்று தனது பிறந்த நாளை கொண்டாடுகின்றார்.**

**இவர்களை ஞானஒளி இறையாசீருடன் வாழ்த்துகின்றது.**

## ஆயர் பேரவையால் செபம் செய்ய வேண்டுகோள்

இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையினால் எம் கத்தோலிக்க விசுவாச இறைமக்களுக்கு, எம் நாட்டின் நிகழ்கால சூழ்நிலை குறித்து, அமைதியான நிலவரம் தொடரவும், அரசியல் சூழ்நிலைகளுக்கான நல்ல முடிவுகள் கிடைக்கப்பெற வேண்டுமெனவும் தொடர்ச்சியாக செபம் செய்வதற்கான வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது.

திருச்சபையின் நற்கருணை வழிபாடுகளுக்குப் பின் எம் நாட்டிற்காக இலங்கை அன்னையிடம் மன்றாடவும்.

மேதகு ஆயர் J. வின்ஸ்டன் எஸ். பர்னாந்து, SSS, தலைவர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

மேதகு ஆயர் டி. வலன்ஸ் மென்டிஸ், பிரதம செயலாளர்
இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவை

## இன்று முதல் ஞானஒளி பத்திரிகை 50 ரூபா

நாளுக்கு நாள் பத்திரிகைகளை அச்சிட அதிகரிக்கும் செலவு, ரூபாவின் பெறுமதி குறைதல், உற்பத்தி செலவு அதிகரித்தல் போன்ற காரணங்களால் இம்மாதம் 2ஆம் திகதி (இன்று) ஞாயிற்றுக்கிழமை ஞானார்த்த பீரதீப்பய சிங்கள பத்திரிகை, மெசஞ்ஞர் ஆங்கில பத்திரிகை, மற்றும் ஞான ஒளி தமிழ் பத்திரிகை ஆகியன 50 ரூபாவினால் விலையேற்றப்பட்டுள்ளது. மற்றும் சிறுவர்களுக்கான லமா பிரதீப்பய சிங்கள பத்திரிகை 20 ரூபாவினாலும் விலையேற்றப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றேன்.

**அச்சக இயக்குனர்**

## அறிவித்தல்

மார்கழி 16ம் திகதி ஞான ஒளி பத்திரிகையானது இம்மாதம் 23ம் திகதி நத்தார் பத்திரிகையாக வெளிவரும் என அறியத்தருகின்றேன்.

**ஆசிரியர்.**

## கொழும்பு உயர்மறைமாவட்டத்தினால் வழங்கப்படும் புற்றுநோயாளர்களுக்கான இரட்டைமாடிக் கட்டிடம்

### கர்தினால் ஆண்டகையின் கைகளால் முதற்படிக்கல் வைக்கப்பட்டது

கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் அதிதேமகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையின் கருத்திற்கிணங்க, இலங்கையில் பல பிரதேசங்களிலிருந்து மஹரகம புற்றுநோய் வைத்தியசாலைக்கு வருகைதரும் மக்களின் நலன்கருதி, அவர்களது பயன்பாட்டிற்காக, புதிய இரட்டைமாடி தங்குமிடமொன்று கட்டியெ-



ழுப்புவதற்காக முதற்படிக்கல் வைத்தல் மஹரகமையில் இடம்பெற்றது. இதற்காக புற்றுநோய் வைத்தியசாலைக்கு அண்மையில் உள்ள காணியொன்றினை கொள்வனவு செய்தமையோடு, இக்கட்டிடத்தை கட்டியெழுப்புவதற்காக, கொழும்பு எக்கசஸ் தனியார் நிறுவனம் பிரதான பங்களிப்பை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. மேலும் இந்நிகழ்வின்போது இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## இறையியல் மாணவ மாணவியர்க்கான நேர்முகப்பரீட்சை 01.12.2018

2018, கார்த்திகை திங்கள், 18ம் நாள் வெளியாகிய ஞான ஒளி பத்திரிகையில் பிரசுரமாகிய "டிப்ளோமாவும் பட்டப்பரீட்சையும்" என்ற விளம்பரத்தை வாசகர்கள் அறிவீர்கள். அதற்கேற்ப எதிர்வரும் சனிக்கிழமை (01.12.2018) அன்று கொழும்பு - 10, பொரள்ளை அக்குவைனாஸ் கல்லூரி, தமிழ் இறையியல் வகுப்பறை இலக்கம் 49ல் அடுத்தவருடம் இறையியல் கற்கை நெறியை தொடங்கவிருக்கும் மாணவ மாணவிகளுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.நேர்முகப்பரீட்சையில் கலந்துகொள்ள விரும்பும்..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## வேர்பூம் தொலைக்காட்சியில் மீண்டும் "தஹாம் நுவநெச" (மறைக்கண்ணோட்டம்)

Verbumtv

மறைப்பாடசாலை மாணவர்களின் மறையறிவை வளர்ப்பதற்கும் அதனைப் போஷிப்பதற்கும் மற்றும் திருவிவிலியம் பற்றிய அறிவை அவர்களிடத்தில் ஊட்டம் பெறச்செய்து, ஆன்மீக வளர்ச்சியை ஏற்படுத்தும் நோக்கில் வேர்பூம் தொலைக்காட்சியில் ஒளிபரப்பான "தஹாம் நுவநெச" நிகழ்ச்சியின் இரண்டாம் பாகத்தை மீண்டும் ஆரம்பிப்பதற்கான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கு ஒரு மறைப்பாடசாலையிலிருந்து, ஐந்து போட்டியாளர்களும், மேலதிக ஒரு போட்டியாளரும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

**ஆண்டவரே, உம்மை நோக்கி, என் உள்ளத்தை உயர்த்துகின்றேன் (தி.பா 25)**

## இலங்கையின் கரிடாஸ் நிறுவனம் கடற்கரை பிரதேசத்தினை சுத்தம் செய்யும் சிரமதானம்.





கரிடாஸ் நிறுவனத்தின் 50வது ஆண்டு நிறைவையொட்டி, கடற்கரை பிரதேசத்தினை சுத்தம் செய்யும் வேலைத்திட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. வத்தளை தொடக்கம் நீர்கொழும்பு வரை பாடசாலை மாணவ மாணவிகள் மற்றும் பௌத்த, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத்தலைவர்களும் "செத்சரண" நிறுவனத்தினரும் இவ்வேலைத்திட்டத்தில் பங்கேற்றனர்.

**தகவல் : கல்தேர**

## வகை பங்கின் மாவல்கம தூய செபஸ்தியார் ஆலய இளைஞர் முன்னணியால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட்ட இரத்த தான நிகழ்வு



வகை பங்கின் மாவல்கம தூய செபஸ்தியார் ஆலய இளைஞர் முன்னணியால் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்படும் இரத்த தான நிகழ்வு வகை பங்குத்தந்தை அருட்பணி. டிரோன் அஜித் மற்றும் உதவிப்பங்குத்தந்தை ரங்க ஷெஹான் அடிகளார் தலைமையில் கஹஹேனை பொரலுகொடை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. அன்றைய தினம் நெலுவதொடுவை சதா சகாய கன்னியர் மடத்தின் தலைமை அருட்சகோதரி பிரின்சி குருஸ்புள்ளே அவர்கள் இரத்த தானம் வழங்குவதை படத்தில் காணலாம்.

**தகவல் : சரத் அதுகோரல**



புனித வின்சன்ற் டி போல் சபையினர், பமுணுகம பங்குத்தந்தை அருட்பணி. பிரான்சிஸ் ஜெயக்கொடி அவர்களின் வழிநடத்தலின் கீழ், பமுணுகம வெள்ளவத்தையில் நிர்மானித்த ஒரு இல்லத்தை, குறைந்த வருமானமுடைய ஒரு குடும்பத்தினருக்கு கையளிக்கின்றனர்.

**படம் : பெஞ்சமின் கிரிஹெட்டி**

## "கிளர்ச்சியை இல்லாதொழிக்க செயற்படுங்கள்" மதச் சம்மேளத்தின் மதத்தலைவர்கள் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

இன்று எம் நாடானது முகங்கொடுத்துக் கொண்டிருக்கும் கிளர்ச்சிகரமான அரசியல் வன்முறைகள் நிமித்தம், எம் நாட்டில் அமைதியற்ற நிலை உருவெடுத்துள்ளமையால் எம் நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நடவடிக்கைகள் சீர்குலைக்கப்பட்ட நிலையில் உள்ளன. இந்நிலையினை மேலும் தொடராது, இதற்கு தீர்வு காண்பது குறித்து, கூடிய கவனம் செலுத்த வேண்டிய கடப்பாடு உங்களுக்கு இருக்கின்றது என, மதச்சம்மேளனத் தலைவர்கள் ஜனாதிபதியிடமும், அமைச்சர்களிடமும் வேண்டிக்கொண்டதாக இலங்கை கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவரான பதுளை மறைமாவட்ட ஆயர் மேதகு. வின்ஸ்டன் பர்னாந்து ஆண்டகை குறிப்பிட்டிருந்தார்.

பொதுக் கலந்துரையாடல் மூலம் யாப்புக்கும் சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப நிலையான அரசைக் கட்டியெழுப்புதல் மற்றும் அதனை ஏற்றுக்கொள்ளுவதற்கு பொறுப்புடன் செயற்படுதல். நாட்டில் எல்லோரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஜனநாயகத்திற்குட்பட்ட கொள்கைகளை பாதுகாத்துக்கொண்டு மற்றும் அவற்றை உறுதிசெய்து, நாட்டின் நீதியை நிலைநாட்டவும் அமைதியை நிலைநாட்ட செயற்படுதல், ஆளும்கட்சியோ, அல்லது எதிர்க்கட்சியோ சார்பாக நிற்பதற்காக அமைச்சர் பதவிகளில் இருப்பதற்கு மக்களின் தெரிதலை, வென்று அதை ஏற்றுக்கொண்ட பொறுப்பானது நாட்டின் மற்றும் மக்களின் முன்னேற்றம், நன்மைகளை நோக்காகக் கொண்டு நல்லாட்சியை ஏற்படுத்தல். இத் தர்மச் செயலை சீர்குலைக்காது மக்கள் எதிர்கொள்ளும் சவால்களுக்கு பதில் தேடுவது இவ்விரு தரப்பினர்களினதும் பொறுப்பாகும். இதனை விசுவாசத்துடன் செயற்படுத்துவதற்கு, ஏற்பட்டுள்ள கிளர்ச்சிகரமான நிலைக்கு தீர்வு காண்பதுடன், நாட்டை மீண்டும் சமத்துவ நிலைக்கு கொண்டு வருவது உங்கள் எல்லோரினதும் கடமையும் பொறுப்பாகும் என்பதை மதத் தலைவர்களின் கையொப்பத்துடன் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்தது.

## நாம் மதங்களின் படிப்பினைகளை பின்பற்றும் நாட்டு மக்கள் என முழு உலகிற்கும் கேட்கும் வண்ணம் கூக்குரலிட்டாலும், பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட விதத்தினை பார்க்கும்போது, அவ்வாறு கூறவே முடியாது.

### அதிமேதகு. பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்தார்.

இந்நாட்டிலுள்ள மதங்களின் படிப்பினைகளுக்கு இணங்க, நிகழ்கால பாராளுமன்றம் பயணித்துக்கொண்டுள்ள விதத்தினை ஏற்றுக்கொள்ளவே முடியாது. இப்பாராளுமன்ற செயற்பாடுகளானது எமது எதிர்கால சந்ததியினராகிய எம் பிள்ளைச் செல்வங்களுக்கு தவறான வழிகாட்டுதலையே வழங்குகின்றது. இவை கவலைக்குரிய விடயமாக அமைகின்றன. நாம் மதங்களைப் பின்பற்றி வாழ்கின்றோம் என உலகிற்கு கூக்குரலிட்டுக் கூறிக்கொண்டாலும், பாராளுமன்றத்தில் நடந்து கொண்ட விதமானது மிகவும் கீழ்த்தரமாகவே இருந்தது. இந்நிலையை தொடரவேண்டாம் என கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு. மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அகில இலங்கை பௌத்த சம்மேளன மண்டபத்தில், நாட்டின் நிகழ்கால நிலைக்குறித்த கலந்துரையாடலின்போது இவ்வாறு தெரிவித்திருந்தார். இக்கலந்துரையாடலில் பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மற்றும் கிறிஸ்தவ மதத்தலைவர்கள் கலந்து கொண்டனர்.

## மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கான கலந்துரையாடற் சபை

"நிகழ்கால அரசியல் நிலைக்குறித்த நிலைப்பாடு" எனும் தலைப்பின் கீழ் நீதி, சமாதானம் மற்றும் மனித வளர்ச்சித் தொடர்பாக கத்தோலிக்க தேசிய ஆணைக்குழுவின் தலைவரான மேதகு ஆயர் வியானி பர்னாந்து ஆண்டகையின் தலைமையில் மற்றும் இலங்கை அங்கிலிக்கன் சபை, கொழும்பு அதிவண. ஆயரான டிரோராஜ் கனகசபை ஆண்டகை, இலங்கை மெத்தாடிஸ் சபையின் தலைவர் அதிவண. ஆயர் ஆசிரி பெரேரா ஆண்டகை உள்ளிட்ட சபைத் தலைவர்கள் மற்றும் இலங்கையின் தேசிய சமாதானக் குழுவின் இயக்குனர் கலாநிதி. ஜெஷான் பெரேரா அவர்களின் பங்குபற்றலுடனும், கலந்துரையாடல் இடம்பெற்றது. கரிடாஸ் இலங்கை செடெக் நிறுவனத்தின் இயக்குனர் அருட்பணி மகேந்திர குணதிலக்க அடிகள் இதனை ஒழுங்கு செய்திருந்தார்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து, ரொஷான் பிரதீப்**

## கர்தினால் ஆண்டகை ஜனாதிபதியை சந்திக்கச் சென்றமைக்கான காரணத்தை பற்றி தெரிவித்துள்ளார்.

கார்த்திகை 16ம் திகதி வெள்ளிக்கிழமை "லங்காதீப" பத்திரிகையின் 14ம் பக்கத்தில் பிரசுரமான கஸ்தூரி என்பவரினால் எழுதப்பட்ட "கரலியே பெரளி" எனும் அறிக்கைக் குறித்து எனது அவதானம் செலுத்தப்பட்டது. அவ் அறிக்கையில் ஒரு பகுதியில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது. "வெள்ளிக்கிழமை இரவு 8.00 மணியளவில் மஹிந்த தேசப்பிரிய ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்றார். அங்கு கொழும்பு உயர்மறைமாவட்ட பேராயர் அதிமேதகு மெல்கம் கத்தினால் ரஞ்சித் ஆண்டகை மற்றும் முன்னாள் நீதித்தலைவர் சரத் நந்த சில்வா அவர்கள் ஜனாதிபதியுடன் இருந்தார்கள். ஜனாதிபதி பாராளுமன்றத்தை கலைக்கும் வர்த்தமானி அறிக்கையை தேர்தல் ஆணைக்குழுவின் தலைவருக்கு காட்டினார்"

மேற்குறிப்பிட்ட கருத்துக்களினால் நான் ஜனாதிபதியை சந்திக்கச் சென்றமைக் குறித்து, தவறான எண்ணம் உருவாவதற்கு இடமளித்தது. இன்று எம் நாட்டில் நிலவுகின்ற கிளர்ச்சிகரமான சூழ்நிலையின் நிமித்தம் சமயச் சம்மேளனத்தின் தலைவரான கோட்டை சிறி கல்யாணி சமாகிரி தர்ம மஹா சங்க சபையின் பிரதான தலைவர் தூரந்தர அதி பூஜ்ய இத்தேபானே தர்மாலங்கார மஹா தேரர் அவர்கள், என்னுடன் இணைந்து ஜனாதிபதியை சந்திக்க அன்றைய தினம் மாலை வேளையில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்றிருந்தமை உண்மை.

ஆனால், நாம் சென்றது பாராளுமன்றத்தை கலைத்து தேர்தலை நடாத்துவதைக் குறித்து கலந்துரையாடுவதற்கு அல்ல. ஜனாதிபதி, ரணில் விக்ரமசிங்க மற்றும் மஹிந்த ராஜபக்ஷ அவர்களை சந்தித்து நிகழ்கால சூழ்நிலைக்குறித்து அனைத்து தரப்பினர்களும் ஒன்றுசேர்ந்து அவற்றை தீர்க்க வேண்டும் எனவும், அதற்காக மதத் தலைவர்கள் என்ற அடிப்படையில் எம் இருவருக்கும் செய்யக்கூடிய எச் செயற்பாடுகளை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படின் அவற்றிற்கு நாம் தயார் எனவும் ஜனாதிபதியிடம் தெரிவித்து கொள்ளவே நாம் அன்று அங்கு சென்றிருந்தோம்.

அதாவது, ரணில் விக்ரமசிங்க அவர்கள் மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் போன்றோரை சந்தித்து மற்றும் அனைத்து தரப்பினர்களிடத்தில் ஒருமைப்பாட்டை..

தொடர்ச்சி 15ம் பக்கம்..

ஞான ஒளி
GNANA OLI
ඥාන ඔළි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
02 மார்கழி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# “மனித குல பிறப்புக்களிலே சிறப்பு பொருந்திய பிறப்பு இயேசுவின் பிறப்பே”

வருடத்தின் கடைசி மாதத்திலே நாம் இருக்கின்றோம். பரிசுத்த திருச்சபையானது இம்மாதத்தின் முதல் ஞாயிற்றுக்கிழமையிலிருந்து புதிய திருவழிபாட்டு காலத்தை ஆரம்பித்துள்ளது. அத்தோடு திருவருகைக்காலமும் தொடங்குகின்றது.

இம்மாதத்தில் நாம், பல விழாக்களைக் கொண்டாடுகின்றோம். இம்மாதம் 3ம் திகதி மறைபோதகராகிய புனித பிரான்சிஸ் சேவியரின் விழாவைக் கொண்டாடுகின்றோம். அவர் நமக்கு விட்டுச் சென்ற இறைவார்த்தைகள் “ஆண்டவரின் வார்த்தையை நேசியுங்கள், உங்களுடைய துக்கம், சந்தோஷமாக மாறும்” என்பதாகும். நாமும் திருவருகைக்காலத்தில் காலடி எடுத்து வைத்திருக்கின்றோம். இக்காலத்தில் வாசிக்கப்படும் இறைவார்த்தைகளை சிந்தித்து விழிப்புள்ள மக்களாக வாழ அழைக்கப்படுகின்றோம். அத்தோடு வருகிற 8ம் திகதி அமலோற்ப அன்னையின் விழாவைச் சிறப்பிக்கின்றோம். அந்த அன்னை அவருடைய பரிந்துரையால், தாய்க்குரிய பாசத்தினால் நம்மை அரவணைத்து, பாதுகாத்து வழிநடத்துகிறார். அன்னைக்கு விருப்பமான செயலான செபமாலையை தொடர்ந்து செபித்து, அவர் நம்மோடு தொடர்ந்து வர அன்றைய நாளில் அன்னையின் ஆசீரை பெறுவோம். அன்று கடன்திருநாள் என்பதால் திருப்பலியில் பங்குபெறுவோம். மரியன்னையின் பரிந்துரையைக் கேட்டுநிற்போம்.

இம்மாதம் 25ம் திகதி கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட இருக்கின்றோம். மனித குல பிறப்புக்களிலே சிறப்பு பொருந்திய பிறப்புக்கள் ஒரு சில மட்டுமே. அப்படிப்பட்ட ஒரு சிறப்பான பிறப்பைத்தான் அகில உலகமே கொண்டாடுகின்றது எனலாம். இயேசுவின் பிறப்பு நமக்கு ஒரு செய்தியை சொல்லுகின்றது. தனக்கென்று வாழாதே - பிறருக்கென்று வாழ், சுயநலத்தோடு வாழதே - பிறர் நலம் பெற வாழ், மமதையில் வாழாதே - தாழ்ச்சியோடு வாழ், பகைமையில் வாழாதே - மன்னிப்பு கொடுத்து வாழ், பற்றுக்கொண்டு வாழாதே - பகிர்ந்து வாழ், வெளித்தோற்றக் கவர்ச்சியிலே வாழாதே - உள்ளத்தை மாற்றி வாழ். இவைகளை செய்ய நீ மாற வேண்டும் என்பதை கிறிஸ்து பிறப்பு ஆயத்த நாட்கள் நமக்கு கூறி நிற்கின்றன.

கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும். இந்த வருடம் கிறிஸ்து பிறப்பு விழாவை அர்த்தமுள்ள வகையில் கொண்டாட நாம் செய்யவேண்டியது “தேவையற்ற வீண் செலவுகளை தவிர்த்து நம்முடன் வாழும், மழையாலும், வெள்ளத்தினாலும், இயற்கை சீற்றத்தினாலும் பாதிப்புற்று, அவதிப்படும் மக்களுக்கு நம்மால் இயன்ற அளவு உதவிகளை செய்ய முன்வருவோம். அப்போது ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்.

இயேசு நம் உள்ளங்களிலும் இல்லங்களிலும் பிறக்க ஆயத்தமாவோம்.

**இறையாசீருடன் ஆசிரியர்**




திருச்சபையின் திருவழிபாட்டு ஆண்டு காலச்சக்கரம் திருவருகைக்காலத்துடன் ஆரம்பமாகிறது. திருவருகைக்காலம் (Season of Advent) கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும், அவருடைய பிறப்பின் 1வது வருகையையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றது. இந்த திருவருகைக்காலம் ஆங்கிலத்தில் “Advent” என்று அழைக்கப்படுகின்றது. இந்த Advent என்ற சொல்லானது லத்தீன் சொல்லான Advenire என்ற சொல்லிலிருந்து வருகின்றது. இதனை பிரித்து அதன் அர்த்தத்தை எடுக்கின்றபோது

Ad- to<br>Venire - come } **Advent - to come**

எனவே இதனை பார்க்கும்போது “வரவிருக்கும்” என்ற பொருளை தருகின்றது. அதுதான் “Parousia” என்று அழைக்கப்படுகின்றது. “2ம் வருகையை” எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றோம். இந்த எதிர்பார்ப்பை தரும் காலமாக இருப்பதுதான் திருவருகைக்காலம். இக்காலம் மகிழ்ச்சியின் காலம் மட்டுமல்ல, எதிர்பார்ப்பின், நம்பிக்கையின், மனமாற்றத்தின் காலமாக இருக்கின்றது. எனவே தான் இக்காலத்தில் “ஊதா” (Purple) நிறம் பாவிக்கப்படுகிறது. இக்காலத்தின் பாதுகாவலராக (Patron Saint) கருதப்படுபவர் “திருமுழுக்கு யோவான்”. அதேபோல இக்காலத்தின் பாதுகாவலியாக (Patroness) கருதப்படுபவர் “அன்னை மரியாள்”. ஏன் அன்னை மரியாள் திருவருகைக்கால ஆன்மீகத்தில் முக்கிய கதாப்பாத்திரமாக கருதப்படுகின்றார்?

**திருவருகைக்காலத்தினை 2ஆக பிரிக்கலாம்.**

1. முதல் திருவருகைக்கால ஞாயிறு தொடக்கம் மார்கழி 16 - “parousia” அல்லது கிறிஸ்துவின் 2வது வருகை
2. மார்கழி 16 தொடக்கம் மார்கழி 24 - வார்த்தை மனுவுருவான நிகழ்வு அல்லது வரலாற்றில் நிகழ்ந்த கிறிஸ்துவின் 1ம் வருகை

இக்காலத்தில் குறிப்பாக 1வது வருகையின் நிகழ்வினை சிந்திக்கும்போது அங்கு குறிப்பாக மரியன்னையின் நிகழ்வுகளை காண்கின்றோம்.

## 1. மரியன்னையின் ஆன்மீக, உடல் ரீதியான எதிர்பார்ப்பு.

மரியன்னை தனக்கு மங்கள வார்த்தை கூறிய நாள் முதல், கிறிஸ்துவின் பிறப்பினை தன் வாழ்வாக்கிக் கொண்டார். காரணம் மரியன்னை உடல் ரீதியாக மட்டுமல்ல, மாறாக ஆன்மீக ரீதியாக தன்னை ஆயத்தம் செய்து கொண்டார். கிறிஸ்துவை தன் கருவில் தாங்க ஏக்கம் கொண்டிருந்தார். தனது “ஆம்” என்ற வார்த்தைக்கு கீழ்படிந்த அந்நாள் முதல் கிறிஸ்துவின் பிறப்பு வரை தன்னை பரிசுத்தமாக ஆயத்தப்படுத்தினார் நம் அன்னை. ஆன்மீக ரீதியாகவும் தன்னை ஆயத்தப்படுத்தினார். உடல் ரீதியான ஆயத்தத்தோடு கிறிஸ்துவை இவ்வுலகிற்குத் தந்தார். இந்த ஆயத்தம் தான் மரியன்னையை முழுமையாக ஒரு அழைப்பு வாழ்விற்கு அழைத்துச் சென்றது. மரியன்னை இயேசுவை கருவுற்ற போதும், இயேசுவைப் பெற்றெடுத்த பின்னும் “கன்னி”யாக இருந்தார். இந்த கன்னி வழியாகவே விண்ணகத்தின் வாயில் பிறந்தது. இந்த 1வது வருகையின் நிகழ்வில் அன்னை மரியாள் தன்னை முழுமையாக அர்ப்பணிக்கின்றார்.

## 2. அன்னையின் அமல உற்பவம்.

மார்கழி மாதம் 8ம் திகதி அன்னையின் அமல உற்பவ பெருவிழாவானது திருவருகைக்காலத்தின் இன்னுமொரு சிறப்பம்சமாக இருக்கின்றது. அன்னையின் அமல உற்பவமானது, கிறிஸ்துவையும் அமல உற்பவியாக இருந்து பெற்றெடுத்தார் என்பதை முழுமையான ஆன்மீகமாக எமக்கு தருகின்றது. நாம் எவ்வாறு கிறிஸ்துவை எதிர்பார்த்தோமோ, அன்னையும் அவ்வாறே எதிர்பார்த்து தன்னை ஆயத்தப்படுத்தினார். கடவுளால் தேர்ந்து கொண்ட அன்னை மரியாள், கிறிஸ்துவின் தாயாக, தன்னை சிறப்பாக ஆயத்தம் செய்கின்றார். மெசியாவின் ஆரம்பம் இயேசுவின் மனுவுருவான நிகழ்வு ஆரம்பமாகின்றது. இந்தப் பெருவிழா மரியன்னை திருவருகைக்காலத்தின் மத்திய பாத்திரமாக இருக்கின்றார். எனவே மரியன்னையை திருவழிபாடான இக்காலத்தில் கொண்டாடுவது சிறந்தது.

## 3. அன்னையின் வாழ்வின் நிகழ்வுகளில் தொடர்புடைய நம்பிக்கையும், எதிர்பார்ப்பும்.

திருவருகைக்காலம் நம்பிக்கையின், எதிர்பார்ப்பின் காலம். எனவே கிறிஸ்துவின் முதலாம் வருகையுடன் தொடர்புடைய வாசகங்கள் யாவும் அன்னை மரியுடன் தொடர்புபடுத்தி கிறிஸ்துவின் வருகைக்காக எதிர்பார்ப்பினை தருகின்றது. இக்காலத்தில் எசாயாவின் மெசியாவினைப் பற்றிய முன்னறிவிப்பு, மரியன்னையின்...

15

## உண்மை உறைக்கும் கமிலஸ்



# நாமே அமல உற்பவம்

மார்கழி 08



தூய அமல அன்னை பெருவிழா கீழைத்-திருச்சபையில் 7ஆம் நூற்றாண்டு முதல் கொண்டாடப்பட்டு வருகிறது. அன்னை மரியாள் புனித அன்னம்மாள் வயிற்றில் உருவான விழாவாகக் கொண்டாடினார்கள். இப்போது கத்தோலிக்கத் திருச்சபை கொண்டாடுவதுபோல "அமல உற்பவம்" என்று அது பொருட்படவில்லை. மேலை திருச்சபையில் 9ஆம் நூற்றாண்டு முதல்தான் நடைமுறைக்கு வந்தது.

உலகம் உருவாவதற்கு முன்பே கடவுள் நம்மைக் கிறிஸ்து வழியாகத் தேர்ந்து கொண்டார் (எபே 1:4). எனவே, கடவுள் தொடக்கத்திலிருந்தே நம் ஒவ்வொருவரையும் தன் நினைவில் கொண்டிருக்கிறார். அதுபோல மீட்பின் வரலாற்றிலும் மீட்பின் பணியிலும் ஒவ்வொருவருக்கும் ஒரு பங்கை அளித்து இருக்கிறார். அதை நிறைவேற்றத் தேவையான அருங்கொடை-களையும் வழங்கியிருக்கின்றார். இதையே புனித அன்னை மரியாளுக்கும் செய்திருக்கிறார்.

இயல்புக்கும் மேற்பட்ட மிகப் பெரும் பணியை மரியாளிடம் ஒப்படைக்கும் பொருட்டு அவர் அப்பணியைத் தகுந்த முறையில் நிறைவேற்றும் வலிமை பெறுவதற்காக அனைத்து அருள் நன்மைகளையும் அள்ளிக்கொடுத்துத் தயாரித்திருக்கிறார். இந்த தயாரிப்பை மூன்று வார்த்தைகளில் சொல்லிவிடலாம். அமல உற்பவி, கன்னி, யோசேப்பின் துணைவி, மரியாளை பக்குவப்படுத்தும் பணியில் இவை மைல் கற்கள் எனலாம். இவற்றைத் தொடர்ந்தே மரியா கருவுற்று மகனைப் பெற்றார். மீட்புக்குத் துணை போனார்.

"அமல உற்பவி" என்ற கொடை கடவுளால் தொடக்கத்திலேயே மரியாளுக்கு அளிக்கப்பட்டுவிட்டது. மரியாள் கருவில் உருவாகும் போதே இறைவனின் சிறப்புச் சலுகையினாலும் தனிப்பட்ட அருளினாலும், பிறப்பு நிலைப் பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு மாசுமறுவற்ற இயேசுவைக் கருத்தாங்கினார். இந்த மறையுண்மை கிறிஸ்தவ நம்பிக்கையாகத் தொடக்க காலத் திருச்சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆயினும், அந்த மறையுண்மையை அனைத்து உலகத்திற்கும் அதிகாரப்பூர்வமாக 1854ஆம் ஆண்டு திருத்தந்தை 9ஆம் பயஸ் "புனித அன்னை மரியாள் தாம் கருவில் உருவான முதல் நொடியிலிருந்தே வல்லமைமிக்க இறைவனின் தனிப்பட்ட அருளாலும் சலுகையாலும் மனுக்குலத்தின் மீட்பராகவும் இயேசு கிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டுப் பிறப்பு நிலைப் பாவக்கறை அனைத்தினின்றும் பாதுகாக்கப்பட்டார்" என அறிக்கையிட்டார். மரியா அமல உற்பவியாக இருக்கிறார் என்ற மறையுண்மையை திருத்தந்தை 9ஆம் பயஸ் அறிவித்த நான்காம் ஆண்டில் புனித பெர்னதெத் சுரூபி என்பருக்கு லூர்து அன்னையாகக் காட்சியளித்து "நாமே அமல உற்பவம்" என்றார்.

கத்தோலிக்கத் திருச்சபை மரியாளை அமலோற்பவ அன்னை என அழைக்கும் போது மரியா முதல் பெற்றோராகிய ஆதாம் ஏவாள் ஆகியோரின் கீழ்ப்படியாமையால் இவ்வுலகில் நுழைந்த பாவமாகிய பிறப்பு நிலை பாவத்திற்கு உட்படாமல் இறைவனின் தனிப்பட்ட அருளால் பாதுகாக்கப்பட்டார் என போதிக்கிறது. மரியாள் பிறமனிதரைப் போல் செயல்வழிப் பாவத்திற்குட்படவில்லை. இறைவனுக்குகெதிராக ஒரு போதும் செயல்படவில்லை. இறைவன் அவருக்கு அளித்த சுதந்திரத்தை அவர் தவறாகப் பயன்படுத்தவில்லை. இதற்குக் கடவுளின் தனிப்பட்ட அருள் மரியாளுக்கு வழங்கப்பட்டது.

அலகையையும் அதன் செயல்களையும் முறியடிக்கும் இயேசுவைக் கருத்தாங்க வேண்டியி-ருப்பதால் கருவில் உதயமாகும்போதே மரியா மாசின்றி இருக்க வேண்டும். ஆகவே, மாசின்றி உருவான மரியா மற்ற பெண்களைப் போல் தோன்றினார். ஏனெனில் மற்றெல்லாரையும் போல் அவரும் மீட்கப்பட வேண்டும். இயேசுவின் சிலுவைப் பலியும் அதன் பேறுபலன்களும் மரியாளை வந்தடைய வேண்டும். அதே வேளையில் அவரது அமல உற்பவத்தால் அவர் ஏற்கவிருக்கும் மிக உன்னத பணிக்குத் தகுதியுடையவராக்க வேண்டும். எனவே, இறைவனின் தனிப்பட்ட சலுகை வரத்தால் மாசுமறுவின்றி கருவில் உருவாகிப் பிறந்தார்.

அன்னை மரியா "முற்றிலும் தூயவர்" என அறியப்பட்டார் என ஆர்தடாக்ஸ் சபை வெகுகாலத்திற்கு முன்பே "அமல உற்பவி" என்ற பெயரைச் சூட்டியுள்ளது. இப்பெயர் இரு கருத்துகளை உள்ளடக்கியுள்ளது. முதல் சலுகை மரியா பிறப்பு நிலை பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டு இறைவனின் தாயானார். இரண்டாவது எல்லோரையும் போல் மரியாள் வாழ்ந்தாலும் அற்பப் பாவமோ, சாவான பாவமோ செய்தறியாதவர். இப்பெருமை முற்றிலும் அவருக்கே உரியது.

1830 கார்த்திகை 27 ஆம் நாள் அன்னை மரியா புனித கத்தரீன் லபோரே என்பவருக்குக் காட்சியளித்த போது அன்னை மரியாளைச் சுற்றி முட்டை வடிவில் தோன்றிய ஒளிவட்டத்தில் "ஓ பாவமின்றி உற்பவித்த மரியாவே உம்மை அண்டி வரும் எங்களுக்காக மன்றாடும்" என்ற வார்த்தை காணப்பட்டது.

தூய கன்னிமரியை இறைவன் பிறப்பு நிலை பாவத்திலிருந்து காத்தார் என்பதை 2ஆம் வத்திக்கான் சங்கம் தெளிவாகக் கூறியுள்ளது. "இறையன்னை முற்றிலும் புனிதமானவர், பாவக்கறை ஏதுமில்லாதவர். கருவானது முதல் தனிச் சிறப்பான புனிதத்தின் மாட்சியால் அணி செய்யப்பட்டிருந்தார்" எனத் திருச்சபை எண் 56 இல் கூறப்பட்டுள்ளது.

கான்றர்பரி ஈட்மர் என்பவர் 12ஆம் நூற்றாண்டில் "அமல உற்பவம்" என்ற நூலை எழுதினார். இதைத் தொடர்ந்து பல்வேறு இறையியல் விவாதங்கள் எழுந்தன. "அன்னை கன்னிமரி அமல உற்பவி என்றால் இயேசுவின் மீட்புப் பயன் அவருக்குத் தேவைப்படாதது போல் ஆகிவிடும்" என தாமஸ் அக்குவைனாஸ் போன்றவர்கள் கூறினார்கள்.

இதற்கு பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருளாளர் டன்ஸ் ஸ்காட்டஸ் "கிறிஸ்து இயேசுவை மீட்பராகப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலை மற்றவர்களைவிட அன்னை மரியாளுக்கு அதிகம் வேண்டியதாக இருந்தது. ஏனெனில், மீட்பரின் அருட்கொடை முன் சென்று அவரைக் காத்திராவிடில் அவர் பிறப்புநிலை பாவத்திலிருந்து தப்பித்திருக்கமாட்டார்" எனப் பதில் கூறினார். இதன் வழி இச்சிக்கலுக்குத் தீர்வு கிடைத்தது. இறையியல் வல்லுநர் கூற்றுப்படி "இறைவன் அதைச் செய்ய முடிந்தது, அது ஏற்புடையதாக இருந்தது, எனவே, அவர் அதைச் செய்தார்".

மரியாளின் அமல உற்பத்தில், "இயேசுவின் மணமகளாகிய மாசு மறுவற்ற எழில் மிகுந்த திருச்சபையாகிய புதிய சமுதாயத்தின் பிறப்பு முன்னறிவிக்கப்பட்டது" என்று திருச்சபை கன்னி மரியின் அமல உற்பவத் திருவிழாவின் தொடக்க உரையில் அறிக்கையிடுகிறது. ஆம், அன்னை மரியாளின் அமல உற்பவத்தில் "கறைதிரையோ, வேறு எக்குறையோ இல்லாமல் தூய்மையும் மாசற்றதுமாய் மாட்சியுடன் " (எபே.5:27) விளங்க வேண்டிய திருச்சபை தொடங்கிவிட்டது. மரியாளின் மகிமை திருச்சபையின் மகிமையே!

மரியா மீட்பரின் தாய் என்றாலும் மீட்கப்பட்ட சமூகமாகிய திருச்சபையின் ஓர் உறுப்பினர். இவ்வுண்மையைப் புனித அகுஸ்தினார் பின்வருமாறு கூறுகிறார். "மரியா புனிதமானவர், மரியா பேறு பெற்றவர், இருப்பினும் மரியா திருச்சபையின் ஒரு பகுதி, அவர் திருச்சபையின் புனிதமிகு ஓர் உறுப்பினர். உடலானது உடலின் ஒரு பகுதியை விடப் பெரியது. அவ்வாறே திருச்சபையின் ஓர் உறுப்பினராகிய மரியாளைவிடத் திருச்சபை பெரியது".

திருச்சபையின் ஓர் உறுப்பினராகத் திகழும் மரியாவின் அமல உற்பவம் திருச்சபைக்கும் மனித குலத்திற்கும் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்கிறது. மரியன்னையின் அமல உற்பவத்தில் இறைவன் மனிதகுலுத்துடன் நட்புறவுகொள்ள ஆரம்பித்துவிட்டார். மனிதகுலமும் அலகையின் தீமைக்கு எதிரான போராட்டத்தில் இறைவன் பக்கம் சேர்ந்து விட்டது. மாசு மறுவற்ற மரியின் அமல உற்பவத்தில் திருச்சபையும், மனிதகுலமும் அருளில், மீட்பின் நிறைவை அடைய அழைக்கப்பட்டுள்ளன.

அருள்மிகப் பெற்றவரும் அமல உற்பவியுமான மரியா நமக்கு வழங்கும் செய்தி, பெண்ணின் வித்து அலகையின் மீது வெற்றிகொள்ளும் (தொ.நூ 3:5) பாவம் பொங்கிய இடத்தில் அருள் பொங்கி வழிந்தது (உரோ. 8:31). உலகம் உருவாகும் முன்பே இறைவன் நம்மையும் கிறிஸ்துவில் தேர்ந்து கொண்டார் (எபே. 1:4). திருச்சபை மாசு மறுவோ எக்குறையோ இன்றி உருமாற்றம் அடையும் (எபே. 5:27). நாமும் மரியன்னையுடன் இறைமாட்சியில் பங்குபெறுவோம். (உரோ. 8:28-30)

அமல உற்பவ மறைபொருள் அலகையையும், பாவத்தையும் சாவுக்கு இட்டுச் செல்லும். துன்பங்களையும் எதிர்த்துப் போராட அழைப்பு விடுக்கிறது. இவ்வாறு போராடிய வாழ்வு மேம்படுத்தவும், மனந்திரும்பி இயேசுவுடன் பயணிக்கவும், நம்மைத் தூய்மையாக்கி புனிதப்படுத்திக் கொள்ளவும் உந்திக் கொண்டேயிருக்கிறது. நம் விண்ணகத் தந்தை தூயவராய் இருப்பதுபோல நாமும் தூயவர்களாய் வாழ விரும்புகின்றார்.

அமல உற்பவ அன்னை இயேசு சொன்ன அனைத்தையும் நம்மால் செய்ய முடியும். அவரருள் பெற முடியும் என்கிறார். இறையருளால் நம் முயற்சியில் வெற்றி பெற்று எந்த அளவு அந்த இரக்கத்தின் அரியணையை அடைய முடியுமோ அந்த அளவிற்கு அணுகிச் செல்வதற்கு அமல அன்னை துணை புரிவார்.

மரியன்னை அமல உற்பவியாகப் பிறந்ததும், மீட்பரின் தாயாக அழைக்கப்பட்டதும், விண்ணக மகிமைக்கு உயர்த்தப்பட்டதும் நமக்காகவே, நமது மீட்புக்காகவே!

இவ்வுண்மைகளை நாம் திறந்த உள்ளத்துடன் ஏற்று, அவற்றை உலகிற்குப் பறைசாற்றி, அன்னை மரியாளுடன் இணைந்து தீமையின் அச்சாணியை முறித்து, புனிதம் கமழும் புத்துலகைப் படைப்பதே நம் தாய்க்குப் பாடும் தன்னிகரில்லாத் தாலாட்டு ஆகும்.



# திருவருகைக்காலத்தில் மனம் திரும்புவோம்

திருவருகைக்காலத்தை ஆரம்பித்திருக்கின்றோம். இத்திருவருகைக்காலத்தில் நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படி வாழவேண்டும்? ஆண்டவரது வருகைக்காக காத்திருப்பது என்பது வெட்டித்தனமாக காலம் கழிப்பது அல்ல, அவர் கொண்டு வரும் புதிய வானகத்தையும், புதிய மண்ணகத்தையும் புதிய வாழ்வை வரவேற்க நம்மை நாமே தயார்படுத்துவது. திருவருகைக்காலம் காத்திருக்கும் காலம் மட்டுமல்ல மனமாற்றத்தின் காலமும் ஆகும். நம் வாழ்வில் புதிய மாற்றங்களைக் கொண்டு வரவேண்டிய காலம்.

பாபிலோனிய அடிமைத்தனத்தில் இஸ்ரயேல் மக்கள் உட்பட்டிருந்த போது இறைவாக்கினர் எசாயா அவர்களுக்கு புதிய நம்பிக்கையூட்டுகின்ற செய்தியை அறிவித்தார். அம்மக்கள் ஆணவம், மமதை, கல்நெஞ்சம் கொண்டோராய் வாழ்ந்து வந்தனர். இவற்றில் இருந்து மனமாற்றம் அடையவேண்டும் என்று எசாயா கூறுகிறார்.

மெசியாவின் வழிகளை ஆயத்தப்படுத்த அவதரித்த தலைசிறந்த போதகராகிய திருமுழுக்கு யோவான் பாலைவனத்தில் மனமாற்றத்தின் குரலாக ஒலிப்பதை நற்செய்தியில் காண்கிறோம். மனமாற்றத்திற்கு மாபெரும் தடையாக இருப்பது ஆணவம், தான் என்ற முனைப்பு ஆகும். திருமுழுக்கு யோவான் தன்னையே தாழ்த்துகின்றார். “என்னைவிட வலிமைமிக்க ஒருவர் எனக்குப் பின் வருகிறார். குனிந்து அவருடைய மிதியடி வாரை அவிழ்க்கக்கூட எனக்குத் தகுதியில்லை” என்கிறார். ஆகவே ஆணவமும், மமதையும் செருக்கும் இறைவனுக்கு எதிரானவை. தாழ்ச்சி என்னும் உள்ளத்திலே இயேசு பிறக்க விரும்புகின்றார். அதற்காக நம் உள்ளத்தையும் வாழ்க்கையையும் ஆயத்தப்படுத்துவோமா? நம்மையே மாற்றி அமைத்துக்கொள்ள இதோ சில....



### 1. மனம் வருந்துதலின் காலம்

எதற்கு மனம் வருந்தவேண்டும்? நம்முடைய பாவ இயல்புக்கு நம்முடைய தவறான செயல்களுக்கு, மனித நேயமற்ற குற்றங்களுக்கு, ஆணவ தன்னலத் தன்மைக்கு.

### 2. மனம் திரும்புதலின், திருந்துதலின் காலம்

மனம் வருந்தினால் மட்டும் போதாது, மனம் திரும்ப வேண்டும். மனம் திரும்புதல் என்பது தவறான வழிகளை, செயல்களை, எண்ணங்களை, இயல்புகளை விட்டு விட்டு நம்மையே திருத்திக்கொண்டு, புதிய ஆடையை, புதிய இயல்பை அணியப் பெற்றவர்களாக மாற வேண்டும். “பாவமன்னிப்பு அடைய மனம் மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்” (மாற் 1:4) என்று அறிவித்தார்.

### 3. இது நம்பிக்கையின் காலம்

நோய்வாய்ப்பட்டவன் உடல் நலம் வேண்டி நம்பிக்கையோடு காத்திருக்கிறான். விதை விதைத்தவன் அறுவடைக்காக நம்பிக்கையோடு காத்திருக்கிறான். தேர்வு எழுதியவன் தேர்வின் முடிவுக்காக நம்பிக்கையோடு காத்திருக்கின்றான். மலர்கள் சூரியனுக்காக நம்பிக்கையோடு காத்திருக்கின்றன. அடிமை விடியலுக்காக நம்பிக்கையோடு காத்திருக்கின்றான். அதுபோல பாவ இயல்புக்கும், தவறான பழக்கங்களுக்கும் அடிமைப்பட்டு இருளில் இருக்கின்ற நமக்கு விடியலாக பிறக்கப்போகின்ற இயேசுவின் வருகை இன்று நம்பிக்கை ஊட்டுகின்ற காலமாக இருக்கின்றது.

### 4. ஆண்டவரின் வழியை ஆயத்தப்படுத்தும் காலம்

ஆண்டவராகிய மெசியா நம்மைத் தேடி வருகின்ற இந்த காலத்தில், அவரின் வருகையை, அவரின் வழியை செம்மைப்படுத்த வேண்டிய, ஆயத்தம் செய்ய வேண்டிய காலம் இது.

கியர்கேகார்டு என்ற தத்துவ ஞானி தன்னுடைய கோமாளி (clows) என்ற கதையில் பின்வருமாறு எழுதுகிறார். ஒருமுறை ஒரு சர்க்கஸ் கம்பெனியில் வித்தைகள் காட்டும் கோமாளி ஒருவர் அன்றைய குறிப்பிட்ட நாளில் திடீரென...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## நம்ம போப்புக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவிப்போம்.



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இம்மாதம் 17ம் திகதி 1936ஆம் ஆண்டு பிறந்தவர். இவரின் இயற்பெயர் ஜோர்ஜ் மரியோ பெர்கோக்லியோ. இவரின் பெற்றோர், தந்தை மரியோ ஜோசே பெர்கோக்லியோ, தாய் ரெஜினா மரியா சிவொரி ஆவர். இவர் தான் ஒரு குருவாக வரவேண்டும் என விரும்பி இயேசு சபையை தேர்ந்தெடுத்தார். 1958 பங்குனி 11ம் திகதி அச்சபையில் தன்னை இணைத்துக்கொண்டார்.

திருத்தந்தை பிரான்சிஸ் திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட நிமிடம் முதலே தமது எளிமையான வாழ்க்கை முறையாலும், மக்களை மையப்படுத்திய சிந்தனையாலும், மனித நேய அணுகுமுறையாலும், ஒட்டுமொத்த உலக மக்களையும் கவர்ந்த திருத்தந்தை ஆவார்.

மூன்றாம் உலக நாடான ஆர்ஜென்டீனா-விலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஏழை எளிய மக்களின் மனப்பான்மையையும், வாழ்வியல் முறையையும், தம் அன்றாட வாழ்வில் வாழ்ந்துகாட்டுகிறார். அவருடைய எளிய வாழ்வும், போதனையும் இறைமக்களாகிய நம் அனைவருக்கும் என்றென்றும், நல்பாடமாக அமைகிறது என்றால் அது மிகையாகாது. சிறுவர் முதல், இளையோர் வரையும் இளையோர் முதல் முதியோர் வரையும் தன் சிரிப்பால் கொள்ளை கொண்ட நம் இதயம் நிறைந்த திருத்தந்தைக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கள் கூறுவோம்.

### HAPPY BIRTHDAY TO YOU

### திருத்தந்தையைப் பற்றி...

பிறப்பு : மார்கழி 17, 1936

இயேசு சபையில் சேர்ந்த நாள் : பங்குனி 11, 1958

கல்வி : - 1963ல் மெய்யியல் பயின்றார்

குருப்பட்டம் : மார்கழி 13, 1969

இயேசு சபையின் இறுதி வார்த்தைப்பாடு : சித்திரை 22, 1973

பதவி :

- இயேசு சபையின் மாநிலத் தலைவர் - 1973
- புனித மிக்கேல் குருமடத்தின் அதிபர் - 1980

துணை ஆயர் : புவெனோஸ் ஏரஸ் நகர் - 1992

ஆயர் திருப்பொழிவு : ஆனி 1992

பேராயர் : மாசி 28

கர்தினால் : மாசி 21, 2001

திருத்தந்தையாக தேர்வு : பங்குனி 13, 2013

## மார்கழி – 03



“செபம் செய்து பாருங்கள் கடவுள் அருகே நீங்கள் செல்வீர்கள். ஆனால் உதவி செய்து பாருங்கள் கடவுளே உங்கள் அருகில் வருவார்.”

# உலக மாற்றுத் திறனாளிகள் தினம்

**“உடம்பிலுள்ள குறைகளெல்லாம் ஊனம் அல்ல, உள்ளத்தில் அடக்கிவைக்கும் குப்பைகளே உண்மையான ஊனம்”**

பிறப்பிலே ஊனமாக பிறப்பவர்கள் உண்டு. இது கடவுளின் நியதியா அல்லது பெற்றோரின் பிழைகளா? என்று யோசிக்கக்கூடும். எதுவாக இருந்தாலும் ஊனமாக இருப்பவர்களும் இன்று சக மனிதர்போல செயற்படுகிறார்கள் என்பதே உண்மை. அந்தளவுக்கு மருத்துவமும் அறிவியலும் வளர்ந்திருக்கின்றது. நான் ஊனமானவன் எனக்கு ஒன்றும் செய்ய முடியாது என்னால் இயங்க முடியாது என்று ஒதுங்கி நின்ற காலம் எல்லாம் போய் எம்மாலும் முடியும் என்று சாதனைப் படைத்தவர்கள் எத்தனை பேர். சாதனைப் படைத்துக் கொண்டிருப்பவர்கள் எத்தனை பேர். இவர்களை நாம் அன்போடும், பாசத்தோடும் ஏற்றுக்கொள்வது தான் மனிதத் தன்மையாகும்.

எங்களால் முடியும், எங்களால் நடனம் ஆடமுடியும், எங்களால் பேச முடியும், எழுத முடியும், நடிக்க முடியும், கணனியைப் பயன்படுத்த முடியும் என்று சாதித்துக் கொண்டிருக்கின்றார்கள். இன்று நான் என்ன செய்துகொண்டிருக்கின்றேன். வெறும் பார்வையாளனாக பார்த்துக் கொண்டும், விமர்சனம் செய்து கொண்டும் நேரத்தைக் வீணாகக் கழித்துக் கொண்டிருக்கும், பொதுவாக இளைஞர்கள் சும்மா இருந்து சுகம் கண்டு கொண்டு இருக்கிறார்கள்.

“முயலும் ஆமையும் வெற்றி பெறும், ஆனால் முயலாமை வெற்றி பெற முடியாது” ஆம் அன்பர்களே முடியும் என்று நினைத்தால், இமயமலைகளையும் புரட்டிப்போட முடியும். இதை திருவிவிலியம் அழகாக கூறுகிறது. இயேசு கூறுகிறார், முழு விசுவாசத்தோடு மலைகளைப் பார்த்து இங்கிருந்து பெயர்ந்து போ என்று சொன்னால் அது பெயர்ந்து செல்லும்.

ஆகவே ஊனம் என்பது ஒரு மனிதனின் எண்ணக்கருவாகும். ஏனெனில் ஒருவனுக்கு ஆற்றல், திறன், உழைப்பு மற்றும் படிப்பு இருந்தும் அதை சரியான முறையில் பயன்படுத்தாமல் இருப்பதும் ஒருவகை ஊனமே. எனவே மாற்றுத் திறனாளிகளும் மனிதர்களே, அவர்களுக்கும் மனம் உண்டு, ஆசை உண்டு, ஆர்வம் உண்டு, எதிர்பார்ப்பு உண்டு, ஏக்கங்கள் உண்டு. அவற்றை கண்டறிந்து உதவுவோம். நான் முழுமையாக படைக்கப்பட்டிருக்கின்றேன் என்றால் அது அவர்களுக்கு உதவுவதற்கே! உதவிக் கரம் நீட்டுவது என்பது மனிதனின் சிறந்த பண்பாகும். “செபம் செய்து பாருங்கள் கடவுள் அருகே நீங்கள் செல்வீர்கள், ஆனால் உதவி செய்து பாருங்கள் கடவுளே உங்கள் அருகில் வருவார்”. இவ்வாறு அன்னை திரேசா கூறுகின்றார். ஆம் உதவி செய்யும்போது மனிதனாக அல்லாமல், புனிதராக மாறுகின்றோம் என்பதை புனித திரேசா வாழ்வில் இருந்து அறிந்து கொண்ட உண்மை.

ஆகவே சிந்திப்போம்! கண் இருந்தும் பார்க்காமல், காது இருந்தும் கேட்காமல், வாய் இருந்தும் பேசாமல், பணம் இருந்தும் பிறருக்கு உதவிகரம் நீட்டாமல், பதவி இருந்தும், பிறரின் நல்வாழ்வுக்கு பயன்படுத்தாமல் இருந்த சந்தர்ப்பங்களை ஞாபகப்படுத்திப் பார்ப்போம். ஆகவே சாதி, மத வேறுபாடின்றி மனிதநேயத்தோடு உதவிகரம் நீட்டுவோம். உடல் ஊனங்களையல்ல உள்ள ஊனங்களை விரட்டியடிப்போம்.

## மன இறுக்கம் ஏன் வருகிறது?



மன இறுக்கம், மனப் புழுக்கம் அல்லது மன உளைச்சல் என்பது (Mental Stress) நம்மில் பலருக்கு வருகிறது. தூக்கமின்மை முதல் மாரடைப்பு வரை பல நோய்களுக்கு இது காரணம் என்பது மருத்துவ உண்மை. மன உளைச்சல் ஏன் வருகிறது? சமுதாயத்திடமிருந்து நாம் தேடும் சில தவறான எதிர்பார்ப்புகள் தான் இதற்குக் காரணம். இவற்றைப் பட்டியலிட்டே சொல்லலாம்.

- ✷ நான் மிகவும் முக்கியமானவன். மற்றவர்கள் எனக்குக் கீழ்ப்படிந்து என்னை மகிழ்ச்சியாக வைத்திருக்க வேண்டியது அவர்கள் எல்லோருடையவும் கடமை.
- ✷ மற்றவர்கள் எல்லாரும் என்னிடம் மிகவும் மரியாதையாக நடந்துகொள்ள வேண்டும்.
- ✷ மற்றவர்களிடம் நான் என்ன எதிர்பார்க்கிறேன் என்பதை அவர்களாகவே புரிந்துகொண்டு செயல்பட வேண்டும்.
- ✷ நான் எப்படி நடந்துகொண்டாலும் மற்றவர்கள் என்னிடம் நன்றியுடையவர்களாக நடந்து கொள்ள வேண்டும்.
- ✷ நான் குற்றமே அற்றவன், மற்றவர்கள் என்மேல் குற்றம் கண்டுபிடிக்கவே கூடாது.
- ✷ நான் நினைத்ததெல்லாம் நினைத்தபடியே நடக்க வேண்டும். மற்றவர்கள் அதற்குத் துணை நிற்க வேண்டும்.

இது எப்படி நடக்கும்? ஏமாற்றமும் மன உளைச்சலும் நோயும் நம்மைத் தாக்காமல் என்ன செய்யும்?

**நாம் நினைத்ததே நடக்க வேண்டும். நம் விருப்பம்போல் எல்லாரும் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது தான் மன இறுக்கம் சார்ந்த நோய்களுக்கு காரணம்.**

## மன இறுக்கத்தை குறைக்க



மற்றவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கும் நம்மைப்போல் எதிர்பார்ப்புகள் உண்டு. எல்லோருடைய எதிர்பார்ப்புகளையும் ஒரே நேரத்தில் நிறைவேற்றிவிட முடியாது. மற்றவர்களுக்கும் நம்மைப் போன்ற விருப்பங்கள்தான் இருக்கும் என்ற அடிப்படைப் பார்வையை வளர்த்துக் கொண்டால் மன உளைச்சலை நாம் பெருமளவு தவிர்க்கலாம்.

- ✷ மற்றவர்களின் சொல்லை நான் கேட்டால் அவர்களும் என் சொல்லைக் கேட்பார்கள். மற்றவர்களை மகிழ்விக்க நான் முயன்றால் அவர்களும் என்னை மகிழ்விக்க முயல்வார்கள்.
- ✷ நான் மற்றவர்களிடம் மரியாதையாக நடந்துகொள்ள முயன்றால் அவர்கள் என்னிடம் மரியாதையாக நடந்து கொள்வார்கள்.
- ✷ மற்றவர்கள் எதிர்பார்ப்பதை நான் செய்தால், நான் எதிர்பார்ப்பதை அவர்கள் எனக்குச் செய்வார்கள்.
- ✷ மனிதர்கள் எல்லோரும் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்பதில்லை. மற்றவர்களுக்கு உதவும்போது அவர்கள் எல்லோரும் நன்றி காட்டுவர் என்று எதிர்பார்க்க முடியாது.
- ✷ மற்றவர்கள் என் குறைகளைச் சுட்டிக்காட்டினால் நான் அதைக் கோபப்படாமல் கேட்பேன். தவறு இருந்தால் திருத்திப் பயனடைவேன்.
- ✷ நம் முயற்சிகள் எல்லாம் உடனே நிறைவேற வேண்டியதில்லை. நிறைய முயற்சிகள் செய்வோம். ஒருசில முயற்சிகள் அவ்வப்போது வெற்றி பெற்றால் போதும்.

இந்த மனநிலையை வளர்த்துக்கொண்டால் மன உளைச்சலுக்கு வேலையே இல்லை.

**எதிர்பார்ப்பில்லாத வாழ்க்கை முறையே மகிழ்ச்சியான வாழ்க்கை முறை**



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

**பேதுரு**

## திருவருகைக்காலத்தின் 1வது ஞாயிறு (02.12.2018)

**வாசக விளக்கம்:** திருவழிபாட்டின் இன்னுமொரு புதிய ஆண்டைத் தொடங்கும் நாம் திருவருகைக்காலத்தின் முதலாவது ஞாயிற்றில் கால்பதிக்கின்றோம். மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் நிறைந்த இக்காலம் மனமாற்றத்தின் காலமாகவும் இருக்கின்றது. “காத்திருப்பவன் கடவுளைக் காண்கின்றான்” என்பதற்கொப்ப இன்றைய அனைத்து வாசகங்களும் வழிபாடும் நம்மை விழிப்புடன் காத்திருக்க அழைப்புவிடுக்கின்றன. கிறிஸ்து பிறப்பு விழாவின் மூலம் இயேசுக்கிறிஸ்து மனிதப்பிறப்பு எடுத்த மாபெரும் நிகழ்ச்சியை நினைவுகூர்வது மட்டுமல்லாமல் அவரது இரண்டாவது வருகையைப் பற்றியும் நினைவுறுத்துகிறது. கடவுளின் வருகைக்காகவும் கடவுளின் தெய்வீக அரசுக்காகவும் காத்திருந்தவர்களும் ஒருபோதும் ஏமாந்து போனதில்லை. இத்தகைய நம்பிக்கையைத் தான் நாம் ஆண்டவரின் வருகைக்காக நம்மையே தயாரித்து காத்திருந்தோம் என்றால் அவரின் வருகை நம்மை அழிவிலிருந்து மீட்கும், தயாரிப்பும், மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் நிறைந்த திருவருகைக் காலத்தின் நாட்களை எமது மனமாற்றத்தின் நாட்களாக மாற்றிட இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : எரே 33:14-16**
தாவீதிலிருந்து நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவரே உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகிறேன்.

**இரண்டாம் வாசகம் : 1தெச 3:12-4:2**
கிறிஸ்துவின் வருகைக்கென்று ஆண்டவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா! ஆண்டவரே உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும், உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : லூக் 21:25-28,34-36**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

திருஅவையின் தலைவரான திருத்தந்தை ஆயர், அருட்பணியாளர் துறவியர், தொண்டர்கள் ஆகிய அனைவரும் இறைமக்கள் மத்தியில் இயேசுவின் வருகைக்கான விழிப்புணர்வையும், எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் உருவாக்கிட வேண்டிய வல்லமையை இவர்கள் மீது பொழிந்திட எழுந்தருளி வாரும்.

எமது நாட்டை ஆள்வோரும் தலைவர்களும் ஏழைகளுக்கு நற்செய்தியாகவும், சிறைப்பட்டோர் விடுதலை அடையவும், பார்வையற்றோர் பார்வை பெறவும், ஒடுக்கப்பட்டோர் உரிமை வாழ்வு அடையவும் பாடுபட்டு உழைக்கவும், அன்பும், அமைதியும், நீதியும் தோன்ற அர்ப்பணிப்புடன் பணியாற்றவும் வேண்டிய வரங்களைப் பொழிந்திட அவர்கள் மத்தியில் எழுந்தருளி வாரும்.

கிறிஸ்து இயேசுவை எதிர்பார்த்திருக்கும் நாங்கள் “விழிப்பாய் இருங்கள் இல்லை என்றால் விடியும் காலம் நமக்குத் தெரியாது” என்பதை உணர்ந்தவர்களாக எப்பொழுதும் வாழவும், காத்திருப்பவன் கடவுளைக் காண்பான் என்ற நம்பிக்கையோடு இருக்கவும் வேண்டிய வரங்களைப் பொழிந்திட எங்கள் மீது எழுந்தருளி வாரும்.

## திருவருகைக்காலத்தின் 2வது ஞாயிறு (09.12.2018)

**வாசக விளக்கம்:** திருவருகைக்காலத்தின் இரண்டாவது வாரத்தில் கால்பதிக்கும் திருஅவையின் இறைமக்களாகிய நமக்கு மனமாற்றத்தின் அறைகூவலாக திருமுழுக்கு யோவானின் மனமாற்றத்திற்கான கர்ச்சனை கொடுக்கப்பட்டுள்ளது. பாவமன்னிப்பு அடைய மனம்மாறி திருமுழுக்குப் பெறுங்கள் என்கிறார் திருமுழுக்கு யோவான். நாம் அமைதியும், நீதியும் மகிழ்ச்சியும் உள்ளவர்களாக வாழவேண்டும் என்றால் நம்மிடம் மனமாற்றம் ஏற்பட வேண்டும். எம்மிடம் இருப்பனவற்றை ஏழைகளுடன் பகிர்ந்து கொள்ளவேண்டும். ஏழைகளும் ஏழையரின் உள்ளத்தினரும் தான் இறையாட்சியின் அருளடையாளங்கள் என இன்றைய முதல் வாசகம் எடுத்துரைக்கின்றது. எளிமை வாழ்வு வாழ்ந்த திருமுழுக்கு யோவான் தங்களுக்கு அதிகமான உணவையும் உடையையும் இல்லாதவர்களுடன் பகிரவும் கையூட்டு வாங்காமல் எமக்கென்று கிடைப்பது போதும் என்ற மனநிறைவுடன் வாழவும் அறிவுறுத்துகின்றார். எனவே நாமும் எமது பழைய வாழ்க்கை முறைகளை மாற்றி, புதிய வாழ்வை அடைந்திட அன்பிலும், பகிர்விலும் நிலைத்திட இறையருள் வேண்டிப் பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : பாரூக் 5:1-9**
கடவுள் உன் பேரொளியைக் காட்டுவார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆண்டவர் உமக்கு மாபெரும் செயல்கள் புரிந்துள்ளார்.

**இரண்டாம் வாசகம் : பிலி 1:4-6, 8-11**
கிறிஸ்துவின் நாளுக்கென்று குற்றமற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்து வாருங்கள்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள். அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பீர்கள் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 3:1-6**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் மனமாற்றத்தின் விளைவு அமைதியும் மகிழ்ச்சியும் தான் என்பதை இறைமக்களுக்கு உணர்த்தி அனைத்து மக்களும் மீட்படைய வழிகாட்டவும், கடவுள் ஒருவரே வல்லமைமிக்கவர் அவரால் மட்டுமே நாம் மீட்படைய முடியும் என்பதை உணர்த்தி உண்மையான மனமாற்றத்திற்கு அழைத்துச் செல்லவும் வேண்டிய வரங்களைப் பொழிந்திட எழுந்தருளி வாரும்.

எம்மிடம் உள்ள பேராசைப் பள்ளத்தாக்குகள் நிரப்பப்படவும், ஆணவம், பணத்திமிர் என்னும் மலைகளும் குன்றுகளும் தாழ்த்தப்படவும் குறுக்கு வழி என்னும் கோணலானவை நேராக்கப்படவும் உண்மையான மனமாற்றத்தின் ஊடாக மகிழ்ச்சியும் மனநிறைவும் பெற்றிட எங்கள் மனங்களில் எழுந்தருளி வாரும்.

குழந்தை இயேசுவை நம் உள்ளத்திலும் இல்லத்திலும் வரவேற்கத் தயாராகும் நாம் நம்மிடம் உள்ளதை இல்லாதவரோடு பகிரவும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்னும் பாகுபாடுகளை களையவும் பழைய வாழ்க்கை முறை பழைய மனப்பாங்கு என்பனவற்றிலிருந்து விடுதலை அடையவும் எங்கள் மனங்களில் எழுந்தருளி வாரும்.

## திருவருகைக்காலத்தின் 3வது ஞாயிறு (16.12.2018)

**வாசக விளக்கம்:** திருவருகைக்காலத்தின் மூன்றாவது வாரத்தில் கால்பதிக்கும் இறைமக்களாகிய நமக்கு இன்றைய மூன்று வாசகங்களும் கடவுள் கிறிஸ்துவின் வழியாகத் தமது மீட்பை வழங்குவதில் பாரபட்சம் காட்ட மாட்டார் என்றாலும், அவரது மீட்பைப் பெற்று அனுபவிக்க நாம் நம்மை எந்த எந்த வழிகளில் தயார் செய்யவேண்டும் என்று எடுத்துரைக்கின்றன. இன்றைய ஞாயிறை நாம் மகிழ்ச்சியின் ஞாயிறு என்றும் சொல்லலாம். ஏனெனில் கொடுப்பதில் வரும் மகிழ்ச்சி பெறுவதில் இல்லை. பாலைவனத்தின் கூக்குரலாக ஒலித்த திருமுழுக்கு யோவானும் நம்மிடம் இருப்பதை பிறரோடு பகிர்ந்து கொள்ளவேண்டும் என்கிறார். தாழ்ச்சி, மனமாற்றம், அர்ப்பணிப்பு போன்றவை நம்மிடம் இருந்தால் நாம் எப்பொழுதும் மகிழ்ச்சியாக வாழலாம். கடவுள் தந்த மீட்பை நாம் முழுமையாக அனுபவிக்க நாம் என்ன செய்யவேண்டும் எனச் சிந்தித்து செயல்பட இறையருள் வேண்டுவோமாக.

**முதல் வாசகம் : செப்பனியா 3:14-17**
உன்பொருட்டு ஆண்டவர் மகிழ்ந்து களிகூர்வார்.

**பதிலுரைப் பாடல் :**
ஆர்ப்பரித்து அக்களியுங்கள் ஆண்டவர் சிறந்து விளங்குகின்றார்

**இரண்டாம் வாசகம் : பிலி 4:4-7**
ஆண்டவர் அண்மையில் உள்ளார்.

**நற்செய்திக்கு முன் வாழ்த்தொலி :**
அல்லேலூயா அல்லேலூயா ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது. ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்க என்னை அனுப்பியுள்ளார் அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : லூக் 3:10:18**

**விசுவாசிகளின் மன்றாட்டு**
வாரும் ஆண்டவராகிய இயேசுவே வாரும்.

அன்பு நிறைந்த தாழ்ச்சியுடனும் வீரத்துடனும் உழைக்கும் திருஅவையின் தலைவரான திருத்தந்தை ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவியர், பொதுமக்கள் அனைவரும் திருமுழுக்கு யோவானைப் போன்று இயேசுவுக்காக உழைத்திட வேண்டிய வல்லமையைப் பொழிந்திட எழுந்தருளி வாரும்.

நாட்டை ஆள்வோரும் தலைவர்களும் பொறுப்பில் உள்ள அதிகாரிகளும் நாட்டின் வளங்களையும் மக்களின் உரிமைகளையும் வழங்குவதில் பாரபட்சம் காட்டாது அனைவரையும் சமமாக மதித்து, மனித நேயத்துடன் நடந்து, சமதர்ம சமுதாயம் உருவாக்குவதில் பாடுபட்டு, உழைத்திட வேண்டிய நல்மனதை வழங்கிட அவர்கள் மத்தியில் எழுந்தருளி வாரும்.

கொடுங்கள் உங்களுக்குக் கொடுக்கப்படும் என்ற இறைவார்த்தைக்கேற்ப நாம் பெற்றுக்கொண்டதெல்லாம் இறைவனிடமிருந்தே பெற்றுக்கொண்டோம் என்பதை உணர்ந்தவர்களாக நம்மிடம் உள்ளதைப் பிறரோடு பகிர்ந்து கொள்ளவும், கொடுப்பதில் வரும் மகிழ்ச்சி பெறுவதில் இல்லை என்பதை உணரவும் எங்கள் மனங்களில் எழுந்தருளி வாரும்.

# கருவின் உயிர் காப்போம்

**கடவுளின் கிருபையாகி,**
**கொடையாகி,**
**கருவறையில், கருவாகி,**
**உருவாகி,**
**உயிரோடு,**
**உடலோடு,**
**உருவாகி,**
**புது உறவாகி,**
**புது வரவாகி,**
**பூமியைக்காண வரும்**
**புது அதிதியைப்**
**புன்னகையோடு,**
**‘வருக - வருக’ - என**
**வரவேற்போம்.**
**வாழ்த்தி மகிழ்வோம்.**
**அன்புடன்,**
**அரவணைத்து,**
**அம்மா - அப்பா என்ற**
**பதவி உயர்வுடன்,**
**புது விருந்தாளரைப்**
**பாசமாய்ப்**
**பெற்று வளர்ப்போம்.**
**கருக்கலைப்பு - அது**
**கடவுளுக்கு**
**எதிரான பாவம்.**
**எனவே,**
**கருவறையில் வளரும்**
**கருவை**
**கருணையுடன்**
**காப்பது எமது**
**கடமை.**
**கருவின் உயிர்**
**காக்கும் படி**
**கத்தோலிக்கத்**
**திருச்சபையும்**
**கனிவுடன் எம்மைக்**
**கேட்கிறது.**
**கருவின் உயிர்**
**காப்போம்.**
**கடவுளின் வரம்**
**கேட்போம்.**

**ஆக்கம்:**
**பென்ஜமின் சோமநாதர்.**
**தெஹிவளை.**





# இயேசு யார்?



அருட்பணி. அந்திரியாஸ் பர்னாந்து அமதி

> "மீட்பு என்பது இறைவனின் அருள்" என்பதை நாம் மறக்கக்கூடாது.

## முன்னுரை

நாம் மத்தேயு நற்செய்தியை திறந்ததும் காண்பது "இயேசுவின் மூதாதையர்களின் பட்டியல்" இது ஒரு தனிவகை இலக்கிய மரபு ஆகும். யூத மக்கள் இயேசு கிறிஸ்துவை மெசியாவாக ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நோக்குடன் வரையப்பட்டது இந்நற்செய்தி. இயேசு கிறிஸ்துவில் பழைய ஏற்பாட்டு வரலாறு தொடர்கின்றது என்றும் கடவுளின் வாக்குறுதிகள் அவரில் நிறைவு பெறுகின்றன என்றும் மத்தேயு தெளிவுபடுத்த விரும்புகிறார். யூதர் அல்லாத மக்களை மனதில் கொண்டு நற்செய்தியை தொகுத்த லூக்கா அகில உலக மக்கள் இனத்தோடு தம்மையே இணைத்துக் கொண்டு விட்டார். இயேசு என்னும் உண்மையை எடுத்துரைக்கும் நோக்குடன் இயேசுவின் மூதாதையர்களின் பட்டியலை வகுத்திருக்கின்றார். மத்தேயு தரும் பட்டியலில் 42 பெயர்கள் மட்டுமே உள்ளன. இவை 14 பெயர்களைக் கொண்ட மூன்று பிரிவுகளாகக் கூறப்பட்டுள்ளன.

(அ). ஆபிரகாம் - தாவீது மத் 1:2-6

(ஆ). தாவீது - நாடுகடத்தல் மத் 1:7-11

(இ) நாடுகடத்தல் - இயேசு மத் 1:12-16

முன்னுரை 1:1 இயேசு தாவீதின் மகன், ஆபிரகாமின் மகன் என்று குறிப்பிடுகிறது. முடிவுரை 1:17 அதனை மீண்டும் உறுதிசெய்கிறது. இயேசு ஆபிரகாமின் மகனாகவும், தாவீதின் மகனாகவும் அறிமுகம் செய்யப்படுகின்றார். யூத மக்களின் தந்தை எனக் கருதப்பட்ட ஆபிரகாமின் வாரிசாகவும் ஒப்பற்ற யூத அரசராகக் கருதப்பட்ட தாவீதின் வாரிசாகவும் இயேசு சித்தரிக்கப்படுகிறார்.

ஒவ்வொரு வருடமும் ஒரு தடவை இந்நற்செய்தியை நாம் திருப்பலியில் பயன்படுத்துகின்றோம் என்று சொன்னால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். ஆம் மார்கழி மாதம் 17ம் திகதி திருவருகைக்காலத்தின் இரண்டாம் பகுதி ஆரம்பமாகிறது. அதாவது முதல் ஞாயிறு தொடங்கி மார்கழி 16ம் திகதி வரை முதல் கட்டம் இக்காலப்பகுதியில் இயேசுவின் இரண்டாம் வருகையைப் பற்றி தியானிக்க அழைக்கப்படுகிறோம். மார்கழி 17-24 வரை இயேசுவின் பிறப்பினை மையப்படுத்தி தியானிக்க முனைகின்றோம். நம்மில் பலர், சில குருக்கள் உட்பட இவ்விவிலியப் பகுதியை அலட்சியம் செய்வதை பார்க்கின்றோம். இக்கட்டுரையின் நோக்கமே இயேசுவின் மூதாதையர்களின் பட்டியலில் காணப்படும் நபர்கள் ஊடாக இயேசுவின் சிறப்பை அறிந்து கொள்வதே.

## குலமுதுவர்

இயேசுவின் மூதாதையர் பட்டியல், ஆபிரகாமின் மகன் ஈசாக்கு என்பதோடு ஆரம்பமாகிறது. ஆபிரகாமுக்கு இஸ்மாயில் எனும் மகனும் இருந்தார் என்பது தெரியும். இவரே மூத்தவர். எனினும் அவரைப் பற்றிய கதை இல்லை. அதனைத் தொடர்ந்து ஈசாக்கின் மகன் யாக்கோபு, ஈசாக்கின் மூத்த புதல்வன் ஏசா, ஏசா ஓர் அப்பாவி போல, ஆனால் யாக்போபு தந்திரக்காரன். தன் தாயின் துணையோடு தன் சகோதரனை வஞ்சித்து பிறப்பு உரிமையை பறித்துக்கொண்டவன். அடுத்து யாக்கோபுக்கு யூதாவும் அவர் சகோதரர்களும். ஏன் யூதா தேர்ந்தெடுக்கப்படுகிறார்? ஏனைய சகோதரர்களைவிட ஏன் மெசியா யூதாவின் பரம்பரையில்? யோசேப்பு யாக்கோபுவின் பாசத்திற்கும் அன்புக்கும் உரியவர். இறைவனால் ஆசீர்வதிக்கப்பட்டவர். இதனால் தனது சகோதரர்களின் பகைமைக்கு ஆளானவர். இருப்பினும் அவர்களை மன்னித்தார். யூதா அப்படி ஆனவர் அல்ல. தன் சகோதரரை விற்றவர். விலைமாதர்களை தேடிச் சென்றவர். மத்தேயுவின் நற்செய்தியின் படி கடவுள் இவ்வாறு செயல்படுவதன் நோக்கம் என்ன? அதாவது இஸ்மாயிலுக்குப் பதிலாக ஈசாக்கு, ஏசாவுக்குப் பதிலாக யாக்கோபு; யோசேப்புக்குப் பதிலாக யூதா தேர்ந்தெடுக்கப்படுவது ஏன்? பழைய ஏற்பாட்டின் படி கடவுள் மனிதர்களைப் போல் செயல்படுபவர் அல்ல, மேலும் கடவுள் பெரும்பாலும் சிறப்பானவர்களை, உயர்ந்தவர்களை, தகுதியானவர்களை தேர்ந்தெடுப்பவர் அல்ல, மனிதருடைய தராதரங்களின் அடிப்படையில் செயல்படுவர் அல்ல கடவுள். கடவுளின் வழி தனிவழி. அவருடைய பேரன்பையும் இரக்கத்தையும் நாம் புரிந்துகொள்ள முடியாது. இதன்படி "மீட்பு என்பது இறைவனின் அருள்" என்பதை நாம் மறக்கக்கூடாது. இதன் அடிப்படையிலே இறைவன் தம் தெரிவுகளை மேற்கொள்கின்றார். இதனையே நாம் இயேசுவின் பணி வாழ்வில் காணக்கூடியதாக உள்ளது. இயேசு பாவிகளை தேடிச் சென்றார். அவர்களோடு விருந்துண்டார். "நீதிமான்களை அல்ல பாவிகளையே அழைக்கவந்தேன்" என்றார். மத்தேயுவின் மூதாதையர் பட்டியலின்படி இயேசுவின் பரம்பரையில் தூய்மையானவர்களும், பாவிகளும், ஏமாற்றுக்காரர்களும், ஒழுக்கமற்றவர்களும், நேர்மையானவர்களும், நேர்மையற்றவர்களும் உள்ளடங்கி உள்ளனர்.

## அரசர்கள்

இயேசுவின் மூதாதையர் பட்டியலின் படி முதல் 14 தலைமுறை ஆபிரகாமோடு ஆரம்பமாகி, இஸ்ரயேலின் உயர்ந்த சிறந்த அரசன் தாவீதோடு முடிவடைகின்றது. இருந்த சொத்துக்கள் அனைத்தையும் விட்டுவிட்டு நாடற்றவராக புறப்பட்ட ஆபிரகாமோடு தொடங்கிய யூத வரலாறு, வாக்களிப்பட்ட, பாலும் தேனும் மொழியும் தேசத்தை பெற்றுக்கொடுத்து, அதற்கு தாவீதை அரசனாக்கினார். ஆனால் மூதாதையர் பட்டியலின் இரண்டாம் பகுதியின் படி கடவுள் கொடுத்த சிறப்பான தேசத்தை இழந்து, நாடு கடத்தப்படவேண்டிய இழிநிலைக்கு தள்ளப்பட்டனர். இக்காலப்பகுதியில் இரு அரசர்கள் மாத்திரமே (எசேக்கியா, யோசியா) கடவுளுக்கு உகந்தவர்களாக வாழ்ந்தனர். ஏனையோர் கடவுளை மறந்து பிறதெய்வங்களை வழிபடுபவர்களாக, கொலைகாரர்களாக, நிர்வாக திறனற்றவர்களாக, பேராசை கொண்டவர்களாக, பிறமனைகளை நாடுபவர்களாக இருந்துள்ளனர். தாவீதுகூட பாவியாகவும், புனிதனாகவும் இருந்துள்ளார். தாவீதின் அரச பரம்பரை வம்சம் இறைவனால் ஏற்படுத்தப்பட்டாலும், பெரும்பாலும் தூய்மையற்றதாக, துர்மாதிரிகையான, கட்டமைப்பாக மாறியது. இன்று கூட இறைவனால் ஏற்படுத்தப்பட்ட திருச்சபையில் ஆணவம் கொண்ட அதிகாரபோக்கு கொண்ட, தூய்மையற்ற, துர்மாதிரிகையான, ஊழல்கள் கொண்ட பணியாளர்களையும், தலைவர்களையும் நாம் கண்கூடாகக் காண்கின்றோம். பாவிகளையும், புனிதர்களையும் கொண்டது தான் திருச்சபை என்பதை நாம் மறக்கக்கூடாது.

## பிரபல்யம் அற்றவர்கள். செல்வாக்கு அற்றவர்கள்...

ஆபிரகாம் தொடங்கி அரசர்கள் வரையிலான காலப்பகுதி இறைமதிப்பீடுகளின் படி கானல்நீராக இருப்பினும் நாடுகடத்தப்பட்ட காலத்தின் பின் தொடங்கி இயேசுவின் பிறப்பு வரையான காலம் நம்பிக்கையூட்டுவதாக அமைகின்றது. இக்காலப்-பகுதியில் சிலருடைய பங்களிப்பு காத்திரமானதாக இருந்துள்ளது. சில எதிர்பாராத பங்களிப்பை ஆற்றி உள்ளனர். இன்னும் சிலமுன்பின் தெரியாத நபர்களாக இருக்கின்றனர். எது எப்படியாக இருந்தபோதிலும் இறைவனின் அருட்கரமும் வழிநடத்தலும் தொடர்ந்து செயலாற்றி உள்ளது.

இந்த இடத்தில் இன்னுமொரு முக்கிய குறிப்பு, வழமையாக மூதாதையர் பட்டியலில் இடம்பெறுபவர்கள் ஆண்கள். அதுதானே மரபு. ஆனால் இயேசுவின் பட்டியலில் 5 பெண்கள் உள்ளடக்கப்பட்டுள்ளனர். மத்தேயுவின்படி மூதாதையர் பட்டியல் ஆண்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்படவில்லை. இறைவனின் கரமே செயல்படுகிறது. ஒவ்வொரு பிறப்பிலும் இறைகரமும் உண்டு. ஆகவே மனித உறவுகள் முதன்மையானவை (ஆண் + பெண் உறவு) அல்ல. இறைவனே முதன்மையானவர். தெரிவு செய்யப்பட்ட பெண்கள் திருவிவிலியம் போற்றும் பெண்களான சாரா, ரெபேக்கா, ராகேல் அல்ல. மாறாக,

### (அ). தாமார்

இவர் கானனேயப் பெண். இவர் யூதாவின் மகனை மணந்தவர். தன் கணவன் குழந்தைப்பேறு அருளும்முன் இறந்தார். தன் வழியாக எப்படியாகிலும் யூதாவின் சந்ததியிலே இறைவனின் ஆசீர் கிடைக்க வேண்டுமென துணிச்சல் கொண்டு தன் மாமனார் யூதாவுடன் தான் யார் என்பதை மறைத்து உறவு கொண்டு யூதா குலத்திற்கு வழித்தோன்றலை பெற்றுக்கொடுத்தார். (தொ.நூ 38:6-30)

### (ஆ) இராகாபு :

இவர் கானனேயப் பெண். எரிக்கோவில் ஒரு விலைமாதாக வாழ்ந்தவர். பின்னர் ஓர் வீரமாதைப் போன்று இஸ்ரயேலரின் ஒற்றவர்கள் தப்பாக வழிகாட்டியவர் (யோசுவா 2:9 தொடர்ச்சி)



# ஆவலுடன் காத்திரு...

## அர்த்தமுள்ள திருவருகைக்கால அடையாளம்.

### திருவருகைக்கால மலர் வளையம் *(Advent Wreath)*

திருவருகைக்கால மலர் வளையத்திற்கென்று ஒரு வரலாறு உண்டு. இது ஜென்மானியக் கிறிஸ்தவர்களிடமிருந்து தழுவப்பட்டு வந்த ஒரு பழக்கம். கிரேக்க உரோமானியர்களைப் போன்ற பல தெய்வ வழிபாடு கொண்ட மக்கள், குளிர் காலத்தின் இருளை மெழுகுதிரி கொண்டு அகற்றி, இளவேனில் பருவத்தின் குளிரையும், வெப்பத்தையும், தருமாறு சூரியக் கடவுளிடம், வேண்டுவார்கள். காலச் சுழற்சியும் வாழ்வின் வசந்தமும் மீண்டும் வரும் என்பதை இந்த மலர் வளையம் அவர்களுக்கு ஞாபகப்படுத்தும்.

இந்த பின்புலத்தில் கிறிஸ்தவர்கள் பிற்காலத்தில் ஒரு புதிய, விவிலிய அர்த்தத்தை இதற்குக் கொடுத்தார்கள். இப்போது இந்த மெழுகுத்திரிகள் “கிறிஸ்துவே உலகின் ஒளி” என்பதைக் குறிக்கின்றன. (யோவா 3:17-21) நம் மீட்பரான கடவுள் கிறிஸ்து இயேசுவில் புதிய முடிவில்லா வாழ்வை நம்பிக்கையாளருக்குத் தருகிறார் என்பதை பச்சை மலர் வளையம் நினைவூட்டுகின்றது. அது வெற்றியின் அடையாளமாகவும் கருதப்பட்டது.



திருவருகைக்கால மலர் வளையத்தில் உள்ள நான்கு மெழுகுதிரிகள், திருவருகைக்காலத்தில் வரும் நான்கு வார கால உள்ளார்ந்த ஆன்மீகத் தயாரிப்பைச் சுட்டிக் காட்டுகின்றன. உலகின் ஒளியாம் கிறிஸ்துவின் வருகை, புதிய வாழ்வையும், நம்பிக்கையையும் தரும் என்ற எண்ணத்தோடு காத்திருப்பதைக் குறிக்கிறது.

### வடிவம், எண் மற்றும் நிறம்

வட்ட வடிவமான மலர் வளையம், தொடக்கமும், முடிவும் இல்லாத இறைவனையும், நிலை வாழ்வையும் நான்கு மெழுகுதிரிகளும், நான்கு திருவருகைக்கால ஞாயிறையும், குறிக்கிறது. ஒவ்வொரு மெழுகுதிரியும் 1000 ஆண்டுகளைப் பிரதிபலிக்கிறது. மேலும் நான்கு மெழுகுதிரிகளும், மனித சமூகம் 4000 ஆண்டுகளாக மெசியாவின் வருகையை நோக்கி காத்திருப்பதை அடையாள முறையில் சுட்டிக் காட்டுகிறது.

- ஆதாம் - ஏவாள் முதல் நோவா வரை ஆயிரம் ஆண்டுகள்
- நோவா முதல் - ஆபிரகாம் வரை ஆயிரம் ஆண்டுகள்
- ஆபிரகாம் முதல் - தாவீது வரை ஆயிரம் ஆண்டுகள்
- தாவீது முதல் - புதிய ஆதாம் வரை ஆயிரம் ஆண்டுகள்

இன்னும் ஒரு சில மலர் வளையத்தில் 5வது வெள்ளை நிற கிறிஸ்து திரி ஏற்றப்படுகின்றது. இது தூய்மையைக் குறிக்கிறது. கிறிஸ்மஸ் அன்று ஏற்றப்பட்டு நடுவில் வைக்கப்படுகிறது.

திருவழிபாட்டு நிறமான ஊதா நிறம், செபம், தவம், தியாகம் ஆகியவற்றோடு கூடிய ஒறுத்தல் காலத்தைக் குறிக்கிறது. திருவருகைக்காலம் என்பது ஒரு குட்டித் தவக்காலம் பாவமாகிய இருளில் இருந்து வாக்களிக்கப்பட்ட மீட்பை நோக்கி அகில உலகமே கிறிஸ்துவின் பிறப்புக்காக காத்திருந்த காலத்தைக் குறிப்பது ஆகும்.

### திருவருகைக் கால முதல் ஞாயிறு

**முதல் மெழுகுதிரி – ஊதா நிறம் (பேப்பிள் கலர்)**

இது எதிர்பார்ப்பின் மெழுகுதிரி என்று அழைக்கப்படுகின்றது. நாம் இறைவனில் எதிர்நோக்கி இருக்கின்றோம். ஏனெனில் கடவுள் என்றும் பிரமாணிக்கமுள்ளவர், அவருடைய வாக்குறுதிகளை என்றும், நிறைவேற்றத் தாமதிப்பதில்லை. நம் நம்பிக்கை இறைவனிடமிருந்தே வருகிறது. இந்த நம்பிக்கையை எதிர்நோக்குடன் வாழ அழைக்கிறது. இந்த முதல் வாரம்.

### திருவருகைக் காலம் இரண்டாம் ஞாயிறு

**இரண்டாம் மெழுகுதிரி – ஊதா நிறம் (பேப்பிள் நிறம்)**

பெத்லகேமில் பிறக்கப்போகும் மீட்பரைக் குறித்த வாக்குறுதியை இறைவன் நிறைவேற்றினார். ஆண்டவரின் வருகைக்காக ஆயத்தப்படுத்துவதை இத்திரியானது குறிக்கிறது. இறைவாக்கினர் எசாயா நூலில் “பாலை நிலத்தில் குரல் ஒன்று முழங்குகின்றது. ஆண்டவருக்கான வழியை ஆயத்தமாக்குங்கள். அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள், பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும், மலை குன்று யாவும், தாழ்த்தப்படும். கோணலானவை நேராக்கப்படும். கரடுமுரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்.

### திருவருகைக் காலம் மூன்றாம் ஞாயிறு

**மூன்றாம் மெழுகுதிரி – இளஞ்சிவப்பு நிறம் (ரோஸ் கலர்)**

இன்றைய ஞாயிறு மகிழ்ச்சியின் ஞாயிறு என்று அழைக்கப்படுகின்றது. இன்றைய திரி மகிழ்ச்சியின் மெழுகுதிரி Candle of Joy or the Shepherds Candle என்று அழைக்கப்படுகின்றது. கிறிஸ்துவின் பிறப்புக்காக நம்முடைய காத்திருப்பின் நிறைவுக்கு வந்துவிட்டோம் என்பதால் திருவழிபாட்டு நிறம் ரோஸ். மகிழ்ச்சியின் அடையாள நிறம் அதனால்தான் ரோஸ் கலர் திரியை ஏற்றுகின்றோம்.

### திருவருகைக் காலம் நான்காம் ஞாயிறு

**நான்காம் மெழுகுதிரி – (பேப்பிள் நிறம்)** (Purple coloe)

இது அன்பின் மெழுகுதிரி என்று அழைக்கப்படுகின்றது. மீட்பரின் பிறப்பைப் பற்றிய நற்செய்தியை சம்மனசுக்கள் அறிவித்தன. கடவுள் இவ்வுலகை மீட்பதற்காக தம் ஒரே மகனையே அனுப்பினார். ஏனெனில் அவர் நம்மை அன்பு செய்தார். “தம் ஒரே மகன் மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் நிலைவாழ்வு பெறும் பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின் மேல் அன்பு கூர்ந்தார் என்ற அன்பின் செய்தியை இந்த மெழுகுதிரி சுட்டிக்காட்டுகின்றது.

### கிறிஸ்து பிறப்பு விழா

**ஐந்தாவது மெழுகுதிரி – வெள்ளை நிறம்**

நம்முடைய பாவங்களை கழுவுவதற்காக அனுப்பப்பட்ட இறைவனின் மாசற்ற செம்மறி கிறிஸ்துவே என்பதை இந்த வெள்ளை நிற மெழுகுதிரி சுட்டிக் காட்டுகின்றது. அவருடைய பிறப்பு, அவருடைய இறப்புக்காக, அவருடைய இறப்பு நம்முடைய பிறப்புக்காக

ஆகவே அர்த்தமுள்ள திருவருகைக்கால அடையாளத்தை நம் வீடுகளிலும் தயாரித்து தினமும் இயேசுவின் வருகைக்காக செபம் செய்வோம்.

# 4. தனிச் செபப் பழக்கம்

## 4. மகிமையின் மறைநிகழ்வுகள்

### 3. சீடர்கள் மேல் தூய ஆவியார் இறங்குகிறார்

வானகத் தந்தையே அப்பா!

நீரும் உம் மகனும் விண்ணில் இருந்து தூய ஆவியாரைத் தீச்சுடராக அனுப்பினீர்கள். அன்னை மரியாவின் பரிந்துரையால் தூய ஆவியாரைப் பெற்றுக்கொள்ள உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

இயேசு தந்தையின் வலப்பக்கம் இருக்கிறார். **அருள் நிறை**
திருச்சபையை ஆவியாரிடம் கொடுக்கிறார். **அருள் நிறை**
மரியன்னை சீடரோடு செபிக்கிறார். **அருள் நிறை**
காற்றின் ஒலி கேட்கிறது. **அருள் நிறை**
தீச்சுடர்கள் தலைகள்மேல் தங்குகின்றன. **அருள் நிறை**
தூய ஆவியார் சீடரிடம் வருகிறார். **அருள் நிறை**
சீடருக்கு அச்சம் அகன்று போகிறது. **அருள் நிறை**
சீடர்கள் பேச, வேற்றுமொழி கேட்கிறது. **அருள் நிறை**
சீடர்கள் புத்துயிர் பெறுகிறார்கள். **அருள் நிறை**
சீடர்கள் போதிக்கச் செல்கிறார்கள். **அருள் நிறை**

ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

### 4. மரியா விண்ணகம் கொண்டுசெல்லப்படுகிறார்

வானகத் தந்தையே அப்பா!

அன்னை மரியா இறந்தபின் உயிர்பிக்கப் பட்டு விண்ணகத்திற்குக் கொண்டு செல்லப்பட்டார். அவரின் பரிந்துரையால் விண்ணகம் செல்வேன் என்பதை நம்ப எனக்கு உதவிசெய்யும்.

**பரலோகத்தில் இருக்கின்ற....**

அன்னை மரியா இறக்கிறார். **அருள் நிறை**
அவர் மீண்டும் உயிர்க்கிறார். **அருள் நிறை**
விண்ணகம் கொண்டுசெல்லப்படுகிறார். **அருள் நிறை**
விண்ணகத்தினுள் அன்னை நுழைகிறார். **அருள் நிறை**
அவர் தன் மகனோடு இருக்கிறார். **அருள் நிறை**
அவர் தன் மகனோடு பேசுகிறார். **அருள் நிறை**
வானதூதர்கள் புகழாரம் செய்கிறார்கள். **அருள் நிறை**
அன்னை மகிமையோடு இருக்கிறார். **அருள் நிறை**
விண்ணோர்கள் மகிழ்ச்சி அடைகிறார்கள். **அருள் நிறை**
அன்னை நமக்காக பரிந்து பேசுகிறார். **அருள் நிறை**




ஓ என் இயேசுவே! எங்கள் பாவங்களை மன்னியும். நாங்கள் நரக நெருப்புக்குள் செல்லாதவாறு எங்களைக் காப்பாற்றும். எல்லா மக்களையும் விண்ணகப் பாதையிலே வழிநடத்தும். உம் இரக்கம் அதிகம் தேவைப்படுவோருக்கு சிறப்பாக உதவி செய்யும்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

## வாழ்த்துக்கள்

**அழகான சிரிப்பும்**
**ஆழமான சிந்தனையும்**
**இரக்கமுள்ள இதயமும்**
**ஈசனின் அடிச்சுவடும்**
**உதவிடும் கரமும்**
**ஊக்கமுள்ள செயலும்**
**எளிமையாள வார்த்தையும்**
**ஏழ்மையான தோழமையும்**
**ஐயம் அகற்றும் பேச்சும்**
**ஒன்றுபட்ட வாழ்வும்**
**ஓங்கிடும் கரமும்**
**கொண்கு**
**ஔடதமாய் வாழும்**
**எம் அன்புத் திருத்தந்தைக்கு**

பிறந்தநாள்
வாழ்த்துக்களை
கூறுகின்றோம்.



*Happy Birthday To You*

# கிறிஸ்மஸ் நமக்கு விடுக்கும் செய்தி



கிறிஸ்மஸ் என்றாலே இயேசுவின் மழலை முகத்தை நாம் நினைவுப்படுத்தி பார்க்கிறோம். ஏன் கிறிஸ்து நம்மிடையே பிறக்க வேண்டும்? மனிதனைப் பாவ நிலையிலிருந்து மீட்டு மீண்டும் இறைவனிடம் கொண்டு செல்ல கிறிஸ்து மனிதனாகப் பிறந்தார். ஏன் மனிதனாகப் பிறக்க வேண்டும்?

மனிதனை மனிதாக மதிக்கவே. மனிதனாக பிறந்தார். மனிதர் படும் துன்பங்களில் பங்கு கொண்டு நான் "உன்னோடு இருக்கிறேன்' என்று நம்மை மீட்க தன்னையே பலியாக்கினார்.

இவ்வாறாக நமது முன்னோர்கள் இயேசுவின் பிறப்பை அவரது மனித குல வாழ்வை சிந்தித்து தமது வழிதோன்றலுக்கு கூறினார்கள். அந்த விசுவாசப் பயணம் இன்று இல்லை. ஒரு மறைக்கல்வி மாணவரிடம், கிறிஸ்மஸ் என்றால் என்ன என்று கேட்க, மாணவன் இவ்வாறு கூறினான்.

கிறிஸ்மஸ் அன்று விடுமுறை கிடைக்கும், பெற்றோர்கள் புது துணி எடுத்து கொடுப்பார்கள். தொலைக்காட்சியில் புதிய திரைப்படங்கள் பார்ப்போம் என்று சொன்னான். இது தான் கிறிஸ்மஸ்.

இன்றைய பெற்றோர்கள், கிறிஸ்தவ படிப்பினைகளை குழந்தைகளுக்கு சொல்ல மறந்து விடுகிறார்கள். காரணம், ஏன் என்று கேட்டால் நேரமில்லை என்ற யதார்த்த பதில் உடனடியாக வருகின்றது.

குழந்தைகளுக்காக இரவு பகலாக உழைக்கின்றோம் என்று கூறுகிறார்கள். எல்லாமே பிள்ளைகளுக்குத்தான் என்று சொல்லும் பெற்றோர்கள், முக்கிய பணியாய் இறைவனைப் பற்றிய தாக்கத்தை குழந்தைகளுக்கு தர மறந்து விடுகிறார்கள். அது மட்டுமல்லாமல் கிறிஸ்மஸ் என்றால் குடும்பத்தோடு தாத்தா பாட்டி வீட்டிற்கு சென்று அங்கே திருநாளைக் கொண்டாடுவோம். பிறரோடு இனிப்புகளை பகிர்ந்து கொள்வோம். இதுவும் கிறிஸ்மஸ் அன்று செய்ய வேண்டியது ஒன்றுதான். ஆனால் இது மட்டுமல்ல கிறிஸ்மஸ்.

அன்பு பெற்றோர்களே! எதற்காக கிறிஸ்மஸ், எதற்காக இறைவன் மனிதனாக பிறக்க வேண்டும்? நாம் எப்படி கிறிஸ்து பிறப்பு விழாவை கொண்டாட வேண்டும்? என்று நீங்கள் தான் உங்கள் பிள்ளைக்ளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். குழந்தைகள் கேட்பதையெல்லாம் கொடுப்பது முக்கியமில்லை, மாறாக குழந்தைக்கு என்ன தேவை என்பதை அறிந்து கொடுக்க வேண்டும். இயேசுவே சிறந்த குழந்தை. அவர் எவ்வாறு சிறுவயதில் வாழ்ந்தார். (லூக். 2:51-52) என்று கூறுங்கள். அவர்களும் அதே மனநிலையில் வளர்வார்கள். ஆகவே, நாம் பிறக்கும் குழந்தைகளுக்கு முன்மாதிரிகையாக இருந்து கிறஸ்மஸ் செய்தியை மற்றவர்களுக்கு அறிவிப்போம்.

# இயேசு எங்கே பிறப்பார்



இயேசு, தாம் பிறக்கச் சரியான இடத்தைத் தேடி ஓர் ஊருக்குள் நுழைந்தார். அந்த ஊருக்குள்ளே இருந்தவர்கள் இரண்டாகப் பிரிந்து எங்கள் தெருவில் தான் நீர் பிறக்கவேண்டும் எனச்சொல்லிச் சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள். இயேசுவோ, நான் இரண்டு தெருக்களிலும் பிறக்கின்றேன். சண்டையை நிறுத்துங்கள் என்றார். ஆனால் அந்த ஊர் மக்களோ, நாங்கள் பஞ்சாயத்து வைத்து எந்தத் தெருவில் பிறக்க வேண்டும் என்று சொல்கின்றோமோ அந்தத் தெருவில் தான் நீர் பிறக்கவேண்டும் என்றார்கள். அமைதி இல்லாத இடத்தில் என்னால் பிறக்க முடியாது எனச்சொல்லி அடுத்த ஊருக்குச் சென்றார் இயேசு. ஏதாவது ஒரு வீட்டுக்குள் பிறக்கலாம் எனச்சொல்லி ஒரு வீட்டின் கதவருகில் சென்றார். உள்ளே தன் மகனை தாய் அடித்துக்கொண்டிருந்தாள். உனக்கு புதுச்சட்டை வேணும் புதுசட்டை, இனிமே எதையாச்சும் கேட்டு வாயைத் திறந்தே அவள்ளவுதான்! வருசா வருசம் கரெக்டா மார்கழி 25ஆம் திகதி வந்து இயேசு பொறக்கிறாரு. பொறக்குறதுக்கு முன்னாடி ஒவ்வொரு வீட்டுக்கும் ஆயிரம் ரூபா கொடுத்தா என்ன? திட்டிக்கொண்டிருந்தாள். கோபமும், சண்டையும், சச்சரவும் நிறைந்த வீட்டுக்குள் என்னால் பிறக்க முடியாது என்று சொல்லி, அடுத்த வீட்டுகுச் சென்றார் இயேசு. அது கண்கள் தெரியாத குழந்தைகள் வாழும் இல்லம். அந்த இல்லத்திலிருந்த குழந்தைகள் இயேசுவுக்குக் குடிலைத் தயார் செய்து கொண்டிருந்தார்கள். இயேசு அவர்கள் நடுவே நின்று, யாருக்கு இந்தக் குடில்? என்றார். குழந்தைகளோ, இயேசுவுக்கு என்றார்கள். இயேசுவுக்கா, அவருக்கு எதற்கு குடில்? அவர்தான் உங்களுக்கு பார்வையைக் கொடுக்கவில்லையே! என்றார். அதற்கு அக்குழந்தைகள், கண்ணொளி மட்டும்தான் இல்லை! நல்ல கால்கள், நல்ல காதுகள், அன்பு செய்யும் இதயம், எங்களைப் பார்த்துக்கொள்ள நல்லவர்கள் - இப்படி எவ்வளவோ அவர் கொடுத்திருக்கின்றாரே! அதுக்குத்தான் அவருக்கு குடில் என்றார்கள். இயேசுவோ, நான்தான் இயேசு! நான் தேடும் அன்பு இங்கே இருக்கிறது! இங்கேதான் நான் பிறக்கப்போகிறேன் என்றார். அன்பே இயேசு! இயேசுவே அன்பு!

**எமது வீட்டுக்குள் அன்பு இருந்தால் இயேசு நம் இல்லத்தில் பிறந்து நம் ஒவ்வொருவரின் உள்ளத்தையும் ஆசீர்வதிப்பார்.**

# க. பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான முன்னோடி வினாத்தாள் – 2018




**மிகவும் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.**

1) செபங்களில் மிக உன்னதமான செபம் எது?
   அ) விசுவாசப்பிரமாணம்
   ஆ) பரலோக மந்திரம்
   இ) மனத்துக்கச் செபம்
   ஈ) மூவேளைச் செபம்

2) கிறிஸ்து அரசர் பெருவிழா திருச்சபையால் எப்போது கொண்டாடப்படுகின்றது.?
   அ) திருவருகைக் காலத்திற்கு முதல் ஞாயிறு
   ஆ) கிறிஸ்மஸ் விழா
   இ) பாஸ்கா ஞாயிறு
   ஈ) ஆண்டின் பொதுக்காலத்தில்

3) இறந்தவர்களுக்கு எவ்வாறு உதவலாம்?
   அ) செபம் செய்தல்
   ஆ) திருப்பலி ஒப்புக்கொடுத்தல்.
   இ) அன்னதானம் கொடுத்தல்.
   ஈ) இவையாவும் சரி

4) முழு நற்செய்தியின் சுருக்கமாக அமையும் செபம் எது?
   அ) மங்கள வார்த்தைச் செபம்
   ஆ) மூவேளைச் செபம்
   இ) பரலோக மந்திரம்
   ஈ) விசுவாச மந்திரம்

5) இடைவிடாமல் செபிப்பதற்கு இயேசு கூறிய உவமை.
   அ) தாலந்து உவமை
   ஆ) இரவு நேரத்தில் அப்பம் கேட்ட உவமை
   இ) விதைப்பவன் உவமை
   ஈ) நல்ல சமாரியன் உவமை

6) பத்து கட்டளைகளில் 3வது கட்டளை எது?
   அ) ஞாயிறு தினத்தை பரிசுத்தமாக அனுசரிப்பாயாக.
   ஆ) கடவுளின் திருப்பெயரை வீணாக பாவிக்காதே
   இ) தாய் தந்தைக்கு மதிப்புக் கொடு
   ஈ) பிறர் உடைமையை விரும்பாதே.

7) "ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகின்றது" என்று இறைவனை புகழ்ந்து பாடியவர்?
   அ) சக்கரியா ஆ) தாவீது
   இ) புனித மரியாள் ஈ) எலிசபெத்

8) ஒரு முறை மட்டும் பெரும் திருவருட்சாதனங்கள்
   அ) குருத்துவம், உறுதிப்பூசுதல், திருமுழுக்கு
   ஆ) திருமுழுக்கு, நோயில்பூசுதல், நற்கருணை
   இ) திருமுழுக்கு, நோயில்பூசுதல், குருத்துவம்
   ஈ) குருத்துவம், ஒப்புரவு, நோயில்பூசுதல்.

9) மரணத்தருவாயில் இருப்பவருக்கு அளிக்கும் திருவருட்சாதனம் எது?
   அ) ஒப்புரவு ஆ) நோயில்பூசுதல்
   இ) உறுதிப்பூசுதல் ஈ) நற்கருணை

10) "தாய் வயிற்றில் உன்னை நான் உருவாக்குமுன்பே அறிந்திருந்தேன். நீ பிறக்கும் முன்பே உன்னைத் திருநிலைப்படுத்தினேன்." இவ்வாக்கியம் எந்த இறைவாக்கினர் நூலில் தரப்பட்டுள்ளது?
   அ) தானியேல் ஆ) எரேமியா
   இ) எசாயா ஈ) மீக்கா

11) தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் ஏனெனில் அவர்கள் ................. . பொருத்தமான விடை.
   அ) விண்ணரசு அவர்களுக்குரியது
   ஆ) கடவுளின் மக்கள் எனப்படுவர்.
   இ) இரக்கம் பெறுவம்
   ஈ) கடவுளைக் காண்பர்.

12) திருக்குடும்பம் எங்கே வாழ்ந்தது?
   அ) நசரேத்தூரில் ஆ) கலிலேயாவில்
   இ) கானான் நாட்டில் ஈ) எகிப்தில்

13) பாஸ்கா மெழுகுதிரி எதன் அடையாளமாக விளங்குகின்றது?
   அ) உயிர்த்த இயேசுவின் ஆ) ஆவியாரின்
   இ) பாடுபட்ட இயேசுவின் ஈ) இறந்தவர்களின்

14) வருடத்தில் ஒரு முறையேனும் நல்ல பாவசங்கீர்த்தனம் (ஒப்புரவு) செய்வது,
   அ) 10 கட்டளைகளில் ஒன்று
   ஆ) திருச்சபை கட்டளைகளில் ஒன்று
   இ) தூய ஆவியின் கொடைகளில் ஒன்று
   ஈ) மோயீசனின் சட்டங்களில் ஒன்று

15) திருமுழுக்கு என்னும் திருவருட்சாதனம் அளிக்கும் போது பூசப்படும் எண்ணெய்
   அ) ஒலிவ எண்ணெய்
   ஆ) தேங்காய் எண்ணெய்
   இ) மந்திரித்த எண்ணெய்
   ஈ) கிறிஸ்மா

16) இறைவனுக்கு உகந்த உன்னதமான பலி எது?
   அ) பாஸ்கா பலி
   ஆ) நொருங்குண்ட உள்ளம்
   இ) பழங்கள் நிறைந்த காணிக்கை
   ஈ) அப்பம், இரசம்

17) எல்லாவற்றையும் உள்ளத்தில் வைத்து சிந்தித்து வந்தவர் யார்?
   அ) யூதாஸ் ஆ) மரியாள்
   இ) பாவி பெண் ஈ) எலிசபெத்

18) கல்வாரிப்பலி தொடர்ந்து எதன்மூலம் நடைபெறுகின்றது?
   அ) திருப்பலி மூலம்
   ஆ) பாஸ்கா விழாவின் மூலம்
   இ) திருவிழாக்கள்
   ஈ) அறுவடை விழாவின் மூலம்

19) இஸ்ரயேலரின் வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்ட முக்கிய பலி எது?
   அ) பறவைகளின் பலி ஆ) இரத்தப்பலி
   இ) மிருகப்பலி ஈ) மனிதப்பலி

20) பத்தாவது பெருந்துன்பம் எது?
   அ) ஈக்கள் பெருக்கம்
   ஆ) காரிருள்
   இ) தலைமகன் சாவு
   ஈ) தவலைகள் பெருக்கம்

21) திருவெளிப்பாடு நூலை எழுதியவர் யார்?
   அ) புனித லூக்கா ஆ) புனித பவுல்
   இ) புனித யோவான் ஈ) புனித பேதுரு

22) திருவெளிப்பாடு நூல் எழுதப்பட்ட காலப்பகுதி,
   அ) கி.பி 60-65 வரை ஆ) கி.பி 950-100 வரை
   இ) கி.பி 70-80 வரை ஈ) கி.பி 95-100 வரை

23) ஞான இலக்கியத்தில் அடங்கும் நூல்களுள் ஒன்று,
   அ) நெகேமியா. ஆ) இனிமைமிகு பாடல்
   இ) லேவியர் ஈ) தோபித்து

24) பழைய ஏற்பாட்டில் ஞானம் என்பதற்கு பயன்படுத்தப்படும் எபிரேயச் சொல் எது?
   அ) எக்லேசியா ஆ) தோரா
   இ) செப்துவாஜின் ஈ) ஹெரக்மா

25) இயேசுவை மும்முறை மறுதலித்த திருத்தூதர்?
   அ) யோவான் ஆ) யூதாஸ்
   இ) பேதுரு ஈ) தோமா

26) எந்த இடத்தில் வைத்து இயேசுவை சிலுவையில் அறைந்தனர்?
   அ) சீனாய் மலையில்
   ஆ) கெத்சமனித் தோட்டத்தில்
   இ) மண்டையோடு எனும் இடத்தில்
   ஈ) தாபோர் மலையில்

27) இயேசுவின் இறந்த உடலை அடக்கம் செய்ய கல்லறையை கொடுத்தவர் யார்?
   அ) சீரேன் ஊராகிய சீமோன்
   ஆ) நத்தனேயல்
   இ) அரிமத்தியா ஊர் சூசை
   ஈ) சக்கேயு

28) திருச்சபையின் பிறப்பு நாள் எது?
   அ) இயேசுவின் உயிர்ப்பு நாள்
   ஆ) பெந்தகோஸ்து நாள்
   இ) இயேசு மறுவுருவான நாள்
   ஈ) இயேசு உயிர்த்த 40ம் நாள்

29) கத்தோலிக்க திருச்சபையின் பண்புகளில் ஒன்று,
   அ) பரிசுத்தம் ஆ) அன்பு
   இ) இரக்கம் ஈ) பணிவு

30) தொடக்க திருச்சபையில் பிரச்சினை ஏற்படக் காரணமாக இருந்த நிகழ்வு எது?
   அ) பந்தி பரிமாறும் பணி
   ஆ) சொத்துக்களை பகிர்ந்தமை
   இ) திருத்தொண்டர் தெரிவு
   ஈ) அனனியா சபிராள் ஏமாற்றுதல்

31) புனித பவுல் எந்த குலத்தைச் சேர்ந்தவர்?
   அ) தாவீது குலத்தை ஆ) பெஞ்சமின் குலம்
   இ) இஸ்ராயேல் குலம் ஈ) யாக்கோப்பின் குலம்

32) தூய பவுல் கல்விகற்ற எருசலேமின் புகழ்பெற்ற திருச்சட்ட அறிஞர் யார்?
   அ) கமாலியேல் ஆ) அரிஸ்ரோட்டல்
   இ) கிரகம் பெல் ஈ) சோக்கிரட்டீஸ்

33) தூய பேதுருவின் சகோதரர் யார்?
   அ) யோவான் ஆ) அந்திரேயா
   இ) பார்தலேமேயு ஈ) மத்தேயு

34) இலங்கைக்கு வந்த முதலாவது துறவற சபை எது?
   அ) இயேசு சபை ஆ) அங்கிலிக்கன் சபை
   இ) அகுஸ்தினார் சபை ஈ) பிரான்சிஸ்கன் சபை

35) இலங்கையில் உள்ள மறைமாவட்டங்கள் எத்தனை?
   அ) 10 ஆ) 09 இ) 25 ஈ) 12

36) கொழும்பு உயர்மறைமாவட்டத்தின் பேராயர் யார்?
   அ) ஆயர் இம்மானுவேல் பர்னாந்து ஆண்டகை
   ஆ) அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை
   இ) மேதகு நிக்லஸ் மாக்கஸ் ஆண்டகை
   ஈ) அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை

37) இலங்கையின் அப்போஸ்தலர் என்று அழைக்கப்படுபவர்?
   அ) புனித அன்னை திரேசா
   ஆ) புனித ஜோசேவாஸ்
   இ) புனித 2ம் ஜோன் போல்
   ஈ) புனித அந்தோனியார்.

38) இயேசு நற்கருணையை எப்போது ஏற்படுத்தினார்?
   அ) அப்போஸ்தலர்களோடு கூடி செபிக்கும்போது
   ஆ) இறுதி இராவுணவின் போது
   இ) சிலுவையின் அடியில்
   ஈ) இயேசு உயிர்த்து திருத்தூதர்களுக்கு காட்சியளித்தபோது

39) ஒத்தமைப்பு நற்செய்தியாளர்கள் என அழைக்கப்படுபவர்கள் யார்?
   அ) யோவான், பவுல், பேதுரு
   ஆ) மாற்கு, மத்தேயு, லூக்கா
   இ) லூக்கா, யோவான், பவுல்
   ஈ) லூக்கா, மாற்கு, யோவான்.

40) அருட்பணி மைக்கல் றொட்றிகோ எத்துறவற சபையைச் சேர்ந்தவர்?
   அ) அமலமரித் தியாகிகள் சபை
   ஆ) டொமினிக்கன் சபை
   இ) இயேசு சபை
   ஈ) அகுஸ்தினார் சபை

## பகுதி 2

**I. பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்.**

1) திருவிவிலியத்தின் முதல் 5 நூல்களும் எவை?
2) "தோரா" என்பதன் பொருள் என்ன?
3) புதிய ஏற்பாட்டு பிரிவுகளை எழுதுக?
4) திருவழிபாடு ஆண்டு சக்கரத்தை வரைக?
5) தாலந்தின் உவமை மூலம் நீர் கற்றுக்கொள்ளும் படிப்பினைகள் 3 தருக?
6) ஒல்லாந்தர் காலத்தில் கத்தோலிக்கர்கள் அனுபவித்த துன்பங்களைக் குறிப்பிடுக.
7) ஒத்தமைப்பு நற்செய்தியாளராக விளங்குபவர் யார்?
8) அன்னை திரேசா பற்றி 3 வாக்கியங்கள் எழுதுக.
9) 10 கட்டளைகளில் முதல் 2 கட்டளைகளில் உள்ளடக்கப்பட்டுள்ள பண்புகளை குறிப்பிடுக.
10) திருப்புகழ் மாலை என்பது யாது?

**02.** 1) தொடக்கநூலில் காணப்படும் 3 பாரம்பரியங்களை விளக்குக.
2) ஆபிரகாமின் வாழ்விலிருந்து கிடைக்கும் படிப்பினைகள் 5 குறிப்பிடுக.
3) இறைவாக்கினர்களின் பிரிவுகளைத் தருக.

**03.** 1) திருமுழுக்கு யோவான் மக்களுக்கு, வரிதண்டுபவர்க்கு, படைவீரருக்கு முன்வைத்த அறிவுரைகளை எழுதுக.
2) உமக்கு இறைவாக்கு பணி கிடைத்தால் உம்மால் ஆற்றக் கூடிய பணிகள் 5 எழுதுக.
3) இறைவாக்கு உரைக்கும் பணி இன்று யார் யாருக்கு வழங்கப்பட்டு இருக்கிறது?

**04.** 1) புனித பவுல் எழுதிய திருமுகங்கள் 3ஐ குறிப்பிடுக.
2) புனித பவுல் எப்போது எப்படி மனமாற்றம் அடைந்தார் விளக்குக.
3) திருப்பலியில் வாசிக்கப்படும் இரண்டாம் வாசகம் எந்த பகுதியில் எவ்வெவ் நூலிலிருந்து வாசிக்கப்படும்?

**05.** 1) நற்கருணையின் சிறப்பியல்புகள் இரண்டு தருக.
2) இயேசு நற்கருணையை ஏற்படுத்திய நிகழ்வை சுருக்கமாக தருக.
3) நற்கருணையை பெற தேவையான ஆயத்தங்கள் எவை?

**06.** 1) அடிப்படைவாதக் குழுக்களினால் கத்தோலிக்க திருச்சபை முகம்கொடுக்கும் சவால்களை குறிப்பிட்டு விளக்கு.
2) கத்தோலிக்க திருச்சபையை பாதுகாக்கும்படி ஒரு சிறு செபம் எழுதுக.
3) கத்தோலிக்க திருச்சபையை வழிநடத்துபவர் யார்? அவரைப் பற்றி 5 வாக்கியம் எழுதுக.

**07. சிறுகுறிப்பு எழுதுக.**
1) நல்லாயன் ஆண்டு
2) திருத்தந்தை பிரான்சிஸ்
3) திருவிவிலியம்
4) திருவழிபாடு ஆண்டு
5) ஒல்லாந்தர் ஆட்சிக் காலம்

**ஆக்கம்: பெர்னத்**

# உலக வறியோர் நாள்



## வறியோர் நாளன்று திருத்தந்தை வழங்கிய மறையுரை

**அக்கறையற்று, கைகளைக் கட்டிக்கொண்டு நிற்பதோ, ஒன்றும் செய்ய இயலாது என்று, கைகளை விரித்தபடி, தன் இயலாமையை வெளிப்படுத்துவதோ ஒரு கிறிஸ்தவரின் செயல் அல்ல - திருத்தந்தை**

அக்கறையற்ற மனநிலையோடு, கைகளைக் கட்டிக்கொண்டு நிற்பதோ, ஒன்றும் செய்ய இயலாது என்ற மனநிலையோடு, கைகளை விரித்தபடி, தன் இயலாமையை வெளிப்படுத்துவதோ ஒரு கிறிஸ்தவரின் செயல் அல்ல.

கடந்த கார்த்திகை 18, ஞாயிறன்று சிறப்பிக்கப்பட்ட இரண்டாவது உலக வறியோர் நாளையொட்டி, வறியோர் மற்றும் அவர்களுடன் பணியாற்றுவோர் என, 6000த்திற்கும் அதிகமானோர், வத்திக்கான் புனித பேதுரு பசிலிக்காப் பேராலயத்தில் கூடியிருக்க, அவர்களுக்கு திருப்பலி நிறைவேற்றி, மறையுரை வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசு கிறிஸ்துவைப்போல், அயலவரை அணைக்க, நாம் கரங்களை விரித்து, காத்திருக்கவேண்டும் என்று கூறினார்.

தேவையில் இருப்போருடன் நாம் கொள்ளும் தொடர்பின் வழியே நம் விசுவாசத்தை வாழவேண்டும் என்ற எதிர்பார்ப்பு, ஒரு சமுதாயக் கடமையை அல்ல, மாறாக, அது, இறையியல் சார்ந்த தேவையாகும் என்று, தன் மறையுரையில் கூறிய திருத்தந்தை, நாமும், நம் மீட்புக்காக, நம் சகோதரர், சகோதரிகளுடன் இணைந்து, கையேந்திக் கொண்டிருக்கிறோம் என்று விளக்கினார்.

பிறக்கவிருக்கும் குழந்தைகள், சிறார், இளையோர், முதியோர், கைவிடப்பட்டோர், நண்பர்களற்றோர், இயற்கை வளங்களை இழந்தோர் என, அனைத்து இலாசர்களின் அழுகுரல்களும் அநீதியால் பிறந்தவையே. இந்த அநீதியே, இவ்வுலகின் வறுமைக்கு அடிப்படைக் காரணமாக அமைந்துள்ளது என்பதை எடுத்துரைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வறியோரின் குரல்கள் எவ்வளவு ஓங்கி ஒலித்தாலும், செல்வந்தர்களின் கூச்சல்களால் அவை அடக்கப்படுகிறது என்பதை, ஒரு கண்டனமாக வெளியிட்டார்.

## அன்று வறியோருடன் அமர்ந்து உணவருந்திய திருத்தந்தை

**வறியோருடன் ஏறத்தாழ ஒன்றரை மணி நேரம் செலவிட்டு, அவர்களோடு உணவருந்தி மகிழ்ச்சியடைந்த திருத்தந்தை பிரான்சிஸ்**

வத்திக்கானின் புனித ஆறாம் பவுல் அரங்கில், ஏறத்தாழ 1,500 வறியோருடன் அமர்ந்து



உணவருந்தினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

அன்று நண்பகல் மூவேளை செப உரையை நிறைவு செய்தபின், வத்திக்கான் நேரம் 12.20 மணிக்கு, புனித ஆறாம் பவுல் அரங்கில் நுழைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், அங்கு, மதிய உணவை ஏற்பாடு செய்தோருக்கும், பரிமாறுவோருக்கும் நன்றியுரைத்ததோடு, அங்கு குழுமியிருந்த அனைத்து வறியோரையும் வரவேற்பதாகவும் கூறினார்.

1,500 வறியோர் குழுமியிருக்க, 70 தன்னார்வப் பணியாளர்கள், இத்தாலிய உணவு வகையான இலசாஞ்னா, கோழிக்கறி, உருளைக் கிழங்கு கூட்டு, திராமிசு என்ற இனிப்பு ஆகியவற்றை அவர்களுக்கு பரிமாறினர்.

மதிய உணவை வறியோருடன் உண்டபின் அனைவருக்கும் மீண்டும் ஒருமுறை நன்றி சொல்லி, அங்கிருந்த குழந்தைகளையும், வறியோரையும் வாழ்த்திய திருத்தந்தை, இவ்வுணவை தயாரித்த சமையல்காரர்களுடன் புகைப்படம் ஒன்றும் எடுத்துக் கொண்டார்.

அவ்விருந்தில் கலந்துகொண்ட வறியோர் ஒவ்வொருவருக்கும், ஒரு கிலோ பாஸ்தா பொட்டலம் ஒன்றையும் பரிசாக வழங்கினர், திருத்தந்தை பிரான்சிஸ். ஏறத்தாழ, ஒருமணி 25 நிமிடங்கள், வறியோருடன் செலவிட்டார்.

# இறை ஊழியர் அருப்பே அருளாளராக்கப்படும் வழிமுறைகள்


**இயேசு சபையின் 28வது உலகத் தலைவராகப் பணியாற்றிய அருள்பணி பேத்ரோ அருப்பே அவர்களை அருளாளராக உயர்த்தும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன**


இயேசு சபையின் 28வது உலகத் தலைவராகப் பணியாற்றிய அருள்பணி பேத்ரோ அருப்பே அவர்களை அருளாளராக உயர்த்தும் பணிகள் ஆரம்பமாகியுள்ள நிலையில், அவர், இனி, "இறை ஊழியர்" என்று கருதப்படுகிறார் என்று, இயேசு சபையின் தற்போதைய உலகத் தலைவர், அருள்பணி அர்த்தூரோ சோசா அவர்கள் கூறியுள்ளார்.

கார்த்திகை 14, தினத்தன்று, இறை ஊழியர் அருப்பே அவர்களின் 111வது பிறந்தநாள் சிறப்பிக்கப்பட்ட வேளையில், உலகெங்கும் பணியாற்றும் இயேசு சபையினருக்கு அனுப்பியுள்ள மடலில், இச்செய்தியினை, அருள்பணி சோசா அவர்கள் அறிவித்துள்ளார்.

இறை ஊழியர் அருப்பே அவர்களின் வாழ்வும், குறிப்பாக, அவர், இயேசு சபையின் உலகத் தலைவராக, 18 ஆண்டுகள் ஆற்றிய பணியும், நற்செய்தி விழுமியங்களுக்கு சாட்சியாக விளங்கின என்பதை, அருள்பணி சோசா அவர்கள் இம்மடலில் நினைவு கூர்ந்துள்ளார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தின் இறுதிக் கட்டங்களில், இயேசு சபையின் உலகத் தலைவராகப் பொறுப்பேற்ற இறை ஊழியர் அருப்பே அவர்கள், அச்சங்கத்தின் வழியே உருவான புதுப்பித்தல் பணிக்கு ஓர் இறைவாக்கினராக செயலாற்றினார் என்று,





அவரையடுத்து உலகத் தலைவராகப் பொறுப்பேற்ற அருள்பணி பீட்டர் ஹான்ஸ் கோல்வென்பாக் அவர்கள் கூறியதை, அருள்பணி சோசா அவர்கள் தன் மடலில் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் நிலவும் அநீதிகளுக்கு பதிலிருக்கும் வகையில், இறை ஊழியர் அருப்பே அவர்கள், உருவாக்கிய JRS என்றழைக்கப்படும் புலம்பெயர்ந்தோர் பணியைக் குறித்து, அருள்பணி சோசா அவர்கள் தன் மடலில் சிறப்பாக எடுத்துரைத்துள்ளார்.

இறை ஊழியர் அருப்பே அவர்களை அருளாளராக உயர்த்தும் வழிமுறைகளைத் தொடங்கும் சிறப்பு நிகழ்வு, 2019ம் ஆண்டு, பிப்ரவரி 5ம் திகதி, அருப்பே அவர்கள், இறையடி சேர்ந்த 28வது ஆண்டு நிறைவன்று, உரோம் நகர் புனித ஜோன் இலாத்தரன் பசிலிக்காவில் நடைபெறும் என்பதையும், இயேசு சபையின் உலகத் தலைவர், அருள்பணி அர்த்தூரோ சோசா அவர்கள், இம்மடலில் குறிப்பிட்டுள்ளார்.




## மேதகு பொம்பை ஆயர் ஆல்லின் பீரூசா ஆண்டகையின் செய்தி

ஏழை கூக்குரலிடுகின்றார், ஆண்டவர் அவர் குரலை கேட்டார் என்ற தலைப்பில் இரண்டாவது உலக வறியோர் நாள் கடந்த மாதம் (கார்த்திகை) 18ம் திகதி சிறப்பிக்கப்பட்டது.

இந்நாளில், புனித அன்னை திரேசாவினால் கூறப்பட்ட வார்த்தைகள் நினைவுகூறப்பட்டது. ஓர் ஏழை மனிதன் பசியால் இறக்கின்றானால் அதற்கு என்ன காரணம் என்பது பற்றி விளக்குகிறார்.

ஒரு மனிதன் பசியால் இறக்கின்றார் என்றார் அது கடவுள் அவரை பராமரிக்கவில்லை என்பது அல்ல மாறாக ஒரு ஏழையின் தேவையை மற்றவர்கள் நிறைவேற்றாமல் விட்டதே காரணம் என்று ஆசிய செய்தியாளர் மேதகு பொம்பை ஆயர் ஆல்லின் பீரூசா ஆண்டகை கூறினார்.

பொம்மை மாநகருக்கு ஏறத்தாழ 200 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கின்ற Raigad இன ஏழைகளை சந்தித்து செபம் செய்து தொடர்ந்து அவர்களை முன்னேற்ற வழியில் நடத்த முயற்சிசெய்கிறேன் என்றும் கூறினார்.

## இராட்ஸிங்கர் அறக்கட்டளை கருத்தரங்கு திருத்தந்தையர் வாழ்த்துக்கள்



மனித உரிமைகள் குறித்து ஐ.நா.அவை வெளியிட்ட அறிக்கையின் 70ம் ஆண்டு சிறப்பிக்கப்படும் இவ்வேளையில், இதனை ஒரு வரலாற்று நிகழ்வாக மட்டும் கொண்டாடாமல், மனித உரிமைகள் குறித்த ஒரு விழிப்புணர்வை உருவாக்கும் தருணமாகவும் இதைக் கருத வேண்டும் என்று, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் ஒரு பன்னாட்டு கருத்தரங்கிற்கு வழங்கிய செய்தியில் கூறியுள்ளார்.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் பெயரால் உருவாக்கப்பட்டுள்ள இராட்ஸிங்கர் (Ratzinger) அறக்கட்டளையும், விண்ணேற்பு அடைந்த அன்னை மரியாவின் பல்கலைக் கழகமான LUMSAவும் இணைந்து, நவம்பர் 15, மற்றும் 16ம் தேதிகளில், உரோம் நகரில் நடத்தும் ஒரு பன்னாட்டு கருத்தரங்கிற்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அனுப்பியுள்ள செய்தியில், இவ்வாறு கூறியுள்ளார்.

இராட்ஸிங்கர் அறக்கட்டளையின் தலைவரான இயேசு சபை அருள்பணியாளர் ஃபெதெரிக்கோ லொம்பார்தி அவர்களுக்கு திருத்தந்தை அனுப்பியுள்ள இச்செய்தியில், மனித சமுதாயம், சுவர்களைத் தகர்த்து, முழுமையான மனித முன்னேற்றத்தில் ஆர்வமாக ஈடுபடவேண்டும் என்பதை இக்கருத்தரங்கு வலியுறுத்தும் என்று தான் நம்புவதாகக் கூறியுள்ளார்.

முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள், தன் உரைகளிலும், மடல்களிலும் முழு மனித முன்னேற்றத்தைக் குறித்து அடிக்கடி குறிப்பிட்டுள்ளதை தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், நடைபெறும் கருத்தரங்கிற்கு தன் ஆசீரை வழங்கியுள்ளார்.

"அடிப்படை உரிமைகளும், உரிமைகளுக்கிடையே மோதல்களும்" என்ற மையக்கருத்துடன் நடைபெறும் இக்கருத்தரங்கிற்கு, முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களும், செய்தியொன்றை அனுப்பியுள்ளார்.

உலகில் நிலவும் பல்வேறு உரிமைகள் குறித்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவிவரும் வேளையில், இத்தகைய ஒரு கருத்தரங்கு மிகுந்த பொருளுள்ளதாக விளங்குகிறது என்று, முன்னாள் திருத்தந்தை அவர்களின் செய்தி குறிப்பிடுகிறது.

இரு திருத்தந்தையரின் வாழ்த்துச் செய்திகளும், இக்கருத்தரங்கின் ஆரம்ப அமர்வில், இவ்வியாழன் காலை வாசிக்கப்பட்டன.



# இவ்வாறு இறைவனிடம் வேண்டுங்கள்

(மத் 6:9)

பகுதி – 9

## திருப்பாடல்களால் வேண்டுவோம்

திருப்பாடல்கள், திருப்பாடல்களைப் பயன்படுத்தாத கிறிஸ்தவ செபம் முழுமையற்றது. காரணம் திருப்பாடல்கள் அந்த அளவுக்கு கிறிஸ்தவ வழிபாட்டிலும், செபவாழ்விலும் முதன்மைத்துவம் பெற்றுள்ளன.

திருப்பாடல்களின்சிறப்புக்களைப்பட்டியலிட்டால் நாம் நிச்சயம் வியப்பில் ஆழ்ந்துவிடுவோம். திருவிவிலியத்தின் செபநூல் என அழைக்கப்படுவது அதன் முதல் சிறப்பு. காரணம், விவிலியத்திலுள்ள 73 நூல்களில் முற்றும், முழுவதுமான ஒரு செபநூல் என்றால், அது திருப்பாடல்கள் மட்டும்தான். அதுமட்டுமல்ல, விவிலியத்தின் அதிக அதிகாரங்களைக் கொண்ட நூல் என்றும் அது அழைக்கப்படலாம். இந்நூலில் 150 திருப்பாடல்கள் உள்ளன. எனவே, 150 அதிகாரங்கள் எனவும் சொல்லலாம்.

மார்ட்டின் லூத்தர் திருப்பாடல்கள் நூலைப் பழைய ஏற்பாட்டின் சுருக்கம் என அழைக்கிறார். அந்த அளவுக்குப் பழைய ஏற்பாட்டின் முதன்மைக் கருத்துக்கள் அனைத்தையும் தன்னகத்தே கொண்டுள்ளது இந்த நூல். குறிப்பாக, படைப்பு (தொ.நூ), மீட்பு (வி.ப), பாலைநிலப் பயணம் (எண்), இறைவாக்கினர்களின் முதன்மைக் கருத்துக்கள் மற்றும் அறிவுரைகள் அனைத்துமே திருப்பாடல்கள் நூலில் காணக்கிடக்கின்றன.

இதன் காரணமாகவே பழைய ஏற்பாட்டின் பகராளி நூலாக இருக்கிறது திருப்பாடல்கள் நூல். எனவேதான், புதிய ஏற்பாடு நூல் தனியாக அச்சிடப்படும்போது, அத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஒரே பழைய ஏற்பாட்டு நூலாக திருப்பாடல்கள் நூல் அமைந்துள்ளது. இரு சமயத்தவர் பயன்படுத்தும் பொது செபநூல் என்னும் சிறப்பு திருப்பாடல்கள் நூலன்றி, வேறெதற்கும் கிடையாது. யூதர்கள், கிறிஸ்தவர்கள் என்னும் இரு சமயத்தவரும் இன்றும் தங்கள் வழிபாட்டில் இந்நூலைப் பயன்படுத்துவது ஒரு வியப்பான உண்மை.

கிறிஸ்தவரின் வழிபாட்டிலும், திருப்பாடல்கள் நூல் தனித்துவம் நிறைந்ததாக உள்ளது. ஆண்டின் அனைத்து நாள்களிலும் தவறாது இடம்பெறும் ஒரே நூல் இதுதானே? முதல் வாசகம் முடிந்ததும், பதிலுரை என்ற தலைப்பில் தவறாமல் ஒரு திருப்பாடல் செபிக்கப்படுகிறதே.

ஒன்றைக் கவனித்திருக்கிறீர்களா? விவிலியத்தின் இந்த ஒரு நூலை வாசிக்கும்போது மட்டும் நாம் இது ஆண்டவர் வழங்கும் அருள்வாக்கு என்று சொல்வதில்லை. அது ஆண்டவரின் அருள்வாக்கிற்கு நமது பதிலுரை என்பதுதான் காரணம். திருப்பாடல்களை வாசித்து முடித்ததும் ஆமென் என்று சொல்வது, அல்லது தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவிக்கும் மாட்சி உண்டாவதாக என்னும் செபத்தைச் சொல்வதே திருச்சபையின் மரபாக இருக்கிறது.

திருச்சபையின் தொடக்ககாலம் முதல் இன்று வரை கடந்த 21 நூற்றாண்டுகளாகத் திருச்சபையின் செபநூலில் காலை, நண்பகல், பிற்பகல், மாலை, இரவு என்னும் ஐந்து வேளையும் திருச்சபை திருப்பாடல்களைப் பயன்படுத்தி இறைவனை வழிபடுகிறது என்பது குறிப்பிடத்தக்க ஒரு செய்தி.

தொடக்கத் திருச்சபையின் காலத்திலேயே திருப்பாடல்கள் சிறப்பிடம் பெற்றிருந்தன என்பதைப் புதிய ஏற்பாட்டு ஆதாரங்களிலிருந்து அறிகிறோம். கொலோசையருக்கு எழுதிய திருமடலில், "திருப்பாடல்களையும், புகழ்பாக்களையும் ஆவிக்குரிய பாடல்களையும் நன்றியோடு உளமாரப் பாடிக் கடவுளைப் போற்றுங்கள்" (3:16) என்று பவுலடியார் அறிவுரை சொல்வதைப் பார்க்கின்றோம். அவரே எபேசியருக்கு எழுதிய கடிதத்தில், "உங்கள் உரையாடல்களில் திருப்பாடல்கள், புகழ்பாக்கள், ஆவிக்குரிய பாடல்கள் இடம்பெறட்டும், உளமார இசைபாடி ஆண்டவரைப் போற்றுங்கள்" (5:19) என்கிறார். இயல்பாக ஒருவருக்கொருவர் உரையாடும்போது கூடத் திருப்பாடல்களைப் பயன்படுத்திச் சொல்வது நம் கவனத்தை ஈர்க்கிறது. "உங்களுள் யாரேனும் துன்புற்றால் இறைவேண்டல் செய்யட்டும். மகிழ்ச்சியாயிருந்தால் திருப்பாடல்களை இசைக்கட்டும்" (யாக் 5:13) என்று திருத்தூதர் யாக்கோபு எழுதியுள்ளார். இக்குறிப்புக்கள் தொடக்கத் திருச்சபை திருப்பாடல்களைத் தன் வழிபாட்டிலும், வாழ்விலும் பயன்படுத்தியது என்பதன் ஆதாரங்களாகத் திகழ்கின்றன. ஏன், இயேசுவே தமது வாழ்வில் திருப்பாடல்களை நன்கு அறிந்திருந்தார். அவைகளை இறைவேண்டலுக்கும், அறிவுரைகளுக்கும், மறை விவாதங்களுக்கும் பயன்படுத்தினார் என்பது இன்னும் கூடுதலான மதிப்பைத் திருப்பாடல்களுக்கு வழங்குகிறது.

எல்லா யூதக் குழந்தைகளைப் போலவே, இயேசுவும் தமது சிறு வயதில் திருப்பாடல் 113-118 என்னும் ஆறு திருப்பாடல்களையும் மனப்பாடமாக அறிந்திருந்தார் என்று கொள்ளலாம். அதுமட்டுமல்ல, தொழுகைக்கூடங்களுக்குச் செல்லும் பழக்கத்தைக்



கொண்டிருந்த இயேசு, அங்கே பிற யூதர்களோடு இணைந்து திருப்பாடல்களைச் செபித்தார் என்றும் புரிந்துகொள்ளலாம். சிலுவையில் சாகுமுன்னர் அவர் சொன்ன, "என் இறைவா, என் இறைவா, ஏன் என்னைக் கைவிட்டீர்?" (மத் 27:46) என்ற சொற்கள் திருப்பாடல் வரிகள் (22:1) என்பதை நாம் அறிவோம். பரிசேயர்களுடன் திருப்பாடல் 110ஐ மேற்கோள் காட்டி மெசியா (தாம்) தாவீதின் மகன் மட்டுமல்ல, தாவீதுக்கும் தலைவர் (மத் 22:41-46) என எண்பித்து, அவர்களின் வாயை அடைத்த நிகழ்வும் இயேசு திருப்பாடல்களை நன்கு அறிந்திருந்தார் என எண்பிக்கிறது.

அவர்கள் புகழ்ப்பாடல் பாடிவிட்டு ஒலிவ மலைக்குச் சென்றனர் (மாற் 14:26) என்னும் தரவில் குறிப்பிடப்படும் புகழ்ப்பாடல் திருப்பாடல் 136 என்கின்றனர் விவிலிய அறிஞர்கள். தம் சீடர்களுடன் இணைந்து திருப்பாடல்களைப் பாடும் பழக்கம் நிச்சயமாக இயேசுவிடம் இருந்திருக்க வேண்டும். புனித அகுஸ்தினார் இயேசுவைத் "திருப்பாடல்களின் இனிமைமிகு பாடகர்" என அழைத்துள்ளார். அனைத்திற்கும் மேலாக, மானிட உணர்வுகளான மகிழ்ச்சி, துயரம், கவலை, அச்சம், நம்பிக்கை, நம்பிக்கையின்மை, அவமானம் போன்ற அனைத்து உணர்வுகளையும் இறைவேண்டலாக வெளிப்படுத்தும் வாய்க்கால்களாக அமைந்துள்ளன திருப்பாடல்கள். எனவே, நமது அன்றாட வாழ்வுச் சூழல்களின் தேவைக்கேற்ப, வெவ்வேறான திருப்பாடல்களை பயன்படுத்தி நாம் செபிக்கலாம். இத்தனைச் சிறப்புக்கள் நிறைந்த திருப்பாடல்களை நாம் நமது அன்றாட செபத்தில் இணைத்துக்கொள்ள வேண்டும். திருப்பாடல்களை செப வாழ்வில் இணைப்பதற்கான சில பரிந்துரைகள்.

திருப்பாடல் 23,34,91,103,121,131, மற்றும் 150 போன்ற முத்தான திருப்பாடல்களில் சிலவற்றை மனப்பாடம் செய்து, நாள்தோறும் தனியாக, குழுவாக, சமூகமாகச் செபிக்கலாம். குடும்பமாக, குழுவாகச் செபிக்கும்போது திருப்பாடல்களை இரு குழுக்களாகப் பிரித்து செபிக்கலாம். இசையமைக்கப்பட்டுள்ள திருப்பாடல்களைப் பாடிச் செபிக்கலாம். நம் வாழ்வின் சூழல், உணர்வுகள், தேவைக்கேற்றவாறு திருப்பாடல்களைத் தேர்ந்தெடுத்து செபிக்கலாம்.

**தொடரும்**

## மனம் திரும்புவோம்

### கிறிஸ்மஸ் நெருங்கிவிட்டது.



மார்கழி பிறந்தாலே கிறிஸ்மஸ் மகிழ்வு நமக்குள் பிறந்துவிடுகின்றது. நட்சத்திரமும், கிறிஸ்மஸ் குடிலும், உள்ளத்தில் உற்சாகத்தைப் பிறப்பிக்கின்றது. வாழ்த்து அட்டைகள் வழக்கொழிந்து போனாலும், எஸ்.எம்.எஸ் வழியாகக் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களைப் பகிர்ந்து கொள்கின்றோம்.

முதல் கிறிஸ்மஸ் அன்று வானதூதர்கள் வாழ்த்துப்பாடினார்கள். மகிழ்வைப் பகிர்ந்தார்கள். இதற்கு முன்னே வந்த திருமுழுக்கு யோவான் வாழ்த்துச் சொல்லவில்லை. எச்சரிக்கை கொடுத்தார். "மனந்திரும்புங்கள், விண்ணரசு நெருங்கிவிட்டது" என்று. ஆம் கிறிஸ்மஸ் கொண்டாடுவதற்கு காலம் நெருங்கிவந்துவிட்டது. எம் பாவ உணர்வுகளை வெளிக்கொணர்ந்து நல்ல பாவசங்கீர்த்தனம் செய்து கிறிஸ்மசுக்கு ஆயத்தப்படுத்துவோம். ஏழ்மையாக, எளிமையான உள்ளம் கொண்டு ஏழைகளுக்கு உதவுவோம். பகைமை உள்ள இடத்தில் அன்பை பகிர்வோம். இதற்கு மனம் திரும்புவோம்.

padippakam.org

# தேவனின் திசை மாறிய பறவை

## புனித பிரான்சிஸ் சவேரியார்

*சிந்தனை :- "ஒருவன் தன் ஆன்மாவிற்குக் கேடு விளைவித்து உலகையெல்லாம் தனதாக்கிக் கொள்வதனால் அவனுக்கு வரும் பயனென்?"*

*மாற்கு. 8:36*

## மார்கழி –03



ஆமா உன் குறிக்கோளைப்பற்றி சொல்லலையே? சேவியரை நோக்கி என் கேள்வியை தொடுத்தேன். என் பேர் கொண்டவரைப்போல் ஆவதுதான் என் குறிக்கோள். இன்னும் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டுமென்றால் நீங்க இந்த புத்தகத்தை வாசித்துப் பாருங்க. நான் யார்போல் வாழப்போறேன்னு தெரிஞ்சுகிடுவீங்க.

அவனிடமிருந்து என் கைக்கு மாறிய புத்தகத்தின் தலைப்பு 'தேவனின் திசை மாறிய பறவை'

ஸ்பெயின் தேசத்தில் நவாரே என்ற உயர் குடும்பத்தில் ஜுவானுக்கும் மரியாளுக்கும் மகனாக பிரான்சிஸ் 1506 சித்திரை ஏழாம் நாள் பிறந்தார். ஐந்து பிள்ளைகளில் இவர் கடைசி. சேவியர் என்ற கோட்டை தாய்க்குச் சீதனமாக வந்தது. எனவே பிரான்சிஸ் என்ற பெயரோடு சேவியர் என்ற பெயரையும் இணைத்து பிரான்சிஸ் சேவியர் எனத் தாய் அழைத்து மகிழ்ந்தாள்.

அகில உலகப் புகழ்பெற வேண்டுமென்பது சேவியரின் பூர்வீக விருப்பம். பாரீசில் படித்து எம்.ஏ.பட்டம் பெற்ற இவருக்கு கல்லூரி பேராசிரியராக நியமனம் கிடைத்தது. இவரது நண்பர் பேபர். திருமணம் தொடங்கி தேசமெங்கும் கீர்த்தியுடன் வாழவேண்டுமென்பதுவரை காரசாரமாக இவர்கள் விவாதிப்பர்.

"கிறிஸ்துவின் சிலுவை வாழ்வுக்கு என்னிடம் இடம் இல்லை" என்று வாதத்தின் முடிவில் பிரான்சிஸ் அடிக்கடி கூறுவார்.

இது இவ்வாறு இருக்க, 1528ஆம் ஆண்டு மாசி மாதத்தில் இன்னாசியார் தம் 38ஆம் வயதில் பாரீசுக்கு படிக்கவந்தார். படிப்போடு பணியாக ஆன்மீக பயிற்சி என்ற தம் அனுபவங்களை பயிற்சி வடிவில் உருவாக்கி பல மாணவர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் பக்குவமாய் கொடுத்துவந்தார். பேபர் இப்பயிற்சியில் பங்கெடுத்தார். உலகியல் கண்ணோட்டத்தைவிட்டு ஆன்ம வாழ்வில் அடியெடுத்து வைத்தார்.

தன் புண்ணிய வலையில் சேவியரை விழத்தாட்ட பல நாட்கள் ஆகியது இன்னாசியாருக்கு. உலகத்தை ஒருவன் ஆதாயமாக்கி ஆன்மாவை இழந்துவிட்டால் பயன் என்ன என்று செவிச் சங்காக பார்க்கும் வேளையிலெல்லாம் சேவியர் காதில் ஊதினார். 'எறும்பூர கல்லும் தேயும்' அல்லவா! காலம் கனிந்தது. முன் குறித்திருந்த உலகப் புகழ் என்ற திசையிலிருந்து கிறிஸ்து புதுவாழ்வுக்குத் தன்னையே தாரைவார்க்கும் ஒரு பறவையானார் சேவியர். மௌனம், கடின தபசு, ஒறுத்தல் போன்ற முயற்சிகள் வாலாகவும் இறக்கைகளாகவும் இவ் வான்பறவைக்கு கை கொடுத்தன. கிறிஸ்துவை நெருங்கி பின்பற்றும் யாத்திரை இன்னாசியாரின் மேற்பார்வையில் தொடர்ந்தது.

யாத்திரையின் ஒரு கட்டத்தில் தொழுநோயாளர் மத்தியில் பணி செய்யும் சந்தர்ப்பம் வந்தது. என் முதுகை சொரிந்து விடுங்கள். அருவருப்பும் பிணவாடையும் வீசும் தொழுநோயாளியின் வாய்ச்சொற்கள் இவை. அவனைச் சொரிந்து தனது சுபாவத்தை மேற்கொண்டார் சேவியர்.

1537ல் குருப்பட்டம் பெற்று அதே ஆண்டில் வெள்ளிக்கிழமையில் பலி நிறைவேற்றினார். பரவசமானார். ஒரு மணி நேரமாகியும் தன்னுணர்வுடன் வராததுகண்டு பலிபீடச் சிறுவன் அங்கியைப் பிடித்திழுத்தான். பலனில்லை. பணியினை மேற்கொண்ட வேளை இவரைப் பலமணி நேரம் பாவசங்கீர்தனத் தொட்டியில் காண்பதும், ஏழைகளுக்கு உதவுதல், நோயுற்றோரை, சிறைப்பட்டோரை சந்தித்தல் ஞான உபதேசம் குழந்தைகளுக்குக் கற்பித்தல் போன்ற பணிகளில் பக்தி சிரத்தையுடன் ஈடுபட்டிருப்பதைக் காண்பதும் மக்களுக்கு வாடிக்கையான ஒரு நிகழ்ச்சியாகியது.

1538 லிருந்து 1541 வரை இன்னாசியாரின் செயலாளராகப் பணிசெய்த வேளை தந்தை போபடில்லா சுகவீனமுற்றார். அவருக்குப் பதிலாக சேவியரை போர்துக்கலுக்கு வேதபோதகப் பணிக்காக இன்னாசியார் தெரிவு செய்தார். 24 மணி நேரத்திற்குள் சேவியர் தயாரானார். 13 மாத கப்பல் பயணத்தில் தமக்கு தேவையான எளிய உணவைத் தானே சமைத்தார். கப்பலில் நோயுற்றோருக்கும், ஏழைகளுக்கும் துயரத்தில் ஆழ்ந்தோருக்கும் உதவிசெய்து தன் போதனைப் பணியிலும் ஈடுபட்டு எல்லோரின் உள்ளத்தையும் கவர்ந்தார்.

கோவிலிலும், பின்பு தமிழகத்திலும் மொழி தெரியாத நிலையில் ஊர் ஊராகச் சென்று மொழிப் பெயர்ப்பாளர்களாகச் செயல்பட்ட வேதியர்கள் உதவியால் எண்ணில்லா மாந்தருக்கு நடந்துசென்று ஞானஸ்நானம் கொடுத்தார். கடவுளின் மறை போதகத்திற்கு குழந்தைகளையும் பெரியவர்களையும் மணி அடித்து கவர்ந்திழுப்பது இவருக்கு கைவந்த கலை.

இஸ்லாமியர், பிராமணர், கிறிஸ்தவ மறையைத் தழுவுவதில் இவர் கருத்தாயிருந்தார். திருவிதாங்கூரில் 45 கிறிஸ்தவ குழுக்களை ஏற்படுத்தி கிறிஸ்தவ செபங்களை, பாடல்களை நல்ல மொழி மாற்றம் செய்து வேதம் போதித்தார்.

"ஆண்டவரே எனக்குள்ள எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு ஆன்மாவை மட்டும் எனக்குத் தாரும்" என்று அடிக்கடி மனவல்ய செபமாகச் சொல்லி வந்தார். மக்களின் துயர்களில் பங்கு கொண்டு பலரை கிறிஸ்தவ மறைக்கு தனது முன்மாதிரிகையால் கொணர்ந்தார்.

மலாக்கியாவில் 4 மாதங்கள் உழைத்தார். ஜப்பான் சென்று 40 நாட்களில் ஜப்பான் மொழியில் பத்து கட்டளைகளை மனப்பாடம் செய்தார். சான்சியன் தீவுக்கு வந்த இவர் அங்கிருந்து சைனா செல்ல கடுங்காய்ச்சல் அவரைத் தாக்கவே சைனாவுக்குள் நுழைந்து வேதம் போதிக்கும் ஆசை நிறைவேறவில்லை.

காய்ச்சல் வந்தபின் மௌனமானார். தன்னுணர்வு குறையத் தொடங்கியது. யாரையும் அடையாளம் காண முடியவில்லை.

'இயேசுவே, தாவீதின் மகனே என்மேல் இரங்கும்' என்று சொல்லிக்கொண்டிருந்தார். இறுதியில் இயேசு பெயரை உச்சரித்து 1552 மார்கழி 3ஆம் நாள் உயிர் நீத்தார். உடல் மாலாக்கா கொண்டு வரப்பட்டது. ஒரு வருடத்திற்கு பின் கோவா மக்களின் வற்புறுத்தலின்பேரில் பழைய கோவா பாம் இயேசுவின் ஆலயத்தில் அடக்கம் செய்யப்பட்டது. 14ஆம் நூற்றாண்டிலிருந்து புதுமையான முறையில் உடல் இன்னும் அழுகாமல் உள்ளது என்று மருத்துவ அறிக்கை தெரிவிக்கிறது. திசை மாறிய பறவையான நிலையில் தன்னை பிறர் புகழ வேண்டும் என்பது மாறி, தான் இயேசுவை போதிக்க வேண்டுமென்று விரும்பி அவ்வாறு செயல்பட்டார். அப்போஸ்தலர்களுக்குப் பின் இவர்தான் பெரிய போதகர். புனித சின்னப்பர்போல் இவர் புறவினத்தாரின் அப்போஸ்தலர், வேத போதகர்களின் காவலர்.

**இயேசுவின் மறையினைப் பரப்பிடவே**
**ஜீவனை இழந்திட துணிந்தவரே**
**செம்மலே சேவியர் மாமுனியே**
**ஜெயம் ஜெயம் எனக் குரல் முழங்குகின்றோம்.**

**அனைத்தும் அகன்றிட வேண்டுமென்றாய்**
**ஆன்மா கிடைத்திட வேண்டுமென்றாய்**
**ஆண்டவன் அருளில் நிலைத்திருந்தாய்**
**ஆண்டாண்டளவாய் வாழுகின்றாய்**

**புனித நல் இனிகோ உமைத் தொடர்ந்தார்**
**புவி புகழ்க்கெதிராய் போர் தொடுத்தாய்**
**போதர் இயேசுவின் அடி தொடர்ந்து**
**புண்ணிய வாழ்வினுக் குதவி செய்வாய்**

**பல மைல் நடந்து இறை அரசை**
**பாரதமெங்கும் பரப்பிவிட்டாய்**
**பளிச்சிடும் ஆன்ம தாகத்தினால்**
**பலரை கிறிஸ்தவ நெறிக்கிழுத்தாய்**

**ஆன்மா அழிந்திடச் செய்கின்ற**
**ஆஸ்தியும் அரும்புகழ் எல்லாமும்**
**அடைவதில் பயனெதும் இல்லையென்று**
**ஆழமாய் மனதில் உணர்ந்தவரே.**



# அமலோற்பவ அன்னை

நம் உதிரத்தோடு ஒன்றாகக் கலந்துவிட்ட உன்னதமான சொல்! அன்றாடம் நம் நாவில், நளினமாக நர்த்தனமாடும் தேன் கலந்த சொல்! அருள் நிறைந்த மரியே வாழ்க! மூவேளைச் செபத்திலும், (திரிகாலச் செபம்) தினம் போற்றும் செபமாலை செபத்திலும் மறக்காமல் நம் இதயம் வாழ்த்தும் பொருள் நிறைந்த சொல் அருள்நிறைந்த மரியே வாழ்க!

நற்செய்தியின் தொடக்கத்திலேயே, கபிரியேல் வானதூதர் வாழியாக நற்சாட்சிப் பத்திரம், அருள் நிறைந்தவளே வாழ்க! கடவுளின் மகனையே தம் திருவயிற்றில் தாங்கும் நற்பேறுபெற்ற மரியாளை ஜென்மப் பாவம் கறைப்படுத்தவில்லை. கிறிஸ்து நாதரின் மீட்பின் வல்லமை மரியாவை கர்ம பாவத்திலிருந்து காத்து நின்றது. கடவுளையே கருத்தாங்கும் பேறுபெற்ற திரு பெட்டகம். களங்கமற்றுத் திகழ வேண்டுமென்பது கடவுளின் சித்தம். அதனால் தான் மரியாளை - அமலோற்பவி என்று போற்றுகின்றோம்.

மார்கழி 8ம் நாள் மரியின் அமலோற்பத் திருநாள். அந்நாளில் அன்னையின் கற்பும், தாழ்ச்சியும், அவசர காலத்தில் உதவும் நற்பண்பும் கொண்டு வாழ அன்னையிடம் மன்றாடுவோம்.



## 01 போதைப்பொருள்...

பழுனுகம மற்றும் கந்தானை வட்டாரங்களில் வசிக்கும் இறைமக்கள் போதைப்பொருள் ஒழிப்புக்கான பாததைகளை கையிலேந்திக் கொண்டு, துடெல்ல தேவாலய பூமிக்கு பவனி மூலம் வருகைத் தந்தனர். "சீதுவை சுபவத் அரண" நடுநிலைய இயக்குனர் அருட்பணி. டெரல் கூஞ்ஞே அவர்கள் இவ் வழிபாட்டை நடத்தினார். நற்கருணை ஆசீரும் இடம்பெற்றதுடன் இதற்கு அவ்வட்டார குருவானவர்களும், இறைமக்கள் பெரும்பாலானோரும் கலந்து கொண்டனர். ஜா-எல பங்குத் தந்தை அருட்பணி. பிரிய ஜயமான்ன அடிகளார் உள்ளிட்ட அவ்வட்டாரக் குருக்கள் இந்நிகழ்வை ஒழுங்கு செய்திருந்தார்கள்.

**தகவல் : T. சுனில் பர்னாந்து, ஹோஷான் பிரதீப்**

## 01 வேர்பூம்...

கொண்ட ஒரு குழு பங்கேற்கலாம். தேசிய மறைக்கல்வி நடுநிலையத்தின் வழிகாட்டலின் கீழ் இவற்றை ஒழுங்கு செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இந்நிகழ்ச்சிக்கு "மில்க்ரீஸ் எக்ரிடெக் நிறுவனம்" அனுசரணை வழங்குகின்றது. 5 போட்டிச் சுற்றுக்களும் 3 கேள்விச் சுற்றுக்களும் கொண்டு இவை இடம்பெறும். இப்போட்டியில் 2019ஆம் ஆண்டில் தரம் 9, 10 மற்றும் 11ல் கல்வி கற்கும் மாணவர்கள் மட்டுமே பங்கேற்கலாம் என இயக்குனர் குழாமினர் அறிவித்துள்ளனர்.

சிங்கள மொழி மூலம் இப்போட்டி நிகழ்வை நடாத்துவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருப்பினும், தமிழ் மொழி பேசுபவர்களால் விண்ணப்பங்கள் கோரப்பட்டால், அவர்களுக்காகவும் இப்போட்டி நிகழ்ச்சியை நடாத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம். இலங்கையின் முதல் கத்தோலிக்க தொலைக்காட்சியாகிய வேர்பூம் தொலைக்காட்சி 011 4322900 என்ற இத்தொலைபேசி இலக்கத்தின் மூலம் அழைப்புவிடுத்து, இப்போட்டி நிகழ்வு குறித்து மேலதிகத் தகவல்களை பெற்றுக்கொள்ளவும்.

## 01 கொழும்பு உயர்மறை...

கருத்து தெரிவித்த கர்தினால் ஆண்டகை, கடந்த வருடத்தில் நத்தார் காலத்தில் மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொள்கையில், இச்சிறார்களோடும், அவர்களோடு வருகைத்தரும் அப்பெற்றோர்களுக்கும் தங்குமிட வசதிகளை செய்து தருமாறு கர்தினால் ஆண்டகையிடம் கோரிக்கை விடுத்ததாகவும், அக்கருத்துக்களே இவ்வாறான தங்குமிட வசதிகளைச் செய்யத் தூண்டியது எனவும் கர்தினால் ஆண்டகை குறிப்பிட்டிருந்தார். மேலும் இக்காணியை கொள்வனவு செய்வதற்கு உதவிய நன்கொடையாளர்களுக்கும், பிரதான பங்களிப்பு வழங்கிய கொழும்பு எக்சஸ் நிறுவனத்தின் தலைவர் சமல் பெரேரா அவர்களுக்கும், அத்திட்டங்களை ஒழுங்கிணைத்த டியோ பர்னாந்து அவர்களுக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.

மஹரகம பங்கின், பங்குத்தந்தையான அருட்பணி. யூட் நிக்லஸ் அடிகளாரின் பங்களிப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. இங்கு தங்குமிட வசதிக்கு மேலாக பல சேவைகளை வழங்குவதற்கு திட்டமிடுவதோடு, பேதங்களின்றி அனைவரும் இங்கு வருகைதருவதற்கான மற்றும் கட்டணம் அறவீடு இன்றி இப்பணிகள் இடம்பெறும் என்பதனையும், மஹரகம புற்றுநோய் வைத்தியசாலையின் பிரதான வைத்தியர் மற்றும் பங்குத்தந்தை அருட்பணி. யூட் நிக்லஸ் அடிகள் தெரிவித்திருந்தார்.

## 02 கர்தினால் ஆண்டகை...

ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் ஜனாதிபதியின் விருப்பத்தினைப் பெற்றுக்கொள்வதற்கே ஆகும். அச்சந்தர்ப்பத்தில் தேர்தல் ஆணையாளரும் அங்கு வந்திருந்ததை நாம் கண்டோம் எனினும் அவ்வாறான தேர்தல் குறித்து எவ்விடயமும் அங்கு பேசப்பிவிடல்லை. மேலும் சரத் நந்த சில்வா அமைச்சரை நாம் முகத்திற்கு முகம் கூட சந்திக்கவில்லை. ஜனாதிபதி எமது வேண்டுகோளை ஏற்று, அத்தரப்பினர்களுடன் கதைப்பதற்கான அனுமதியை எமக்கு அளித்தார் என்பதை நான் குறிப்பிடவேண்டும். எனினும் பாராளுமன்றத்தைக் கலைத்து, தேர்தல் நடாத்தப்படுவது குறித்து எம்மிடம் கலந்துரையாடவில்லை. அதைப்பற்றி நாம் அறிந்துகொண்டது, அத்தினம் இரவு வேளையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் செய்திகள் மூலமே ஆகும். இதற்கிணங்க இப்பாராளுமன்ற கலைப்புப் பற்றிய அறிவிப்பின் பின்பு, நாம் முன்கூட்டியே கலந்துரையாடிய விடயங்களுக்கு முறையாக தீர்வு காணும் முயற்சியைக் கைவிடநேரிட்டது. எனவே, நான் அன்று அங்கு சென்றிருந்தது பாராளுமன்றத்தை கலைக்கும் விடயம் பற்றி பேசுவதற்கல்ல. மாறாக மேற்குறித்த விடயம் குறித்து கலந்தாலோசிக்கவே ஆகும். இதன் நிமித்தம் நான் அன்று ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்திற்கு சென்றமை குறித்து கூறப்படும் தவறான கருத்துக்களை தெளிவான விளக்கத்தினை வழங்கவே நான் இத்தகவலைக் குறிப்பிடுகின்றேன்.

கொழும்பு மட்டக்குளியில் அமைந்திருக்கும் சிறுவர் இல்லத்தில் கத்தோலிக்கர், நல்ல உடல் நலத்துடன் இருக்கின்ற ஏழைக் குடும்பத்தில் உள்ள சிறுவர்கள் வயது 6-10க்குள் சேர்த்துக்கொள்ளப்படுவர். உணவு, கல்வி, தங்குமிடம் இலவசம். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.

**மவுசெவன (MAW SEVANA) சிறுவர் இல்லம்,**
**இல 12, மத்திய வீதி, கொழும்பு 15. தொ. இல 0112529560**
**(காலை 9.30 – 1.30 வரை) திங்கள் – வெள்ளி**

(N 4421)

## 03 திருவருகை ஆன்மீகத்தில்

மங்கள வார்த்தை, மரியாள் எலிசபெத்தம்மாளை சந்தித்தல், மரியன்னையின் பாடல் போன்றன இயேசுவின் பிறப்பினை எதிர்பார்த்து இருக்கும் எமக்கு ஒரு நம்பிக்கையைத் தருகின்றது. எனவே திருவருகைக்கால ஆன்மீகத்தில் "மரியன்னையின் ஆன்மீகம்" சிறப்பான இடத்தினை பெறுகின்றது. இயேசுவின் வாழ்வில் மரியாள் முக்கிய இடம்பெறுகின்றார். எனவேதான் திருச்சபையானது அன்னை மரியாளுக்கு அதி உயர்ந்த வணக்கத்தினை கொடுக்கின்றது. மரியன்னையுடன் இணைந்து திருவருகைக்காலத்தில் நாமும் கிறிஸ்துவின் பிறப்பினை எதிர்பார்த்து மகிழ்வோம். அன்னை உடல் ரீதியாகவும், ஆன்மீக ரீதியாகவும் ஆயத்தம் செய்தது போல நாமும் ஆயத்தம் செய்வோம். கிறிஸ்துவின் பிறப்பை கொண்டாடி மகிழ்வோம்.

## 05 திருவருகைக்காலத்தில்...

வெளியிலிருந்து கூடாரத்திற்குள் ஓடி வந்து, "எல்லோரும் வெளியே ஓடுங்கள், வெளியில் தீப்பிடித்துக் கொண்டது. எல்லோரும் வெளியே ஓடி உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுங்கள்" என்று கூச்சலிட்டான். சர்க்கஸ் ஆரம்பிக்க இருந்ததால் யாரும் அவனுடைய வார்த்தைக்கு செவி கொடுக்கவில்லை. மீண்டும் அந்த கோமாளி ஓடி வந்து மக்களை எச்சரித்தான். ஆனால் மக்கள் அவன் கோமாளி என்பதால் வேடிக்கைச் செய்கின்றான் என்று அசட்டையாக இருந்தார்கள். அப்போது தீ மளமளவென கூடாரம் முழுவதும் பரவி எல்லோரும் தீயில் கருதி செத்தனர்.

**சிந்தனைக்கு**

ஆம், திருவருகைக்காலம் ஒரு எச்சரிப்பின் காலம். இயேசுவின் வருகையையொட்டி நாம் எவ்வாறு மனம் திருந்தி, மனம் மாறி, ஆண்டவரின் வருகைக்காக தயார் செய்யவேண்டும் என்று நமக்கு எச்சரிக்கை மணி ஒலிக்கப்படுகின்றது. நாம் என்ன செய்யப்போகின்றோம்? மனம் வருந்துவோம்! மனம் திருந்துவோம். நம்பிக்கையோடு ஆண்டவரின் வருகைக்காக தயார் செய்து காத்திருப்போம்.

## 08 இயேசு யார்?

**(இ) ரூத்து :**

போவாமியப் பெண். இவர் தன் கணவன் இறந்துபோக, போவாசு வழியாக இஸ்ரயேல் குலம் நிலைக்க செய்கிறார். இவரது மகனே தாவீதின் தாத்தா (ரூத்து 3:6-14)

**(ஈ) பத்சேபா :**

இவர் இத்தியனான உரியாவின் மனைவி. தாவீதின் இச்சைக்கு பலியாகியவர். உரியாவை தாவீது கொலை செய்தார். முதல் மகன் இறக்க, இரண்டாம் மகன் சாலமோன், தாவீதைத் தொடர்ந்து அரியணை ஏற்றியவர். இவர்கள் நால்வர் வாழ்விலும் திருமண உறவு பிரச்சினைக்குரியதாய் அமைந்திருந்தது. இத்தகைய சிக்கல்களுக்கு மத்தியிலும் இறைவனின் கரம் செயலாற்றுகின்றது. ஈற்றில் 5வது பெண்ணை அறிமுகம் செய்கிறார் நற்செய்தியாளர் மத்தேயு. அவர்தான் மரியா. இவர் வாழ்விலும் திருமண உறவிலும் ஓர் சிக்கல். இவர் கணவரோடு கூடிவாழும் முன்னரே கருவினை சுமக்கிறார். இவர் கணவர் யோசேப்பு நீதிமான், நேர்மையாளர். மரியாவை மறைவாக விலக்கிவிட தீர்மானிக்கின்றார். ஆனால் இது இறைவனின் செயல் என்பதை கனவின் வழியாக அறிவிறார். இறைவனின் ஆவியின் வல்லமையால் இயேசுவை கருவில் சுமக்கின்றார்.

**முடிவுரை**

ஆபிரகாம் வழியாக செயல்பட்ட இறைவன், இன்றும் பிரமாணிக்கமாக செயலாற்றுகின்றார். இவ்வரலாறு தூய்மையான வரலாறு அல்ல. புனிதர்களும் பாவிகளும் உள்ளடங்குவர். நேர்மையாளரும் உண்டு. நெறிபிறழ்ந்தவர்களும் உண்டு. பேதுரு மறுதலித்தார். பவுல் துன்புறுத்தினார். கரடுமுரமும் உண்டு. கோணலும் நேரும் உண்டு. இவை ஒவ்வொன்றிலும் இறைக்கரம் செயலாற்றியது. இவ்விறைவனின் கரம் இன்றும் உன் வாழ்வில், என் வாழ்வில் செயலாற்றுகிறது. என் கரடு முரடிலும், கோணல் நேரிலும், பாவத்திலும், புண்ணியத்திலும் இறைவன் செயலாற்றுகின்றார். மேலே கண்ட பெண்களைப் போல முக்கியமற்றவர்களாக, பிரபல்யம் அற்றவர்களாக, செல்லாக் காசாக கூட நான் இருக்கலாம். என் வழியாகவும் இறைவன் செயலாற்ற வல்லவர். இதுவே நம்பிக்கை. அதுவே நல்ல செய்தி.

## XX இலங்கைவாழ்...

செய்தாலே போதுமான, உடன் வாழ்பவர்களுக்கு மட்டுமல்ல, தொலைவில் இருப்பவர்களுக்கும் நம் செப உதவியால் உறுதுணையாக இருக்கமுடியும் என்பது இவரின் மறைபரப்பு பணி அனுபவம். இதனால்தான் நான்கு சுவற்றுக்குள் வாழ்ந்த இவரை திருச்சபை "மறைபரப்பு நாடுகளின் பாதுகாவலி" என்று புகழாரம் சூட்டி பெருமை அடைகிறது. இறைவனோடு நெருங்கிய உறவுகொண்டு, தொடர் செபத்தில் ஈடுபட்டு திருச்சபைக்காவும், உலகம் முழுமைக்கும் செபிப்பது கார்மெல் முதன்மையான பணி "செபம்தான் கார்மெல் சபையின் ஊற்றும், உயிரும். இதனை பரப்ப 3 காரியங்கள் தேவை : மௌனம், தனிமை, மற்றும் தியாகம், இவையன்றி கார்மெல் சபையில்லை, கார்மெல் சபையின்றி செபம் இல்லை" - திருத்தந்தை 13ம் சிங்கராயர். இக்கூற்றுக்கு ஏற்ப கார்மெல் சபையினர் அகில உலகமெங்கும் தங்களின் ஆன்மீக நற்செய்தி பணியினை, செபவாழ்வை அருட்தந்தையினர், அருட்சகோதரிகள், பொதுநிலையினர் அனைவரும் திறம்பட செய்து கொண்டிருக்கின்றனர். எனவே இவர்களின் பணிவாழ்வும், செபவாழ்வும் சிறக்க செபிப்போம்.

**கார்மெல் அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள், பொதுநிலையினர்.**

## 01 இறையியல் மாணவ...

மாணவ மாணவியர் அனைவரும் தேவையான ஆவணங்களுடன் அன்று மாலை 4.00 மணி தொடக்கம் 6.30 மணிவரை மேற்குறிப்பிடப்பட்ட வகுப்பறையில், நேர்முகப்பரீட்சையில் கலந்து கொள்வதோடு இறையியல் கற்கை நெறிக்கான விண்ணப்பப்படிவத்தையும் பெற்றுக்கொள்ளலாம். இறையியல் கற்கை நெறி பதிவுப் பணமாக ரூபாய் 500 அறிவிடப்படும் என்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

**அருட்தந்தை. றெஜினோல்ட் லூசியன்**
**இயக்குனர்,**
**தொ.பே.இல 011 – 2446123, 071 – 8299151**

## இருநூறு குழந்தைகளின் தாயான இளம்பெண்

அமெரிக்க ஐக்கிய நாட்டின் நியூ ஜெர்சி மாநிலத்தில், 1986ம் ஆண்டு பிறந்த மேகி டோய்ன் (Maggie Doyne) அவர்கள், தன் 18வது வயதில், பள்ளிப்படிப்பை நிறைவு செய்து, கல்லூரி படிப்பைத் தொடர்வதற்குமுன், ஓராண்டு விடுமுறை எடுத்து, உலகைச் சுற்றிப்பார்க்கக் கிளம்பினார். இந்தியாவுக்கு வந்து சேர்ந்த இளம்பெண் மேகி அவர்கள், இமயமலை அடிவாரத்தில் தனக்கு ஏற்பட்ட ஓர் அனுபவத்தை இவ்வாறு பகிர்ந்துள்ளார்:

"நான் ஒரு நாள், சாலையில் நடந்து சென்ற வேளையில், ஒரு சிறுமி, அவளது வயதுக்கு மீறிய சுமையை, முதுகில் சுமந்தவண்ணம் எனக்கெதிரே வந்தாள். என்னைக் கண்டு மிக அழகாகப் புன்னகை செய்தாள். அவளது பெயர் இலக்கோரா (Lacora) என்பதையும், அவள் ஓர் அனாதை என்பதையும் அறிந்தேன். அச்சிறுமி, ஒவ்வொரு நாளும் ஊருக்குள் சென்று, பேருந்தில் வந்திறங்கும் பொருள்களை, மலையுச்சியில் இருக்கும் தன் கிராமத்திற்கு எடுத்துச் சென்றாள். ஒருநாளில், இரண்டு, அல்லது, மூன்று முறை அவ்வாறு சுமைகளை எடுத்துச்செல்லும் அச்சிறுமி, தனக்குக் கிடைக்கும் 1 அல்லது 2 டாலர் ஊதியத்தைக் கொண்டு, தன் தம்பி, தங்கைக்கு உணவளித்து வந்தாள். அவளது நிலையைக் கண்டு என் மனம் சுக்கு நூறானது. நேபாளத்தில் நிகழ்ந்து வந்த உள்நாட்டு போரினால், இலக்கோரா போன்ற பல்லாயிரம் குழந்தைகள், அனாதைகளாக வாழ்கின்றனர் என்பதை அறிந்தேன். அதேபோல் உலகெங்கிலும், 8 கோடிக்கும் அதிகமான குழந்தைகள் அனாதைகளாக வாழ்கின்றனர் என்பதையும் அறிந்துகொண்டேன். இவ்வளவு பெரிய கொடுமையை என்னால் எப்படி தீர்க்கமுடியும் என்று மலைத்து நின்றேன். மற்றொரு நாள், ஹீமா (Hima) என்ற 7 வயது சிறுமியைச் சந்தித்தேன். அச்சிறுமி, சாலையின் ஓரத்தில் கல்லுடைத்துக் கொண்டிருந்தாள். என்னைக் கண்டதும் அழகியப் புன்சிரிப்புடன் என்னை வாழ்த்தினாள். அவளும் அனாதை என்பதை அறிந்தேன். அத்தருணத்தில், எனக்குள் ஒரு தீர்மானம் உருவானது. உலகில் வாழும் 8 கோடி அனாதைக் குழந்தைகளுக்கு என்னால் எதுவும் செய்ய இயலாமல் போகலாம். ஆனால், இந்த ஒரு குழந்தையின் வாழ்வில் என்னால் மாற்றத்தை உருவாக்க முடியும் என்று முடிவெடுத்தேன்." இத்தீர்மானத்துடன், இளம்பெண் மேகி அவர்கள் தன் பணிகளைத் தொடங்கினார்.

தான் வங்கியில் சேமித்து வைத்திருந்த 5000 டாலர்களைக் கொண்டு, நேபாளத்தின் கோப்பிலா (Kopila) பள்ளத்தாக்கில் ஓர் இடத்தை வாங்கினார். 5 ஆண்டுகளில், அவ்விடத்தில் ஒரு குழந்தைகள் காப்பகத்தையும், பள்ளியையும் உருவாக்கினார்.

# நாவிற்கு விருந்தளிக்க!



## கிறிஸ்மஸ் ஸ்பெஷல் ஃபுரூட் கேக்

### தேவையானவை:

**கேரமலுக்கு**

சர்க்கரை - 1 கப் தண்ணீர் - 1 கப்

**கேக்கிற்கு**

மைதா - 2 1/2 கப்
இன்ஸ்டன்ட் காபி தூள் - 1 டீஸ்பூன்
பேக்கிங் பவுடர் - 2 டீஸ்பூன்
பட்டை தூள் - 1 டீஸ்பூன்
கிராம்பு தூள் - 1 டீஸ்பூன்
ஏலக்காய் பொடி - 1/2 டீஸ்பூன்
ஜாதிக்காய் பொடி - 1/2 டீஸ்பூன்
உப்பு - 1/4 டீஸ்பூன்
உப்பில்லாத வெண்ணெய் - 1 கப்
நாட்டுச்சர்க்கரை - 1 1/2 கப்
முட்டை - 5
வென்னிலா எசன்ஸ் - 2 டீஸ்பூன்
கேரமல் - 1 கப்
ரம் மற்றும் பிராந்தியில் ஊற வைத்த பழங்கள் - 3 கப்
ரம் - 5 டீஸ்பூன்

### கேரமல் செய்முறை :

முதலில் ஒரு வாணலியில் சர்க்கரையைப் போட்டு, அடுப்பில் வைத்து சர்க்கரை கரைய வைக்க வேண்டும். குறிப்பாக இந்நிலையில் கரண்டியைப் பயன்படுத்த வேண்டாம். சர்க்கரையானது நன்கு கரைந்து பொன்னிறமாகும் வரை அடுப்பில் வைக்க வேண்டும். சர்க்கரை அடிப் பிடிக்காமல் பார்த்து கவனமாக செய்ய வேண்டும்.

சர்க்கரையானது கரைந்து பொன்னிறமான பின்னர், அதனை அடுப்பில் இருந்து இறக்கி, அதில் சிறிது தண்ணீர் ஊற்றி, பின் கரண்டி கொண்டு கிளறி, மீண்டும் அடுப்பில் வைத்து, ஒரு நிமிடம் கிளறி இறக்கி கலவையை குளிர வைக்கவேண்டும்.

### கேக் செய்முறை :

முதலில் ஓவனை 160 டிகிரி செல்சியஸில் சூடேற்றிக் கொள்ள வேண்டும். பின்னர் 2, 82



இன்ச் பேனில் சிறிது வெண்ணெய் தடவிக் கொள்ள வேண்டும்.

அடுத்து ஒரு பௌலில் மைதா, கோபி பவுடர், பேக்கிங் பவுடர், ஏலக்காய் பொடி, பட்டை தூள், கிராம்பு தூள், ஜாதிக்காய் பொடி மற்றும் உப்பு போட்டுக் கொள்ள வேண்டும். பின்பு மற்றொரு பௌலில் வெண்ணெய் மற்றும் சர்க்கரை சேர்த்த, எலெக்ட்ரிக் பீட்டர் கொண்டு நன்கு 5 நிமிடம் மென்மையாகும் வரை அடித்துக் கொள்ள வேண்டும்.

அடுத்து அதில் முட்டையை ஒவ்வொன்றாக உடைத்து ஊற்றி நன்கு அடிக்க வேண்டும். பின் வென்னிலா எசன்ஸ் மற்றும் குளிர வைத்துள்ள கேரமல் சேர்த்து நன்கு கிளறிவிட வேண்டும்.

பிறகு அதில் மைதா கலவையை கட்டி சேராதவாறு கொஞ்சம் கொஞ்சமாக கலந்து சேர்த்து கிளறி விட வேண்டும். பின் ஊற வைத்துள்ள பழங்களை சேர்த்து கிளறி, பேக்கிங் செய்யக்கூடிய பேனில் ஊற்ற வேண்டும்.இறுதியில் அதனை ஓவனில் வைத்து, 1 மணிநேரம் பேக் செய்ய வேண்டும். இவ்வளவு 1 நேரம் பேக் செய்த பின்னர், அதனை திறந்து ஒரு டூத்பிக் கொண்டு குத்தி பார்க்கும்போது, அதில் மாவு ஒட்டியிருந்தால், மீண்டும் பேக் செய்ய வேண்டும்.

பின்னர் அதனை ஓவனில் இருந்து வெளியே எடுத்து குளிர வைத்து, பின் பேனில் இருந்து ஒரு தட்டிற்கு மாற்ற வேண்டும். பின் கேக்கின் ஆங்காங்கு லேசான ஓட்டைகளைப் போட்டு, கேக்கின் மேல் ரம்மை தெளித்துவிட்டு, காற்றுப்புகாத ஒரு டப்பாவில் போட்டு வைத்து, 2-3 நாட்கள் கழித்து சாப்பிட்டால் சூப்பராக இருக்கும்.

**கிறிஸ்துமஸ் ஸ்பெஷல் ஃபுரூட் கேக் ரெடி.**

### தேவையானவை:

கடலை மாவு-1 கப்
சீனி-2 கப், நெய்-3கப்
சமையல் சோடா-1 சிட்டிகை
தண்ணீர்-1கப்
பால் - 1 மேசை கரண்டி

## மைசூர் பாக்



### செய்முறை:

கடலைமாவை சலித்து, சிறிது நெய்விட்டு வாசம் வரும்வரை வருக்கவும். பின் தனியாக ஆறவிடவும், ஒரு அடுப்பில் நெய்யை சிறிய தீயில் காய்ச்சவும், அடுத்த அடுப்பில் அடி கனமான பாத்திரத்தில் சீனி மூழ்கும் வரை தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். கொதித்து வந்தவுடன் பாலை ஊற்றவும் சீனியில் உள்ள அழுக்கு வரும், அதைத் தனியாக கரண்டியால் நீக்கவும், கம்பிபதம் வரும்வரை காய்ச்சவும், பதம் வந்தவுடன் சிறிது, சிறிதாக மாவை சேர்க்கவும், கட்டி வராமல் சேர்க்கவும், நெய்யையும் சிறிது, சிறிதாக ஒரு கரண்டியால் சுற்றி சேர்க்கவும், விடாமல் கிளறி வரவேண்டும் சிறிது நேரத்தில் நெய் பொங்கிவரும் அதுதான் சரியான பதம், சிறிது சமையல் சோடா சேர்த்து கிளறி, ஒரு நெய் தடவிய தட்டில் கொட்டி சிறிது நேரத்தில் வெட்டவும்.

## கமகமக்கும் பஞ்சாபி சிக்கன் பிரியாணி



### தேவையான பொருட்கள்

இஞ்சி - 2 அங்குலம்
பூண்டு - 6 பல்
சின்ன வெங்காயம் - 125 கிராம்
தயிர் - 225 கிராம்
சீரகம் - 1 மேஜைக்கரண்டி
பிரியாணி இலை - சிறு துண்டு
முந்திரி பருப்பு - 15 கிராம்
பாதாம்பருப்பு - 15 கிராம்
சாரப் பருப்பு - 15 கிராம்
பிஸ்தா பருப்பு - 15 கிராம்
திராட்சை - 15 கிராம்
கோழித் துண்டுகள் - 125 கிராம்
உப்பு - தேவையான அளவு
சமையல் எண்ணெய் - தேவையான அளவு
பட்டை - சிறிது
ஏலக்காய் - சிறிது
கிராம்பு - சிறிது
பாசுமதி அரிசி - 2 கப்

### செய்முறை:

2 அங்குலம் இஞ்சி, 6 பல் பூண்டு, 125 கிராம் சின்ன வெங்காயம் இவற்றை அரைத்துக் கொள்ளவும். 225 கிராம் தயிரை நன்கு கடைந்து கொள்ளவும். 1 மேஜைக்கரண்டி சீரகத்தை வறுத்து அரைத்துக் கொள்ளவும். பிரியாணி இலை ஒன்றைத் துண்டுகளாக்கிக் கொள்ளவும்.

முந்திரி பருப்பு, பாதாம் பருப்பு, சாரப் பருப்பு (சாரோலி), பிஸ்தா பருப்பு, திராட்சை ஆகியவற்றை ஒவ்வொன்றிலும் 15 கிராம் எடுத்து நெய்யில் வறுத்துக் கொள்ளவும்.

அரைத்த மசாலாவைத் தயிருடன் கலந்து, இதில் சுத்தம் செய்த கோழித் துண்டுகள் 125 கிராம், உப்புத்தூள் இவற்றையும் கலந்து 4 மணி நேரம் அப்படியே ஊற விடவும்.

அதன் பின் ஒரு கனமானப் பாத்திரத்தில் சமையல் எண்ணெய் 100 கிராம் ஊற்றி, காய்ந்ததும், 1/2 அங்குலம் பட்டை, பெரிய கறுப்பு ஏலக்காய் விதைகள் 1 மேஜைக்கரண்டி, 4 கிராம்பு, துண்டுகளாக்கிய பிரியாணி இலை, 2 தேக்கரண்டி மிளகாய்த்தூள் இவற்றைப் போட்டு வதங்கியதும், ஊற வைத்தக் கோழிக்கறி மசாலாவைச் சேர்த்து வாணலியை மூடி வைக்கவும்.

கறி வெந்து, மசாலா நன்கு வற்றி, எண்ணெய் பிரிந்ததும் இறக்கிக் கொள்ளவும். அடி கனமானப் பாத்திரத்தில் 4 கப் தண்ணீர் ஊற்றி கொதித்ததும், 2 கப் பாஸ்மதி அரிசியைப் போட்டு, தேவையான அளவு உப்பு சேர்த்து மிதமான தீயில் உதிர் உதிராக வேக வைத்து இறக்கவும் பின் இதனை 3 பாகங்களாகப் பிரித்துக் கொள்ளவும். ஒவ்வொரு பாகத்திலும் சிகப்பு, மஞ்சள், பச்சை கலர் கலந்து கொள்ளவும்.

அடி கனமானப் பாத்திரத்தில் 1 தேக்கரண்டி நெய் தடவி, ஒரு பாகம் சாதம், அதன் மீது கோழித்துண்டுகள், அதன் மீது மற்றொரு பாகம் சாதம், அதன் மீது கோழித்துண்டுகள் என மூன்று பாகமாக ஒன்றன் மீது ஒன்றாக வைத்து, மிதமான தீயில் 3 நிமிடங்கள் வைத்து இறக்கவும். மேல் பாகத்தில் பருப்பு வகைகளை தூவி, அதன் மீது வெள்ளி ஜரிகைத் தாள்களைப் போட்டு அலங்கரிக்கவும்.

# உலக மீன்பிடித்தொழில் நாள்

## கார்த்திகை 21



## மீன்பிடித்தொழிலாளர் நலனில் திருப்பீடத்தின் 100 ஆண்டு அக்கறை

**உலகெங்கும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள 5 கோடியே 80 இலட்சம் மக்களின் தொழிலுக்கு உரிய மாண்பும், அங்கீகாரமும் வழங்கப்படவேண்டும்**

கடல் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டிருப்போர் மீது, கடந்த 100 ஆண்டுகளுக்கும் மேலாக திருப்பீடம் அக்கறை காட்டிவருகிறது என்றும், குறிப்பாக, 1957ம் ஆண்டு முதல் இந்த அக்கறை, திருப்பீடத்தின் ஒரு முக்கியப் பணியாக உருவெடுத்துள்ளது என்றும் திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் பன்னாட்டு கருத்தரங்கில் உரையாற்றினார்.

கார்த்திகை 21, புதனன்று உலக மீன்பிடித்தொழில் நாள் கடைபிடிக்கப்பட்டதையடுத்து, உரோம் நகரின் உணவு வேளாண்மை நிறுவனமான FAO தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஒரு பன்னாட்டு கருத்தரங்கில், பன்னாட்டு உறவுகள் திருப்பீட அவையின் செயலர், பேராயர் பால் ரிச்சர்ட் காலகர் அவர்கள் வழங்கிய உரையில் இவ்வாறு கூறினார்.

மனிதர்களுக்குரிய அடிப்படை உரிமைகளில் ஒன்றாக, தொழில் உரிமையும் உண்டு என்பதை வலியுறுத்தும்வண்ணம் இவ்வாண்டு நடைபெறும் கருத்தரங்கின் மையக்கருத்து அமைந்துள்ளது குறித்து, பேராயர் காலகர் அவர்கள் தன் பாராட்டுக்களை வெளியிட்டார்.

2016ம் ஆண்டு வெளியான ஒரு புள்ளிவிவரத்தின்படி, அவ்வாண்டு, 17 கொடியே 10 இலட்சம் டன்கள் என்ற அளவில் மீன்கள் உற்பத்தி செய்யப்பட்டன என்றும், அவற்றில், 88 விழுக்காட்டு மீன்கள், மக்களின் உணவாக மாறின என்றும் தன் உரையில் சுட்டிக்காட்டிய பேராயர் காலகர் அவர்கள், இந்த புள்ளி விவரங்கள், வெறும் பொருளாதாரத்தை மட்டுமல்ல, மாறாக, மக்களின் உணவுத் தேவையையும் வெளிச்சமிட்டு காட்டுகின்றன என்று கூறினார்.

உலகெங்கும் 5 கோடியே 80 இலட்சம் மக்கள் மீன்பிடித்தொழிலில் முழு நேரமாகவும், பகுதி நேரமாகவும் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை எடுத்துரைத்த பேராயர் காலகர் அவர்கள், இத்தொழிலுக்கு உரிய மாண்பும், அங்கீகாரமும் வழங்கப்படவேண்டும் என்ற விண்ணப்பத்தையும் தன் உரையில் முன்வைத்தார்.

மீன்பிடித்தொழிலை, பொருளாதார, வர்த்தக கண்ணோட்டங்களில் மட்டும் காண்பதை தவிர்த்து, இதனை, மனித உரிமைகள் என்ற கண்ணோட்டத்துடன் காண்பது இன்றையத் தேவை என்றும், குறிப்பாக, அடிப்படை மனித உரிமைகளின் அறிக்கை வெளியிடப்பட்ட 70ம் ஆண்டில் இந்தக் கண்ணோட்டம் அவசியம் என்றும் பேராயர் காலகர் அவர்கள் தன் உரையில் வலியுறுத்தினார்.

## உலக மீன்பிடித்தொழில் நாளுக்கு கர்தினால் டர்க்சன் செய்தி

**உலகெங்கும் 320 கோடி மக்களுக்கு உணவளிக்கும் மீன்பிடித்தொழில் துறையில், கட்டாயத் தொழில், மனித விற்பனை ஆகிய கொடுமைகள் நிகழ்கின்றன – கர்தினால் பீட்டர் டர்க்சன்**

பகுதி நேரமாகவும், சிறிய அளவிலும் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள மக்களில், 85 விழுக்காட்டினர் ஆசியர்கள் என்றும், இவர்களில் 14 விழுக்காட்டினர் பெண்கள் என்றும் திருப்பீட உயர் அதிகாரி ஒருவர் விடுத்துள்ள ஒரு செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

உலக மீன்பிடித்தொழில் நாளன்று, ஒருங்கிணைந்த மனித முன்னேற்ற திருப்பீட அவையின் தலைவர், கர்தினால் பீட்டர் டர்க்சன் அவர்கள் வெளியிட்டுள்ள ஒரு செய்தியில், 1997ம் ஆண்டு, நவம்பர் 21ம் தேதி, இந்த உலக நாள், புது டில்லியில் முதல் முறை சிறப்பிக்கப்பட்டதை நினைவுகூர்ந்துள்ளார்.

2016ம் ஆண்டு திரட்டப்பட்ட ஒரு புள்ளிவிவரத்தின் படி, உலகில் சிறிய அளவில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கை 5 கோடியே 96 இலட்சம் என்றும், அவர்கள் முயற்சியால், 17 கோடியே 10 இலட்சம் டன் எடையுள்ள மீன்கள் உலக சந்தையில் விற்பனை செய்யப்பட்டு, அதன் பயனாக, 32,000 கோடி அமெரிக்க டாலர்கள் ஈட்டப்படுகின்றன என்றும், கர்தினால் டர்க்சன் அவர்களின் செய்தி கூறுகிறது.

உலகெங்கும் 320 கோடி மக்களுக்கு உணவளிக்கும் இந்த மீன்பிடித்தொழில் துறையில், கட்டாயத் தொழில், மனித விற்பனை ஆகிய கொடுமைகள் நிகழ்கின்றன என்றும், கர்தினால் டர்க்சன் அவர்கள் தன் செய்தியில் சுட்டிக்காட்டியுள்ளார்.

மனித உரிமைகள் குறித்த உலகளாவிய அறிக்கை வெளியிடப்பட்ட 70ம் ஆண்டு நிறைவு நடைபெறும் இவ்வாண்டில், கடல் சார்ந்த வாழ்க்கை நடத்தும் பல கோடி மக்களின் அடிப்படை உரிமைகள் பலவாறாக பறிக்கப்பட்டுள்ளன என்பதை கர்தினால் டர்க்சன் அவர்களின் செய்தி குறிப்பிட்டுள்ளது.

பொருளாதாரத்தையும், இலாபத்தையும் முன்னிறுத்தி நடத்தப்படும் தொழில்கள், வர்த்தகம் அனைத்திலும், அத்தொழில்களை ஆற்றும் மனிதர்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டு, மறக்கப்பட்டு வருகின்றனர் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறிய கருத்தை, கர்தினால் டர்க்சன் அவர்கள் தன் செய்தியில் எடுத்துரைத்துள்ளார்.

மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டுள்ள பன்னாட்டு நிறுவனங்கள், கடல் வளங்களை அழித்தல், தங்கள் நாட்டு எல்லைகளைத் தாண்டி மீன்பிடித்தல், தொழிலாளர்களின் உரிமைகளைப் பறித்தல் போன்ற பல குற்றங்களுக்கு காரணமாக அமைந்துள்ளனர் என்பதை, கர்தினால் டர்க்சன் அவர்கள் தன் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.




## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“உங்களுக்கு வசதிப்படும் காலம்வரை மட்டுமே அன்பு கூர்பவர்களாக நீங்கள் இருக்க முடியாது. ஒருவரின் சுயநலத் தேவைகளைத் தாண்டியதாகவும், எவ்விதக் கட்டுப்பாடுகளும் அற்றதாகவும் இருக்கும்போதுதான், அன்பு வெளிப்படுத்தப்படுகின்றது”

“பிரமாணிக்கமாக இருப்பது, சுதந்திரமான, பக்குவம் அடைந்த மற்றும் பொறுப்புள்ள மனித உறவுகளை வெளிப்படுத்தும் பண்பாகும்”

”அரச மரியாதையுடன் விண்ணகத்திக்கு அழைத்துச் செல்லும் சாலையான பணியின் வழியில், இயேசுவை மகிழ்வுடன் பின்பற்ற, கன்னி மரியா நமக்கு உதவி செய்வாராக”

”கடவுளின் பார்வையில், மனித வாழ்க்கை விலைமதிப்பற்றது, புனிதமானது மற்றும் ஒருபோதும் துன்புறுத்தப்படக்கூடாதது. யாரும் தங்கள் சொந்த உயிரையோ, பிறரது உயிர்களையோ அவமதிக்கக்கூடாது”

“இறையழைத்தலும், தெளிந்து தேர்தலும், தூய ஆவியாரின் மிகச் சிறந்த வேலையாகும், இளையோர் மற்றும் அவர்களுக்குப் பயிற்சியளிப்போரின் ஒத்துழைப்பு, இதற்கு அவசியம்”



## 5 வயதுக்குட்பட்ட சிறாரில் ஐந்து வினாடிக்கு ஒருவர் மரணம்

**ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் இறப்பைத் தடுப்பதற்கு உடனடி நடவடிக்கை எடுக்கப்படவில்லையெனில், 2030ம் ஆண்டுக்குள் 5 கோடியே 60 இலட்சம் குழந்தைகள் இறக்கக்கூடும் – ஐ.நா.**

உலகில் 15 வயதுக்குட்பட்ட சிறாரில் ஒவ்வொரு ஐந்து வினாடிக்கு ஒருவர் இறக்கின்றனர் என்றும், கடந்த 2017ம் ஆண்டில் 63 இலட்சம் சிறார் இறந்துள்ளனர் என்றும், இந்த இறப்புகள் தடுக்கவல்ல நோய்களால் இடம்பெறுகின்றன என்றும் ஐ.நா. நிறுவனங்கள் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

இந்த இறப்புகளில் ஏறத்தாழ 54 இலட்சம் சிறார், ஐந்து வயதுக்குட்பட்டவர்கள் என்றும் கூறும், ஐ.நா.வின் யுனிசெப் அமைப்பு, உலக நல்வாழ்வு நிறுவனம், மக்கள்தொகை கட்டுப்பாடு அமைப்பு மற்றும் உலக வங்கி குழுக்கள், 2017ம் ஆண்டில் 25 இலட்சம் குழந்தைகள், பிறந்த முதல் மாதத்திலேயே இறந்துள்ளனர் என்றும் தெரிவிக்கின்றன.

ஐந்து வயதுக்குட்பட்ட சிறாரின் இறப்புக்கு ஊட்டச்சத்துப் பற்றாக்குறையே முக்கிய காரணம் எனவும், உலகில் இருபது கோடிச் சிறார் சத்துணவு கிடைக்காமல் துன்புறுகின்றனர் எனவும், ஐ.நா. அறிக்கை கூறுகின்றது.

உலக அளவில், 13க்கும் 15 வயதுக்கும் உட்பட்ட சிறாரில், மூவருக்கு ஒருவர் குண்டுகளுக்குப் பலியாகின்றனர் எனவும், அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# பிலிப்பைன்ஸ் கத்தோலிக்கர் : 2019

## இளையோர் ஆண்டு

***வத்திக்கானில் இளையோர் பற்றிய உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெற்றதையடுத்து, பிலிப்பைன்ஸ் ஆயர்கள், 2019ம் ஆண்டை இளையோர்க்கென அர்ப்பணித்துள்ளனர்***

பிலிப்பைன்ஸ் நாட்டில் 2019ம் ஆண்டை இளையோர் ஆண்டாகச் சிறப்பிக்கத் தீர்மானித்துள்ளது, அந்நாட்டு கத்தோலிக்க ஆயர் பேரவை.

பிலிப்பைன்ஸ் நாட்டில் கிறிஸ்தவம் விதைக்கப்பட்டதன் 500ம் ஆண்டை முன்னிட்டு சிறப்பிக்கப்பட்டுவரும் ஒன்பது சிறப்பு ஆண்டுகளின் வரிசையில், ஏழாவது சிறப்பு ஆண்டாகிய, 2019ம் ஆண்டை இளையோர் ஆண்டாகச் சிறப்பிக்கவுள்ளதாக அறிவித்துள்ளனர், அந்நாட்டு ஆயர்கள்.

இந்த இளையோர் ஆண்டு, திருவருகை காலத்தின் முதல் ஞாயிறாகிய மார்கழி 2ம் திகதி ஆரம்பமாகி, 2019ம் ஆண்டு கார்த்திகை 24ம் திகதி கிறிஸ்து அரசர் பெருவிழாவன்று நிறைவடையும் என்றும், ஆயர்கள் அறிவித்துள்ளனர்.



மேலும்,

***"மறைப்பணியில் பிலிப்பைன்ஸ் இளையோர் : அன்புடையோர், திறமையுடையோர், வலுவுடையோர்"***

என்ற தலைப்பில், இந்த இளையோர் ஆண்டு சிறப்பிக்கப்படும் எனவும் ஆயர்களின் அறிக்கை கூறுகின்றது.

பிலிப்பைன்ஸ் ஆயர் பேரவை, 2013ம் ஆண்டில் இந்த ஒன்பது சிறப்பு ஆண்டு கொண்டாட்டத்தைத் தொடங்கினர். ஒவ்வோர் ஆண்டும் ஒரு தலைப்பில் சிறப்பிக்கப்பட்டுவரும் இந்தக் கொண்டாட்டங்கள் 2021ம் ஆண்டு நிறைவடையும்.

# திருவருகைக்கால மலர் வளைய செப வழிபாடு





இம்மலர் வளையத்தை ஆசீர்வதித்து திருவருகைக் கால தொடக்க நாளில் செபவழிபாடு ஆரம்பிக்கப்பட்டு, கிறிஸ்து பிறப்பு காலம் வரையும் சொல்லப்படவேண்டும். அதாவது இந்த நான்கு வாரமும், குடும்பத்தில், பங்கில் உள்ள அனைவரையும், கிறிஸ்துவை நோக்கி மனமாற்ற ஓர் ஆன்மீகத் தயாரிப்பு ஆகும். குடும்பங்களை அர்த்தமுள்ள விதத்தில் கிறிஸ்து பிறப்பை கொண்டாட இது உதவுகிறது. ஒருவர் அதன் புகழுரையையும், இன்னொருவர் இறைவார்த்தை மற்றும், சிறிய சிந்தனையையும் மூன்றாமவர் இறுதிச் செபத்தையும் சொல்லலாம். இந்த சிறப்பான திருவருகைக்கால புகழுரை திருவருகைக் காலத்தை அர்த்தமுள்ள காலமாக மாற்றுவதோடு இறையருளைப் பெற்றுத் தருகிறது.

### திருவருகைக் கால வளைய மந்திரிப்பு

ஒவ்வொரு வாரமும், மெழுகுதிரி ஏற்றும்போது இச்செபம் சொல்லப்பட வேண்டும். குழந்தைகள் இதில் பங்கேற்பது நல்லது. இந்த செபத்தை மெழுகுத்திரி ஏற்றும்போது சொல்ல வேண்டும். பெற்றோர் செபம் சொல்ல குழந்தைகள் பதில் மொழி சொல்லலாம்.

### செப வழிபாட்டுக்கான செபம்

| | |
|---|---|
| பெற்றோர் / தலைவர் | :- தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே ..... |
| குழந்தைகள் | :- ஆமென். |
| பெற்றோர் / தலைவர் | :- இறைவா உலகின் ஒளி நீரே. |
| குழந்தைகள் | :- ஓ இம்மானுவேலே வாரும். |
| பெற்றோர் / தலைவர் | :- வாக்குறுதியின், அருளின் ஆண்டவரே உம்முடைய மீட்பின் திட்டத்தை எதிர்நோக்கி விழிப்போடு காத்திருந்து செபிக்கிறோம். உம்முடைய வார்த்தையின் படியே நடந்து உம் அன்பில் என்றும் வாழ வரமருளும். |
| குழந்தைகள் | :- ஓ இம்மானுவேலே வாரும். |
| பெற்றோர் / தலைவர் | :- உம் அன்பின் ஒளி எங்கள் இதயங்களில் என்றும் ஒளிர்வதாக. |
| குழந்தைகள் | :- ஆமென். |

### மார்கழி 02

#### திருவருகைக்கால முதல் வாரம்

- முதல் திரியை ஏற்றவும்
- செபத்தை சொல்லுதல்
- வாசகங்கள் (அன்றைய வாசகம்)

#### இறுதிச் செபம்:-

ஆண்டவரே வல்லமையோடு விரைந்து வாரும். எங்கள் பாவங்களை முன்னிட்டு நெருங்கி வாரும். ஆபத்துகளிலிருந்து உமது அருள் காப்பால் பாதுகாக்கப்பெற்று நீர் அருளும் விடுதலையால் நாங்கள் மீட்பைக் காண்போம். எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### மார்கழி 09

#### திருவருகைக்கால இரண்டாம் வாரம்

- இரண்டாம் திரியை ஏற்றுக.
- மேலே தரப்பட்டுள்ள செபத்தையே சொல்லவும்.
- வாசகங்கள்:- (அன்றைய வாசகம்)

#### இறுதிச் செபம்

ஆண்டவரே உம் ஒரே திருமகனின் வழிகளைத் தயாரிக்க, எங்கள் இதயத்தைத் தூய்மையாக்கப்பட்ட மனத்துடன் அவரது வருகையால் நாங்கள் தகுதி பெறுவோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### மார்கழி 16

#### திருவருகைக் கால 3ஆம் ஞாயிறு

- மூன்றாம் திரியை ஏற்றி செபத்தை சொல்லவும்
- வாசகங்கள் (அன்றைய வாசகம்)

#### இறுதிச் செபம்

ஆண்டரே எங்கள் குரலுக்கு பரிவிரக்கமுடன் செவிசாய்க்க உம்மை வேண்டுகின்றோம். எங்களைச் சந்திக்க வருகின்ற உம் திருமகனின் அருள் இருளடைந்த எங்கள் இதயங்களை ஒளிர்விப்பதாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### மார்கழி 23

#### திருவருகைக்கால 4ஆம் ஞாயிறு

- நான்காம் மெழுகுத் திரியை ஏற்றி செபத்தைச் சொல்லவும்
- வாசகங்கள் (அன்றைய வாசகம்)

#### இறுதிச் செபம்

ஆண்டவரே இயேசுவே காலம் தாழ்த்தாது விரைந்து வர உம்மை வேண்டுகின்றோம். அதனால் உமது பரிவிரக்கத்தில் நம்பிக்கை கொள்வோர் உமது வருகையின் ஆறுதலால் தேற்றப்படுவார்களாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

### மார்கழி 30

#### கிறிஸ்து பிறப்பு விழா

- நான்கு வார திரியையும் ஏற்றி நான்கு வார செபங்களையும் செபிக்கவும்.
- நடுவில் உள்ள வெள்ளை நிற மெழுகுதிரியையும் ஏற்றவும்.
- வாசனங்கள் (அன்றைய வாசகம்)

#### இறுதிச் செபம்.

எல்லாம் வல்ல அன்புத் தந்தையே இறைவா? உமது மாட்சியின் பேரொளி எங்கள் உள்ளங்களில் உதித்தெழுவதாக. அதனால் காரிருள் படர்ந்த இரவின் ஆட்சி நீக்கப்பட்டு உம் ஒரே திருமகனின் வருகை எங்களை ஒளியின் மக்களாக மாற்றி இறை விழிப்போடு காத்திருக்கும் நம்பிக்கை யாளர்களுக்கு கொண்டு செல்வோமாக. எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம். ஆமென்



# உங்கள் செபம் கேட்கப்பட்டதா?



**நான் ஆண்டவரிடம் பொறுமைக்காக மன்றாடினேன்,**

அவரோ எனக்கு நெருக்கடியைத் தந்தார்.

காரணம் நெருக்கடியானச் சூழலில் நான் பொறுமையைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக (உரோ. 53:5)

**நான் ஆண்டவரிடம் கீழ்ப்படிதலுக்காக மன்றாடினேன்.**

அவரோ எனக்குத் துன்பங்களை அனுப்பினார்.

காரணம் துன்பங்கள் வழியாக நான் கீழ்ப்படிதலைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக (எபி 5:8)

**நான் ஆண்டவரிடம் தன்னமலமற்ற அன்புக்காக மன்றாடினேன்,**

அவரோ நான் பிறரின் தேவைகளை உணர்ந்து தியாகம் செய்ய வேண்டும் என்பதற்கான வாய்ப்புக்களைக் கொடுத்தார். (பிலி. 2:4)

சாதாரண வாய்ப்புகள் வழியாக தன்னலம் துறக்க வேண்டும் என்பதற்காக,

**நான் ஆண்டவரிடம் வெற்றியையும் பாராட்டுதலையும் கேட்டேன்.**

அவரோ சோதனை வேளையில் உலகத்தில் இருப்பவற்றைக் கொண்டு என்னை ஒன்றுமில்லாமல் ஆக்கினார்.

காரணம் வெற்றியின் பாதையை இயேசுவின் வழிநின்று கற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக (1யோவா. 5:4).

**நான் ஆண்டவரிடம் ஆற்றலுக்காகவும் தாழ்ச்சிக்காகவும் மன்றாடினேன்.**

அவரோ என்னை இழிவுபடுத்த பலரையும் அனுப்பிவைத்தார்.

காரணம் நான் என் பலவீனத்தை அறிந்து கொண்டு அவரில் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதற்காக (2கொரி. 12:7)

**நான் ஆண்டவரிடம் அன்பைக் கேட்டேன், அவரோ துன்பங்களை அனுப்பினார்.**

அன்பற்றவர்கள் மத்தியில் வாழச் செய்யவும் அவர்களின் விமர்சனம் என்னைச் சுட்டெரிக்கவும் செய்தார்.

காரணம் நான் அன்பின் பொருள்புரிந்து - அன்பு பொறுமையுள்ளது, பரிவுள்ளது என்றுகற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக (1கொரி. 13:4-8).

# விவிலிய வாசிப்பு

## பழைய ஏற்பாடு




**படைப்பில் அழகியல்**

அழகியல் (Aesthetics) என்னும் சொல் விவிலியத்தில் எடுத்தாளப்படவில்லை. இன்று நாம் அழகியல் என்று கூறுகின்ற பல கருத்துக்கள் விவிலியக் காலங்களில் இல்லை. ஆனால் விவிலியம் தனக்கே உரிய வகையில் அழகியல் பற்றிய புரிந்துணர்வைக் கொண்டிருந்தது. அவற்றை வெளிக்கொணர்வதும், புரிந்து கொள்வதுமே இக்கட்டுரையின் நோக்கம்.

அழகான எனும் சொல் 88 முறையும், அழகு என்பது 65 முறையும், அழகுபடுத்துதல் ஒரு முறையும், அழகுபடுத்த 3 முறையும் விவிலியத்தில் காணப்படுகின்றன. (இந்த எண்ணிக்கைகள் "NRSV" விவிலிய மொழிபெயர்ப்பை அடிப்படையாகக் கொண்டவை) விவிலியக்காலம் சுமார் கி.மு 2000 முதல் கி.பி முதல் நூற்றாண்டு காலம் வரை விரவிக்கிடப்பதால் விவிலியத்தில் அழகியல் பற்றி ஓர் ஒத்தக்கருத்து கொள்வது என்பது இயலாத, முடியாத ஒன்று,

ஆலய அழகு : திபா 48:2, எசா 64:11

இயற்கை அழகு : எரே 3:19

தனிநபர் அழகு : தொ.நூ 12:14, 29:17; இ.ச 21:11; 1சாமு 16:12; 25:3; 2சாமு 11:2; 13:1; 14:27; 1அர 1:3,4; எஸ்தர் 2:2,3,7; யோபு 42:15

என இத்தலைப்பு விரிந்து கிடப்பதாலும் அவை அனைத்தையும் இங்கு தொகுத்துத் தருவதும் இமாலயப் பணி என்பதாலும் விவிலியத்தின் முதல் நூலான தொடக்க நூலின் முதல் இரு அதிகாரத்தில் அழகியல் எவ்வாறு நோக்கப்படுகிறது, விளக்கப்படுகிறது என்பதை மட்டும் இங்கு விளக்க முனைவோம்.

### I. சொல்லும் பொருளும்.

எபிரேயத்தில் யாவே என்னும் சொல் அழகைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது. (காண் : தொ.நூ 12:14; 39:6; 1சாமு 16:12; 17:42; 2சாமு 13:1;14:25; 1அர 1:3,4; தி.பா 48:3; நீமொ 11:22) அதோடு கூட நல்ல என்னும் பொருள்படும் தொபு என்னும் எபிரேயச் சொல்லும் அழகைக் குறிப்பதாகக் கொள்ளலாம். (காண். தொ.நூ 1:4,10,12,18,21,25,31; 2:9,12,17,18; 3:5,22; 24:10,50). இந்தச் சொல் பழைய ஏற்பாட்டில் 300 முறைக்கு மேல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (நன்றி. விவிலிய வார்த்தைகள்)

கிரேக்க மொழியில் அழகைக் குறிக்க காலோஸ் என்னும் சொல் பயன்படுத்தப்படுகிறது. இதற்கு குறைந்த பட்சமாக நான்கு விதமான பொருளை அறிஞர்கள் அளிக்கின்றனர்.

- இறைவிருப்பத்திற்கு இயைந்தது (Conformity to God's will)
- படைப்பின் விவரிப்பில் காணப்படும் ஒழுங்குபடுத்தப்பட்ட அழகு (காண் தொ.நூ 1:4,10,12,18,21,25,31).
- ஆகதோஸ் என்னும் கிரேக்கச் சொல்லுக்கு இணையாக அறநெறியில் சிறந்த அல்லது சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பது (காண். எண்.24:11, இ.ச6:18, 2குறி14:1, எசா1:17)
- அன்பான, இனிமையான (தி.பா 135:3, 1மக் 4:24)

விவிலியத்தில் அழகியல் என்பதை மேற்கண்ட புரிந்துணர்வை நோக்கி தொடக்க நூல் 1-2 அதிகாரங்களில் இது எப்படி வெளிப்படுத்தப்படுகிறது என ஆராய்வோம்.

### II. இருவகை படைப்பு விவரிப்புக்கள்

விவிலியத்தில் இருவகையான படைப்பு பற்றிய விவரிப்புகள் காணப்படுகின்றன.

**2.1 குருக்கள் பாரம்பரிய விவரிப்பு (தொ.நூ 1:1-2:4அ)**

இது படைப்பு பற்றிய பொதுவான கருத்துக்களைக் கூறுகிறது. இதில் பல்வேறு பொருட்கள் படிப்படியாக ஆறு நாட்களில் படைக்கப்படுவதாகவும் அதன் உச்சமாக மனிதர் படைக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

**2.2 யாவே பாரம்பரிய விவரிப்பு (தொ.நூ 2:4ஆ-25அ)**

இது ஆணும், பெண்ணும் படைக்கப்பட்ட வரலாற்றை மனிதப் பண்பேற்றல் (Anthropomorphism) என்னும் முறையில் விவரித்து அவர்களின் நல வாழ்வுக்குத் தோட்டமும், பிற வசதிகளும் ஏற்படுத்தி அவர்களுக்கென்று கடமையும், பொறுப்பும் அளிக்கப்படுவதாக அமைந்துள்ளது. இவை இரண்டிலும் அழகியல் மேலே சொன்ன நான்கு வகைகளில் எப்படி மிளிர்கின்றது எனக் காண்போம்.

### III. குருக்கள் பாரம்பரிய விவரிப்பில் அழகியல்

விவிலியம் ஒரு புனித நூலோடு கூட ஓர் அரும் பெருங்காப்பியம். அதன் தொடக்கமே இதை அழகாகக் காட்டுகிறது. விவிலிய ஆசிரியர் உலக படைப்பைப் பற்றி விவரிக்கின்றபோது அதை அமைத்திருக்கின்ற விதம் அற்புதமாக இருக்கின்றது.

**தொடரும்**

# இலங்கைவாழ் கார்மெல் சபையினரின் சுருக்க வரலாறு

### 1. பாதுகை அணியா கார்மெல் அருட்தந்தையர்கள் (OCD)

பெல்ஜியம் நாட்டிலிருந்து பிளான்டர் மாகாணத்தை சார்ந்த கார்மெல் அருட்தந்தையர்கள் முதன் முதலாக 1952ம் ஆண்டு இலங்கை மண்ணில் காலடிபதித்தனர். புனித யூதா திருத்தலம் அமைந்துள்ள இன்டிகோலா (கம்பஹா) என்ற இடத்தில் முதல் இல்லத்தை நிறுவினர். இங்கு 1955-1966ஆம் ஆண்டுவரை வாழ்ந்தனர். பின் மீண்டுமாக, இந்திய நாட்டிலிருந்து தமிழக மாகாணத்தை சார்ந்த அருட்தந்தையர்கள் 2014ம் ஆண்டு இலங்கை மண்ணில் தடம் பதித்தனர். தற்போது 3 இல்லங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

1. கந்தானை, கொழும்பு (28.03.2015)
2. எலிபிடிய, காலி (22.06.2016)
3. கேகாலை, இரத்தினபுரி (17.02.2018)

### 2. பாதுகை அணியா கார்மெல் அருட்சகோதரிகள்.

பேராயர் மார்குஸ் அ.ம.தி அவர்களின் பரிந்துரையின் பேரில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த அருட்சகோதரிகள் முதன் முதலாக 1935ம் ஆண்டு கொழும்பு மாநகரை வந்தடைந்து மட்டக்குளியில் உள்ள கோர்புஸ் கிறிஸ்தி அடைபட்ட கார்மெல் மடத்தை நிறுவினர். 1950ஆம் ஆண்டு கண்டியில் கட்டுகஸ்தோட்ட என்னும் ஊரில் புனித வளனார் துறவு கார்மெல் மடத்தையும், அதனை தொடர்ந்து 1967ஆம் ஆண்டு காலியில் கலேகானா என்ற இடத்தில் மரியாவின் மாசற்ற திருஇருதய கார்மெல் மடத்தையும் நிறுவினர். 1983ம் ஆண்டு கண்டியிலிருந்து எட்டு அருட்சகோதரிகளும், கொழும்பிலிருந்து ஒரு அருட்சகோதரியுமாக பாகிஸ்தான் நாட்டிற்குச் சென்றனர். தற்போது இச்சகோதரிகள் தென் ஆப்பிரிக்காவில் உள்ளனர்.

### 3. அப்போஸ்தலிக்க கார்மெல் அருட்சகோதரிகள்

முத்திப்பேறுபெற்ற அன்னை வெரோணிக்கா 1873ம் ஆண்டு பிரான்ஸ் தேசத்தில் பெயோன்ஸ் என்ற இடத்தில் இச்சபையை நிறுவினார். இலங்கை தேசத்தில் திருகோணமலையில் 1922ம் ஆண்ட மாசி மாதம் 5ம் திகதி இச்சபை காலடிபதித்தது. இன்று 37 துறவு மடங்கள் இலங்கையில் உள்ளது. இச்சபை விரிவடைந்து பாகிஸ்தானில் 1983ம் ஆண்டு நான்கு துறவு இல்லங்களையும் எட்டு பாடசாலைகளையும் நிறுவினர்.

### 4. பாதுகை அணியா கார்மெல் சபை பொதுநிலையினர்

1. மட்டக்குளி : கொழும்பு மாநகரில் உள்ள மட்டக்குளிய கார்மெல் அடைபட்ட அருட்சகோதரி மடத்தை சார்ந்த பொதுநிலையினருக்காக இச்சபை ஐப்பசி 15ம் திகதி 1978ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இன்று 37 உறுப்பினர்களையும், 12 நவதுறவு மற்றும் 2 ஆரம்பநிலை உறுப்பினர்களையும் கொண்டுள்ளது. இவர்கள் கார்மெல் சபையின் தனிவரமாகிய கிறிஸ்துவோடு நெருங்கி வாழும காட்சி தியான வாழ்வை தங்கள் குடும்ப வாழ்வில் பின்பற்றி வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

2. நீர்கொழும்பு : இச்சபையானது 2014ம் ஆண்டு நீர்கொழும்பிலும் விரிவுபடுத்தப்பட்டு 18 தொடக்கநிலை உறுப்பினர்களைக் கொண்டுள்ளது.

பாதுகை அணியா கார்மெல் சபை என்பது கார்மெல் அன்னையின் பெயரால் திருச்சபையில் தொடங்கப்பட்ட பழம்பெரும் சபையாகும். இதன் தனிவரமாக காட்சி தியான வாழ்வையும், அப்போஸ்தலிக்க பணியையும் உள்ளடக்கியது. 13ம் நூற்றாண்டு இஸ்ராயேல் நாட்டின் கார்மெல் மலையிலே தொடங்கிய சபை இன்று உலகம் முழுவதும் பரவி திருச்சபையின் இதயமாக செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

உயிருள்ள கடவுளின்மீது தனியாத ஆர்வமும், ஆழ்ந்த அனுபவமும் கொண்ட எலியா இறைவாக்கினர்தான் கார்மெல் சபையின் ஒப்பற்ற ஆன்மீக தந்தையாக இருக்கின்றார். கிறிஸ்துவின் பிறப்பிற்கு முன் 900 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த இவர் உண்மை கடவுள் மட்டில் எந்த அளவிற்கு ஆர்வமிக்கவராய் இருந்தார் என்பதையும், உண்மை கடவுளை எவ்வாறு உணர்த்தினார் என்பதையும் பழைய ஏற்பாட்டு அரசர் புத்தகத்திலிருந்து அறிய வருகிறோம். இவருடைய தனிமை, மௌனம், செபம் இவைகள் தான் உண்மை இறைவனை அனுபவிக்கவும், அமைதியில் உணரவும் உறுதுணையாக இருந்தது. உண்மை கடவுள் மீது தணியா தாகம் கொண்டவராக இருந்தார்.

திருச்சபையில், சபையில் நிலவிய குழப்பமான சூழலில் 1251ம் ஆண்டு இங்கிலாந்து தேசத்தை சேர்ந்த புனித சைமன் ஸ்டோக் என்ற கார்மெல் துறவிக்கு "உத்தரியம்" என்ற பொக்கிஷத்தை பாதுகாப்பு கவசமாக அன்னை மரியாவின் காட்சி வழியாக தரப்பட்டது. முதன் முதலாக திருச்சபையிலே உத்தரிய பக்தி தொடங்கியது. கார்மெல் அன்னையின் உத்தரியத்தை பக்தியோடு அணிகின்றவர்கள், வாழும்போது தங்கள் வாழ்வில் எதிர்கொள்ளும் துன்பங்களுக்கு பாதுகாப்பாகவும், இறந்தபின் சிறப்பு சலுகையோடு விண்ணகம் செல்வார்கள் என்ற நம்பிக்கை இன்றளவு திருச்சபையிலே நிலவி வருகின்றது. இந்த உத்தரிய பக்தியை பரப்பும் திருப்பணியை கார்மெல் சபை உறுப்பினர்கள் இன்றளவும் தங்கள் தலையாய பணியாக செய்து கொண்டிருக்கிறார்கள்.

16ம் நூற்றாண்டில் நிகழ்ந்த சமூக சமய குழப்பங்கள் மத்தியில் சமுதாயத்திலும், திருச்சபையிலும் பல சீர்திருத்தங்கள் ஏற்பட்டுக்கொண்டிருந்தனர். ஸ்பெயின் தேசத்தை சார்ந்த புனித அவிலா தெரேசாள் கார்மெல் சபையில் பல சீர்திருத்தங்களைச் செய்து அதன் தனிவரமாகிய காட்சிதியான வாழ்வை நிலைநாட்டினார். பல துறவு மடங்களை அருட்சகோதரிகளுக்காக நிறுவினார். புனித சிலுவை யோவானின் துணைகொண்டு, ஆண் துறவிகளுக்கான துறவு மடங்களையும் ஏற்படுத்தினார். இந்த இரண்டு பெரும் புனிதர்கள் தங்கள் ஆன்மீக அறிவாலும், அனுபவத்தாலும், தங்களின் எழுத்துக்களாலும் கார்மெல் சபை உறுப்பினர்களுக்கு மட்டுமல்ல, திருச்சபைக்கும் ஆன்மீக வழிகாட்டிகளாக இருக்கின்றார்கள். ஆன்மீக துறையில் மறைவல்லுநர்கள் என்ற சிறப்பு அங்கீகாரத்தையும் திருச்சபையால் பெற்றவர்கள். இதன் மூலமாக இவர்கள் ஆன்மீக போதனைகள் அனைத்தும் திருச்சபையின் போதனையாகவே பாவிக்கப்படுகிறது. கிறிஸ்தவர் அல்லாதோரும் இவர்களின் இறையனுபவ ஆன்மீக எழுத்துக்களால் ஈர்க்கப்பட்டு கொண்டிருக்கின்றார்கள் என்பது இவர்களின் ஆழமான ஆன்மீக வாழ்வுக்கு சான்று.

எலியா இறைவாக்கினரின் இறையேவுதலால் தொடப்பட்டு, புனித அவிலா தெரசா மற்றும் புனித சிலுவை யோவானால் புதுப்பிக்கப்பட்ட திருச்சபையில் சேர்ந்த புனித குழந்தை தெரசா 24 ஆண்டுகளே வாழ்ந்த நவீன காலத்து பெரும் புனிதர் "சிறிய வழி" என்ற ஆன்மீக அனுபவத்தின் மூலம் பெருமைக்குரிய இந்த பேறுநிலையை அடைந்தார். இன்று இவரும் திருச்சபையில் அங்கீகரிக்கப்பட்ட மறைவல்லுனராக திகழ்கிறார். புனிதத்துவ வாழ்வு என்பது எல்லோராலும், எளிமையாகவும் அடைய முடியும் என்பது இவரின் வாழ்வின் சான்று. சிறிய சிறிய செயல்களை நம்பிக்கைக்கு உரியதாகவும், நேர்மையோடும் செய்தாலே போதும் இறைவனின் அன்பிற்காகவும், பிறர்நலனுக்காகவும் சிறுசிறு தியாகங்களை..

15




அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகஙகள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

## பல்வேறு விதமான சேவைகளும் அதற்கான விலைகளும்



## திருமண சேவைகள்

✦ திருமண விளம்பரங்களுக்கு 1 தொடக்கம் 15 வரையான சொற்களுக்கு ரூபா 600.00உம் அதனைத் தொடர்ந்து வரும் ஒவ்வொரு சொற்க-ளுக்கும் ரூபா 10.00 வீதமும் அறவிடப்படும்.

✦ திருமண விளம்பரங்களை கொடுக்கும்போது கொடுப்பவரது தேசிய அடையாள அட்டை தேவை. எனவே அடையாள அட்டையைக் கொண்டுவரவும்.

**சொற்களின் எண்ணிக்கைகளும், அதற்கான விலைகளும்**

| | | | |
|---|---|---|---|
| 15 | 600/- | 23 | 680/- |
| 16 | 610/- | 24 | 690/- |
| 17 | 620/- | 25 | 700/- |
| 18 | 630/- | 26 | 710/- |
| 19 | 640/- | 27 | 720/- |
| 20 | 650/- | 28 | 730/- |
| 21 | 660/- | 29 | 740/- |
| 22 | 670/- | 30 | 750/- |

உங்களது பிள்ளைகளின் திருமண வரன்களை ஞானஒளியின் மூலம் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்.


## தொடர்புகொள்ளுங்கள்

இயக்குனர் அருட்தந்தை
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை
கொழும்பு – 08.
தொ.பே இல. 0112695984, 0112678106,
0114614927 பெக்ஸ் – 0112692586
E-mail : cgnanaoli@yahoo.com
www.colomboarchdiocesancatholicpress.com


பிறந்தநாள், திருமண ஆண்டு, மரண அறிவித்தல், நினைவுநாள், ஏனைய தேவைகள் போன்ற பலவிதமான விளம்பரங்களுக்கு எம்மை நாடவும்.


## வர்த்தக விளம்பரங்களுக்கான அளவுகளும், விலைகளும்





| அளவுகள் Single Column | விலைகள் 1 ½" width | அளவுகள் Double Column | விலைகள் 3 ½" Width | அளவுகள் Trible Column | விலைகள் 5" Widthd |
|---|---|---|---|---|---|
| 1" SC | 450/- | 1" DC | 900/- | 1" TC | 1,350/- |
| 1 ½" SC | 675/- | 1 ½" DC | 1,350/- | 1 ½" TC | 2,025/- |
| 2" SC | 900/- | 2" DC | 1,800/- | 2" TC | 2,700/- |
| 2 ½" SC | 1,125/- | 2 ½" DC | 2,250/- | 2 ½" TC | 3,375/- |
| 3" SC | 1,350/- | 3" DC | 2,700/- | 3" TC | 4,050/- |
| 3 ½" SC | 1,575/- | 3 ½" DC | 3,150/- | 3 ½" TC | 4,725/- |
| 4" SC | 1,800/- | 4" DC | 3,600/- | 4" TC | 5,400/- |
| 4 ½" SC | 2,025/- | 4 ½" DC | 4,050/- | 4 ½" TC | 6,075/- |
| 5" SC | 2,250/- | 5" DC | 4,500/- | 5" TC | 6,750/- |
| 5½" SC | 2,475/- | 5½" DC | 4,950/- | 5½" TC | 7,425/- |
| 6" SC | 2,700/- | 6" DC | 5,400/- | 6" TC | 8,100/- |
| 6 ½" SC | 2,925/- | 6 ½" DC | 5,850/- | 6 ½" TC | 8,775/- |
| 7" SC | 3,150/- | 7" DC | 6,300/- | 7" TC | 9,450/- |



| பின்பக்கம் (கலர்) | விலை | உட்பக்கம் (கறுப்பு) | விலை |
|---|---|---|---|
| **ஆலய திருவிழா விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 9,000/- | ¼ பக்கம் | 8,500/- |
| ½ பக்கம் | 18,000/- | ½ பக்கம் | 17,000/- |
| முழுப் பக்கம் | 36,000/- | முழுப் பக்கம் | 34,000/- |
| **வர்த்தக விளம்பரங்களுக்கான விலைகள்** | | | |
| ¼ பக்கம் | 16,875/- | ¼ பக்கம் | 12,500/- |
| ½ பக்கம் | 33,750/- | ½ பக்கம் | 25,000/- |
| முழுப் பக்கம் | 67,500/- | முழுப் பக்கம் | 50,000/- |







அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இல. 02 ஞானார்த்த பிரதீப்பய மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்